# தமிழரசு







16.3.1994 ரூ.3

பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்




தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2025

பங்குனித் திங்கள் - 2

மலர்: 24 இதழ்: 18

16-3-1994

விலை: ரூபாய் மூன்று


## இந்த இதழில்...


அனைத்து நிலைகளிலும்
மகளிருக்கு 50 சதவீதம்!
*-சர்வதேச மகளிர் தின விழாவில்*
*மாண்புமிகு முதல்வர்* ... 2

பெண்களுக்குரிய மரியாதை
தரப்பட வேண்டும்!
*-அன்னை தெரசா* ... 7

சர்வதேச மகளிர் மாநாட்டில்
மாண்புமிகு முதல்வர் உரை ... 9

தஞ்சையில் எட்டாம்
உலகத் தமிழ் மாநாடு ... 14

மதுரை மாவட்டம்: நலத்திட்ட உதவிகள்
வழங்கி மாண்புமிகு முதல்வர் உரை ... 17

தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் ... 27

மத்திய அரசு நிதிநிலை அறிக்கை:
*-மாண்புமிகு முதல்வர் வரவேற்பு-* ... 30

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்:
நலத்திட்ட உதவிகள் வழங்கி,
மாண்புமிகு முதல்வர் உரை ... 33

கண்பார்வையற்ற இளநிலைப்
பட்டதாரிகளுக்கு வேலை! ... 41

மாவீரர் நேத்தாஜிக்கு ... 42
மாபெரும் விழா! ... 44

நூல்நயம் ... 45
அகிலம் போற்றும் அன்னை தெரசா


நாம் ஒவ்வொருவரும் எந்தச் செயலைச் செய்தாலும், அச்செயல் குழந்தைகளுக்கு உதவியாக இல்லையெனில் அதனால் என்ன பயன் என்று பெரியவர்களாகிய நாம் நம்மை நாமே கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும்.

—அன்னை தெரசா

அட்டை சொல்லும் செய்தி



# அனைத்து நிலைகளிலும் மகளிருக்கு 50 சதவீதம்!

## – மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

**''தமிழ்நாட்டில் பெண்களின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கு எதிராகவுள்ள எல்லாத் தடைகளும் நீக்கப்படும். ஏற்கெனவே உள்ள சட்டங்கள், கொள்கைகள் மறு பரிசீலனை செய்யப்படும். அனைத்து நிலைகளிலும் மகளிருக்கு 50 சதவிகித பிரதிநிதித்துவம் கிடைக்க வகைசெய்யும் விதத்தில் அரசின் கொள்கைகளும், திட்டங்களும் உருவாக்கப்படும்'' என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னையில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின விழாவில் திட்டவட்டமாக அறிவித்தார்.**

தமிழக அரசு சமூக நலத்துறை சார்பாக, சென்னைக் கலைவாணர் அரங்கில் சர்வதேசப் பெண்கள் தின விழா 9.3.94 அன்று நடந்தது.

விழாவுக்கு, மாண்புமிகு மத்தியப் பெண்கள், குழந்தைகள் நல இணை அமைச்சர் பசவராஜேஸ்வரி தலைமை தாங்கி, பெண்கள் முன்னேற்றத்துக்கான மத்திய அரசின் திட்டங்களை விளக்கிப் பேசினார்.

**அன்னை தெரசா**

சர்வதேசப் பெண்கள் தின விழாவில் கலந்து கொள்வதற்காக, உலகப் புகழ்பெற்ற சமூக சேவகியும், நோபல் பரிசு பெற்றவருமான அன்னை தெரசா சென்னை வந்தார்.

அன்னை தெரசாவுக்கு உடல் நலம் சற்று பாதிக்கப்பட்டிருந்தது. எனவே, அவரது சென்னை வருகை ரத்து செய்யப்படும் என்று கூறப்பட்டது. உடல் நலம் குன்றியிருந்தபோதிலும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அன்பான அழைப்பை ஏற்று, அன்னை தெரசா சென்னை வந்து சேர்ந்தார்.

சென்னைக்கு வந்த அன்னை தெரசாவுக்கு, சென்னை விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது. கல்கத்தாவிலிருந்து சென்னை வந்த அவருக்கு, மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் இந்திரகுமாரி மலர்க் கொத்து கொடுத்து வரவேற்றார். மாண்புமிகு அமைச்சர் லாரன்ஸ் பொன்னாடை கொடுத்து வரவேற்றார்.



கலைவாணர் அரங்கில் - விழா மேடைக்கு வந்த அன்னை தெரசாவை மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அழைத்து வந்தார்.

அவரை முதலில் இருக்கையில் அமரும்படி மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கேட்டுக் கொண்டார். ஆனால் அன்னை தெரசா அவர்கள் இவரை முதலில் அமரச் சொன்னார். பிறகு இருவரும் அமர்ந்தனர்.

அன்னை தெரசா அவர்கள், விழாவில் 40 நிமிட நேரம் இருந்தார். மாலை 5.40 மணிக்கு அன்னை தெரசா அவர்கள் விடைபெற்றுச் சென்றபோது, அவருடைய கார் வரை சென்று முதல்வர் அவர்கள் வழியனுப்பி வைத்தார்.

### புரட்சித்தலைவி எழுதிய புத்தகம்

''பெண்கள் முன்னேற்றத்துக்கான தமிழக அரசின் கொள்கை விளக்கம் மற்றும் திட்டம்'' என்ற புத்தகத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் எழுதியிருக்கிறார்.

இந்தப் புத்தகத்தை, 9.3.94 அன்று மாலை கலைவாணர் அரங்கில் நடந்த விழாவில் அன்னை தெரசா ஆசீர்வதித்து வெளியிட்டார்.

### ஆசி வழங்கினார்

முதல் பிரதியை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு, அன்னை தெரசாவின் காலைத் தொட்டு வணங்கினார்.

அப்போது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு அன்னை தெரசா ஆசீர்வாதம் வழங்கினார். பின்னர் அன்னை தெரசா பேசினார்.

முதல் பிரதியை அன்னை தெரசாவிடமிருந்து பெற்றுக் கொண்ட மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழாவில் சொற்பொழிவாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:-

### சாதனைகள்

''அன்னை தெரசா அரும்பெரும் சமூகத் தொண்டுகளில் தன்னை அர்ப்பணித்து வருகிறார்.

அன்னை தெரசாவின் வாழ்க்கையில் அவர் சாதித்த சாதனைகளில் பலவற்றை நான் படித் திருக்கிறேன்.

பகுத்து உண்டு வாழும் அவரது கொள்கையை விளக்கிடும் அவற்றில் ஒன்றே ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

### பசிக்கு உணவு

அன்னை தெரசாவின் இருப்பிடத்துக்கு ஒரு நாள் ஒருவர் வந்தார்.

''அன்னையே, அருகில் 8 குழந்தைகளைக் கொண்ட ஒரு இந்துக் குடும்பம் உள்ளது. நீண்ட நாட்களாக அவர்கள் சாப்பிடவில்லை. அவர் களுக்கு ஏதாவது செய்ய வேண்டும்'' என்று அவர் சொன்னார்.

உடனே அன்னை கொஞ்சம் சாதமும், காய் கறிக் கூட்டுகளையும் எடுத்துக் கொண்டு அந்தக் குடும்பத்தின் வீட்டுக்கு விரைந்தார்.

பசியால் துடித்துப்போயிருந்த அந்தப் பிஞ்சு உள்ளங்களின் கண்கள், உணவைக் கண்டதும்

மகிழ்ச்சியில் திளைத்தன.

அந்தக் குழந்தைகளின் தாய், அந்த உணவைப் பெற்றுக் கொண்டு, இரு பங்குகளாகப் பிரித்தார். பின்னர் வெளியே சென்றுவிட்டார்.

சிறிது நேரம் கழித்து அவர் திரும்பி வந்தார்.

அன்னை தெரசா அவரைப் பார்த்து, எங்கே போய் இருந்தீர்கள்? என்ன செய்தீர்கள்?'' என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பெண், ''எங்களின் அண்டை வீட்டுக்காரர்களும் பசியில்தானே இருக்கிறார்கள். அவர்கள் ஒரு முஸ்லீம் குடும்பம். நிறையக் குழந்தைகள் உள்ளன'' என்று சொன்னார்.

**நேசக்கரம்**

அன்னை தெரசா சில நிமிடங்கள் யோசித்தார். திரும்பிப் போய் மேலும் உணவு கொண்டு வரலாமா என்று நினைத்தார். ஆனால் வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டார்.

பகுத்து உண்டு வாழ்வதில் இந்தக் குடும்பத்தினர் மகிழ்ச்சி காணவேண்டும் என்று விரும்பினார்.

துன்பமும், துயரமும், எங்கு ஏற்பட்டாலும் அன்னை தெரசாவின் வழிகாட்டுதலில் அவருடைய தர்ம ஸ்தாபன மிஷன் அமைப்புகள் நிவாரணப் பொருட்களுடன் அந்த இடத்துக்கு விரைந்து சென்று, பாதுகாத்திடும் தேவதைகளைப் போல நேசக்கரம் நீட்டுகின்றன.

பெண்களின் வாழ்க்கைத் தரம் சீரிய முறையில் மேம்படாதவரை உலகம் மகிழ்ச்சியாக இருக்க முடியாது.

பெண்களுக்கு எல்லா உரிமைகளையும், சுதந்திரத்தையும் அளிக்க வகை செய்யும் சட்டத்தைச் சமுதாயம் எப்போது உத்தரவாதம் அளித்து மதிக்கிறதோ அப்போதுதான் பெண்களின் வாழ்க்கைத்தரம் மேம்பாடு அடையும்.

மாநிலத்திலும் மற்றும் சமுதாய வளர்ச்சியிலும் பெண்களுக்குச் சமபங்கு கிடைப்பதைப் பலப்படுத்துவதுதான் எனது அரசின் முக்கியப் பணியாகும்.

இந்திய அரசியல் சட்டம், பெண்களின் உரிமைக்கு உறுதியளித்திருக்கிறது, என்றாலும், சமுதாய அமைப்பில் ஆண்கள், பெண்கள் செயல்பாட்டின் அடிப்படையிலேயே அது முடிவு செய்யப்படுகிறது. இதற்கு மதம், சமூகம், கலை மற்றும் அரசியல் போன்றவையும் காரணமாக அமைகின்றன.

**உண்மை நிலை**

பல நூற்றாண்டுகளாக மாறாமலும், நிபந்தனைகளாலும் பெண்களின் கவுரவம் பாதிக்கப்பட்டிருப்பதுதான் உண்மையான நிலையாகும். பெண்களாகப் பிறந்து, இந்தத் தலை எழுத்திலிருந்து, சிலர் தப்பி இருந்தால் அதற்குத் தேர்வைவிட, சந்தர்ப்பம்தான் அதிகக் காரணம் ஆகும்.



இந்த நிலை தலைகீழாக மாறி, பெண்கள் எந்த வாழ்க்கையை விரும்புகிறார்களோ, அந்த வாழ்க்கையைத் தீர்மானித்துக்கொள்வது சந்தர்ப்ப வசமாக இல்லாமல், அவர்கள் தேர்வாகவே அமைய வேண்டுமென்று தமிழக அரசு நம்புகிறது.

**அரசு நடவடிக்கை**

இதற்காகத் தமிழக அரசு கடந்த 10 ஆண்டுக் காலமாகப் பல்வேறு நடவடிக்கைகளைத் தொடங்கி இருக்கிறது. கூடுதல் நிலங்களைப் பெண்களுக்கே ஒதுக்கீடு செய்வது, இந்து வாரிசு உரிமைச் சட்டத் திருத்தத்தை அமல் நடத்தியது. அனைத்துப்

பணிகளிலும் இட ஒதுக்கீடு போன்றவை குறிப்பிடத்தக்கதாகும். இதைப்போல, மேலும் பல துறைகளுக்குச் செல்லவேண்டும்.

**இன்சூரன்ஸ்**

பெண்களின் முன்னேற்றம் என்பது குழந்தைகளுடன் இணைந்ததாகும். இதைத் தமிழக அரசு அங்கீகரித்து, பெண் குழந்தைகளைப் பிறந்ததில் இருந்தே பொறுப்பேற்றுக் கொள்வதற்குத் திட்டம் வகுத்துள்ளது. அவர்களுக்குச் சுகாதாரம் மற்றும் கல்வி வசதி கிடைக்கவும் திட்டம் உள்ளது.

அவர்களுடைய பிற்காலப் பொருளாதார வசதிக்காக, விசேஷ இன்சூரன்சுத் திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறப்புத் திட்டங்கள் எல்லாம் குழந்தைகள் நலன் என்ற பெயரில் 15 அம்சத் திட்டமாகத் தமிழக அரசு சமீபத்தில் அறிவித்தது.

**கொள்கைகள்**

தமிழ்நாட்டில் பெண்களின் நலனுக்காக, நாங்கள் ஏற்கெனவே ஒரு நல்ல அடித்தளத்தை அமைத்துப் பல்வேறு நலத்திட்டங்களை வகுத்து, அவற்றைச் செயல்படுத்தி வருகிறோம். அதே சமயம் பெண்கள் நலனுக்காக நாம் இன்னும் எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறதென்றும் நாங்கள் கருதுகிறோம். ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறை தேவைப்படுவதையும் நாங்கள் உணருகிறோம். இதற்காகக் குறுகிய காலக் கண்ணோட்டத்தோடு மட்டுமின்றி, எதிர்காலத்திலும் பெண்களின் மேம்பாட்டையும், அதன் அவசியத்தையும் கருத்தில் கொண்டு, சில தேவையான கொள்கை வரைவுகளை நாங்கள் தயாரித்திருக்கிறோம்.

அந்தக் கொள்கைகளின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

**சமபங்கு**

1. மற்ற சமூகப் பிரச்சினைகளைப் போல, பாலினப் பிரச்சினைகளையும் சமுதாயப் பிரச்சினைகளாகக் கருதவேண்டும்.

2. அரசாங்கத்தின் எல்லாக் கொள்கைகளும், ஆண்களுக்குப் பெண்கள் சமமானவர்கள் என்பதை அங்கீகரிக்கும் நிலையைப் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும். அந்தச் சரிபாதி பிரதிநிதித்துவ நிலையை எல்லா மட்டத்திலும் பெண்கள் அடையப் பாடுபடவேண்டும்.

3. கொள்கைகளை வகுக்கும்போது பெண்களுக்கான பொறுப்புக்களையும், கடந்த காலத்திலும், தற்போதும் அவர்களுக்குப் பாதகமாக விளங்கும் அம்சங்களையும் கருத்தில் கொள்ளவேண்டும். இத்தகைய நிலைமை ஆதிதிராவிட மற்றும் தாழ்த்தப்பட்ட இனப் பெண்கள் மற்றும் குறிப்பாகக் கிராமப்புறங்களில் வறுமை நிலையிலுள்ள பெண்கள் விஷயத்திலும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

**தாய்**

○ உலகில் தாயினுடைய நிலை ஈடு இணையற்றதாகும். அந்த ஓரிடத்தில்தான் சுயநலமின்மை என்னும் மகோன்னதமான கல்வியைக் கற்கவும், பயன்படுத்தவும் உலகம் தெரிந்துகொள்ள முடியும்.

—சுவாமி விவேகானந்தர்

**மகம்**

4. வளர்ச்சிக்காகப் பாடுபடும் நிறுவனங்கள் அவை அரசாங்க நிறுவனமாக இருந்தாலம் சரி அல்லது தனியார் அமைப்புகளாக இருந்தாலும் சரி அவர்கள் பெண்களின் வளமான எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு, அவர்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களையும் வழிமுறைகளையும் வகுக்கவேண்டும்.

5. நிர்வாக ரீதியாகப் பெண்களின் மேம்பாட்டுக்காகப் பாடுபடும் அமைப்புகளை வலுப்படுத்தி பெண்களின் முன்னேற்றத்துக்கு உதவுவதற்காக 'மகம்' என்ற பெயரில் தமிழ்நாடு பெண்கள் மேம்பாட்டுக் கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெண்களின் மேம்பாட்டுக்குப் பாதகமான அம்சங்களைக் கண்டறியவும், அவர்களின் முன்னேற்றத்துக்கான வழிமுறைகளை ஆராயவும், சட்டங்களையும், கொள்கைகளையும் நாங்கள் பரிசீலனை செய்ய இருக்கிறோம். அதோடு தொண்டு நிறுவனங்களும், வேலைவாய்ப்பு அமைப்புகளும் பெண்களுக்கு இழைக்கப்படும் தீங்குகளைக் களைவது தொடர்பாகச் சமூகத்திடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கானப் பிரச்சாரத்தில் ஈடுபடும். இதற்குச் சட்ட ரீதியில் தேவையான உதவிகளை வழங்கவும், பயிற்சி அளிக்கவும் நாங்கள் ஏற்பாடு செய்வோம்.

ஆண்களைப்போல் பெண்களுக்கும் வேலைக்கு ஏற்ற சமமான ஊதியம் கிடைக்கிறதா என்பதைக் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்படும். பல்வேறு திட்டங்களிலும் பெண்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கு வசதியாக அவர்கள் திறமை மற்றும் அனுபவத்திற்கு ஏற்ப அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் தயாரிக்கப்படும்.

பெண்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்களைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாட்டில் பெண்களின் நிலை, பெண்களுக்கும், ஆண்களுக்கும் இடையே காட்டப்படும் பாகுபாடுகள் மற்றும் பல்வேறு பகுதிகள் மற்றும் சமூகத்தினர் இடையே பெண்களுக்குள் நிலவும் வேறுபாடுகள் ஆகியவை பற்றி நாங்கள் அறிக்கை தாக்கல் செய்ய இருக்கிறோம்.

**புதிய சமுதாயம்**

பெண்களின் ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில், அவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கவும் ஒரே மாதிரியான வேலைக்கு ஒரே மாதிரி சமமான தொகை கிடைக்கவும் வகை செய்யும் ஒரு

சமுதாய அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்பது விரும்பத்தக்கதும், தேவையான ஒன்றுமாகும்.

அதே சமயம் வீடுகளிலும் பெண்களுக்குப் போதிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். குழந்தை வளர்ப்பு என்ற அடிப்படையான பணியைக் குழந்தைகளின் முழுத் திருப்திக்கு ஏற்றாற்போலப் பெண்கள் மட்டுமே செய்ய முடியும்.

கல்வி நிறுவனங்கள், குழந்தைகளுக்குக் கல்வியைப் புகட்டலாம். ஆனால், தாயும், குடும்பமும் கொடுக்கக் கூடிய அனைத்தையும், கல்வி நிறுவனங்களால் வழங்கமுடியாது.

எனவே, பெண்களின் முன்னேற்றம் என்பது, அவர்களை அவர்களது வீடுகளிலிருந்தும், குடும்பங்களிலிருந்தும் துண்டித்து விடுவதாக இருக்கக் கூடாது.

இங்கே அன்னை தெரசா வெளியிட்ட, பெண்களின் நலன் பற்றி கொள்கை, நமது எதிர்காலத் திட்டங்களுக்குச் சரியான வழிகாட்டியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

**பாராட்டு**

இந்த விழாவைச் சீரோடும், சிறப்போடும் நடத்துவதற்காகக் கடந்த 2 மாதங்களாக, சமூக நலத்துறை அமைச்சர் இந்திரகுமாரி அரும்பாடு பட்டார். அவருடைய உழைப்புக்கு என் பாராட்டுக்களை இந்த மேடையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உரையாற்றினார்.

**மாண்புமிகு மத்திய அமைச்சர்**

விழாவில், மாண்புமிகு மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை இணை அமைச்சர் பசவராஜேஸ்வரி கலந்து கொண்டார்.

மற்றும் அரசு தலைமைச் செயலாளர் டி.வி. வெங்கட்ராமன், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி காந்தகுமாரி பட்நாகர், தேசியப் பெண்கள் கவுன்சில் நிர்வாகி ஜெயந்தி பட்நாயக், 'யூனிசெப்' அமைப்பைச் சேர்ந்த ஜான்ரோடே, ரோஸ்மேரி வில்கின்சன், லியேபிரோவ் ஆகியோர் பேசினார்கள்.

**பொன்னாடை**

விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா, அன்னை தெரசா ஆகியோருக்கு அமைச்சர் இந்திரகுமாரி பொன்னாடை போர்த்திக் கவுரவித்தார்.

விழாக்குழு சார்பில் சிறப்பு விருந்தினர்களுக்கும் பொன்னாடை போர்த்தப்பட்டது.

விழா மேடையில், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், விழாவின் நினைவாக, தங்கக் கிரீடம் அடங்கிய கண்ணாடிப் பேழைகளையும், முதலமைச்சரின் கோயில் புனரமைப்பு நிதிக்காக 18 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய்க்கான 'செக்' கையும் அமைச்சர் இந்திரகுமாரி வழங்கினார்.

## பெண்கள் முன்னேற்றத்திற்காக...



எங்கள் தேர்தல் அறிக்கை என்ன சொல்லுகிறது? ''சட்டங்கள் அனுமதிக்கும் சம உரிமைகளைப் பெறச் செய்வதும், கல்வியறிவு பெறச் செய்வதும், சொந்தக் காலில் நிற்கும் அளவிற்குப் பெண்கள் தாங்களே சம்பாதிக்கும் திறன் பெற்று, பொருளாதாரச் சுதந்திரத்தைப் பெற வைக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கமாகும். அதற்கான புதிய திட்டங்கள் தீட்டப்படும். பெண்களுக்கு இலவசக் கட்டாயக் கல்வி அளிப்பதன் மூலமும், தகுந்த தொழிற் கல்வியும், பயிற்சியும் தருவதன் மூலமும், அவர்களைச் சமுதாயத்திற்கு மேலும் பயனுள்ளவர்களாக ஆக்குவோம்''- என்கிற எங்கள் உயர்ந்த நோக்கத்தின் உண்மையான வெளிப்பாடாக, எங்கள் தேர்தல் அறிக்கை அப்போது வெளியிடப்பட்டது.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு இந்தக் குறுகிய காலத்தில், பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்கள், மேற்சொன்ன கருத்துக்களைப் பற்றுக்கோடாக வைத்துத்தான் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில்தான் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்புவரை பெண்களையே ஆசிரியைகளாக நியமிக்கவும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்குப் போதிய ஊட்டச்சத்தும், சுகாதார வசதியும் அளிப்பதற்கு, உலக வங்கி உதவியுடன் திட்டம் ஒன்றை நிறைவேற்றவும் ஆணையிடப் பட்டுள்ளது.

—'புரட்சித்தலைவியின் முழக்கம்' என்னும் நூலிலிருந்து.



# "பெண்களுக்குரிய மரியாதை தரப்பட வேண்டும்"

## —அன்னை தெரசா

சர்வதேச மகளிர் தின விழா சென்னை கலைவாணர் அரங்கில் 9.4.'94 அன்று மாலையில் நடந்தது. விழாவுக்கு, மாண்புமிகு மத்திய அமைச்சர் பீசவ ராஜேசுவரி அவர்கள் தலைமை தாங்கினார்.

விழாவில், புகழ்பெற்ற சமூக சேவகி அன்னை தெரசா அவர்கள் கலந்து கொண்டு பேசியதாவது:

உலகில் பசியால் வாடுபவர்களுக்கு உணவு தருவதும், வறுமையில் வாடுபவர்களுக்கு ஆதரவு தருவதும் மனித வர்க்கத்துக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகளில் முக்கியமான ஒன்றாகும்.

நிம்மதியின்றித் தவிப்பவனுக்கு ஆறுதல் தர வேண்டும். அவர்களிடம் அன்பு செலுத்த வேண்டும். நாம் ஒருவருக்கொருவர் அன்பாகப் பழகவேண்டும்.

குடும்ப வாழ்க்கையில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தால்கூட, நாம் ஒருவர் மீது மற்றவர் அன்பு செலுத்துவதை விட்டு விடக்கூடாது. குடும்பத்துடன் நாம் ஜெபிக்க வேண்டும். அன்பு வளர்வதற்கு அது உதவும்.

### பெண்களுக்குரிய மரியாதை

குடும்ப வாழ்க்கையில் தாய் என்பவள் இதயம் போன்று விளங்குகிறாள். கணவனைப் பராமரித்து, குழந்தைகளை வளர்ப்பதில் இப்படி எத்தனையோ பொறுப்புகளை அவள் வகிக்கிறாள் அப்படிப்பட்ட தாய்க்கு எத்தனையோ பிரச்சினைகள் வருகின்றன. சமுதாயத்தில் அவளுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் களையப்பட வேண்டும். பெண்களுக்குரிய மரியாதை தரப்பட வேண்டும்.

### தாய் அன்பு

தாய் அன்பு கிடைக்காத குழந்தைகளும் கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகின்றனர். வன்முறை



யாளர்களாகவும் மாறுகின்றனர். எனவே, தாய் அன்புக்கு மாற்று வேறு எதுவும் இல்லை.

இன்றைய சூழ்நிலையில் எத்தனையோ இளம் பெண்கள் குடிப்பழக்கத்துக்கும், போதைப்பழக்கத் துக்கும் அடிமையாகின்றனர். இப்படிப்பட்ட செயல்களில் இறங்கி, தங்கள் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டுள்ளனர். அப்படிப்பட்டவர் களை நல்வழிக்குக் கொண்டுவரவேண்டும்.

**புறக்கணிப்பு**

சமுதாயத்தில் பாவப்பட்ட பெண்கள் உண்டு என்றால் அவர்கள் கணவனால் கைவிடப்பட்ட வர்களும், விதவைகளும்தான்.

இவர்கள் புறக்கணிக்கப்படும் சூழ்நிலை உண் டாகிறது. இது தடுக்கப்பட வேண்டும்.

**கருக்கலைப்பு வேண்டாம்**

பெண்கள் அடிக்கடி கருக்கலைப்பு செய்வதால் உடல்நலம் கெடுகிறது. கருக்கலைப்பு செய்வது தடுக்கப்பட வேண்டும். இயற்கைக்கு மாறான கருத்தடையைத் தவிர்க்க வேண்டும். இன்று உடலைக் கெடுக்கும் மருந்துகளைப் பல பெண்கள் பயன்படுத்துகிறார்கள். இதைச் சகித்துக்கொள்ள இயலவில்லை.

கருக்கலைப்பு மூலம்தான் குடும்பக்கட்டுப்பாடு என்பதை சகித்துக்கொள்ள முடியாது. கணவன்-மனைவிக்கு இடையே உண்மையான அன்பு இருந்தாலேபோதும். அந்த அன்பின் மூலம் குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கலாம்.

கருக்கலைப்பு செய்வதும் கொலைக்குச் சம மானதுதான். தான் சுமக்கும் குழந்தையையே ஒரு தாய் கருக்கலைப்பு மூலம் கொல்வது ஏற்க முடி யாதது ஆகும். இதுபோன்ற கருக்கலைப்பு தடுக்கப் பட வேண்டும்.

இந்த மாநாட்டில் பெண்கள் மற்றும் குழந் தைகள் முன்னேற்றத்துக்கான பல நல்ல திட் டங்கள் அறிவிக்கப்படவுள்ளன. இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்தவர்களை மனமாரப் பாராட்டு கிறேன். இந்த விழா வெற்றி பெற வாழ்த்து கிறேன்.

—இவ்வாறு அன்னை தெரசா கூறினார்.

**முதல்வர் பரிசுகள்**

சர்வதேச மகளிர் தின மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கு, விழா மேடையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெயலலிதா அவர்கள் நினைவுப் பரிசுகளை வழங்கி பாராட் டினார்.

விழாவுக்கு வந்த அன்னை தெரசா, மாண்புமிகு முதல்வர் ஜெயலலிதா ஆகியோரைப் பள்ளிக்கூட மாணவ-மாணவிகள் கொடியசைத்து வரவேற்றனர்.

முடிவில், சமூக நலத்துறைச் செயலாளர் திரு. ஆர். கிருபாகரன் நன்றி தெரிவித்துப் பேசினார்.

## நெசவாளர்களுக்கு நியாயவிலை சில்லறை நூல் விற்பனைக் கிடங்கு

**நெசவாளர்களுக்கு நியாயமான சில்லறை நூல் விற்பனைக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.**

இது குறித்து மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்ததாவது:

"கைத்தறி மற்றும் விசைத்தறி துணிகள் பெரும்பான்மையாக உற்பத்தி செய்யப்படும் மதுரை, ஈரோடு, சேலம், திருச்செங்கோடு ஆகிய பகுதிகளில் உள்ள நெசவாளர்கள் தங்களுக்கு நியாய விலையில் நூல் கிடைத்திட வேண்டும் என்று தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்களுக்குக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

"கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களின் கோரிக்கையை ஏற்ற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் 16.2.94 முதல் நியாய விலையில் நூல் கிடைக்க வழிசெய்துள்ளார்.

"தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலை களில் உற்பத்தியாகும் நூல் ரகங்கள் 16-ந் தேதி முதல் அமைக்கப்படும் விற்பனைக் கிடங்குகளில் வினியோகம் செய்யப்படும் மதுரை, ஈரோடு, சேலம், திருச்செங்கோடு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சில்லறை விற்பனைக் கிடங்குகளில் கூட்டுறவு அமைப்புக்கு வெளியே உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெச வாளர்கள் நியாய விலையில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம். தமிழகத்தில் முதன்முறை யாக இக்கிடங்குகள் அமைக்கப்படுகின்றன.

"மதுரையில், மதுரை தொழிலியல் நெச வாளர் கூட்டுறவுச் சங்கம், தத்தனேரி, செல்லூர் மதுரை-2 என்ற இடத்தில் சில்லறை விற்பனைக் கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது.

"ஈரோட்டில், ஈரோடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட், (ஈரோடெக்ஸ்) நேத்தாஜி, ஈரோடு என்ற இடத்திலும்,

"சேலத்தில், சேலம் அம்மாப்பேட்டை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட், அம்மாப்பேட்டை, சேலம் என்ற இடத்திலும்,

"திருச்செங்கோட்டில், ராஜகவுண்டம்பாளை யம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட், தேரடித் தெரு, திருச்செங்கோடு என்ற இடத் திலும் சில்லறைக் கிடங்குகள் அமைக்கப்பட்டு உள்ளன.

"கூட்டுறவு அமைப்புக்கு வெளியே உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி உரிமையாளர்கள் இந்தச் சில்லறை விற்பனைக் கிடங்குகளின் வசதியைப் பெற்றுப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்."

# ''ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயுள்ள உரிமைகள் சுதந்திரங்கள் ஆகியவை மேன்மேலும் அதிக அளவில் பங்கீடு செய்யப்பட வேண்டும்!''

## —மாண்புமிகு முதல்வர் உரை

**சென்னை, பார்க் ஷெராட்டனில் 9.3.94 அன்று நடைபெற்ற சர்வதேச மகளிர் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை**

தமிழ்நாட்டில் பெண்கள் முன்னேற்றத்திற்காக சரியான நேரத்தில், பொருத்தமான கொள்கையை நாங்கள் தேர்ந்தெடுக்க, எங்களுக்கு உதவும்வண்ணம், இந்த உச்ச மாநாட்டில், இன்று என்னோடு நீங்களெல்லாம் இருப்பது குறித்து, நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நமது விவாதத்துக்குத் பிறகு, தமிழகத்தில் ஒவ்வொரு திட்டமும், ஒவ்வொரு கொள்கையும் ஆண்களும், பெண்களும் சரிசமம் என்னும் நிலையை, உருவாக்கும் வகையில், வடிவமைக்கப்படும் என்பது எனது நம்பிக்கையாகும். பல்வேறு இறுதித் தீர்மானத்தை உருவாக்க வேண்டிய நிலைகளிலும், பெண்கள் பங்கெடுத்துக் கொள்வதை அதிகப்படுத்தி அதில் அவர்களது செல்வாக்கை உயர்த்துவதன் மூலம், அரசாங்கமும், சமுதாயத்தில், அனைத்துப் பிரிவுகளும், இணைந்து பாடுபட வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கமாகும்.

விக்டர் ஹியூகோ சொன்னார், ''ஆண்களுக்குப் பார்வை உண்டு. ஆனால், பெண்களுக்கோ உள்நோக்குப் பார்வை உண்டு''. ஆமாம், ஆனால் மேலும் நான் ஒன்று கூற விரும்புகிறேன்: பெண்களுக்கு, உள்நோக்குப் பார்வை மட்டுமல்ல, தொலைநோக்குப் பார்வையும் உண்டு. உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருக்கும் பெண்களாகிய நாம், நமது தொலைநோக்குப் பார்வையைப் பங்கிட்டுக் கொள்ளவும், அதன் மூலமாக, அதனை வளர்த்துக் கொள்ளவும், வளப்படுத்திக் கொள்ளவும். இங்கு கூடியிருக்கிறோம் என்பதற்கு இந்த மாநாடே எடுத்துக்காட்டாகும். இன்று நாம் பங்கிட்டுக் கொள்ளவிருப்பது, நம்முடைய உள்நோக்குப் பார்வையையும், அனுபவத்தையுமேயாகும்.

பல்வேறு நாடுகளில் உள்ள அரசியல் சட்டங்களில், ஆண்களுக்கும், பெண்களுக்குமான அடிப்படை உரிமைகள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த அடிப்படை உரிமைகள் குறிப்பாகப் பெண்களுக்கான அடிப்படை உரிமைகள், உலகளவில் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை என்பதே உண்மையாகும். ஆண்களைப் போலவே, ஒரு வாழ்க்கை நிலையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும், ஒரு வேலையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும், கல்வியைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும், மற்றப் பலன்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும் பெண்களுக்கான உரிமைகள் மற்றும் சுதந்திரம், தற்போதுள்ள சூழ்நிலை காரணமாகத் துண்டிக்கப்பட்டுள்ளன. எனவே, ஆண்களைப் போலவே பெண்களும் அரசியல் சட்டம் அளித்திருக்கும், சுதந்திரத்தை அனுபவிப்பதை வளர்க்க வேண்டியது கட்டாயமான ஒரு தேவையாகும்.

ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையேயுள்ள, உரிமைகள், சுதந்திரங்கள் ஆகியவை மேலும் மேலும் அதிக அளவில் பங்கீடு செய்யப்பட வேண்டும். இவ்வாறு பகிர்ந்து கொள்வது, ஒரு இயற்கையான இயல்பூக்கமாகவும், ஒரு வாழ்க்கை முறையாகவும் பெண்களைப் பொருத்தவரை அமைகிறது. இவ்வாறு பகிர்ந்து கொள்வதற்கான விருப்பமும், ஆயத்தமும் நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு பெண்ணிடமும் இயல்பாகவே உண்டு. துணிவோடு, இன்னும் நேர்மையான ஒரு சமூகத்தைத் திட்டமிட நாம் முயல்கையில், இதுவே நமது மாபெரும் வலிமையாகவும் அமைகிறது.

வளர்ச்சி மற்றும் அமைதி ஆகியவற்றில், பெண்களின் பங்கை மறுவரையறை செய்ய வேண்டும் என்னும் கருத்தில், நாங்கள் உருவாக்கியுள்ள நகல் திட்டம் உங்களிடம் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையறிக்கை, இன்று மாலை சர்வதேசப் பெண்கள் விழாவில் வெளியிடப்படும். இத்தகைய கோட்பாட்டை, வடிவமைக்கும் முயற்சியில் ஈடுபடும் முதல் மாநிலம். இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் என்பதை நீங்களும் அறிவீர்கள்.

அடுத்த ஆண்டு, 'பெய்ஜிங்' நகரில் நடைபெறவுள்ள 4-வது உலக மாநாட்டில் 3-ஆம் உலக நாடுகளின் கருத்துகளுக்குக் குரல்கொடுக்கும் முன்னணி நாடாக இந்தியா விளங்க, மத்திய அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு, இந்தக் கொள்கையறிக்கை பெருந்துணை புரியும் என்று நான் நம்புகிறேன்.

நீங்கள் இங்கு வந்துள்ளமைக் குறித்து, என் மகிழ்ச்சியை நான் வெளிப்படுத்திக் கொள்கிறேன். நன்றி. பாராட்டுகிறேன். குறிப்பாக, குறுகிய கால அவகாசத்தில்



என்னுடைய அழைப்பை ஏற்று, வெளிநாடுகளிலிருந்து, வருகை புரிந்திருக்கும் நண்பர்களுக்கு, என் மகிழ்ச்சியையும், நன்றியையும் புலப்படுத்திக் கொள்கிறேன்.

நேரில்வர இயலாமையைத் தெரிவித்த மற்ற நண்பர்கள் மிகவும் உற்சாகமூட்டும் செய்திகளை அனுப்பியிருக்கிறார்கள். பெண்களுக்கான ஐ.நா. வளர்ச்சிப் பேரவை (UNIFEM) இந்த முக்கியமான முயற்சி குறித்து, எங்களுக்குப் பாராட்டுத் தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ளது. மேலும், பெண்கள் பற்றிய தெளிவான கொள்கையில்லாமையே. தேச இயந்திரம் திறம்பட இயங்குவதைத் தடுக்கும் பெரும் சிக்கல் என்றும் கருத்து தெரிவித்துள்ளது. இந்தச் சிக்கலைப் பொருத்தவரையில், இதைத் தீர்ப்பதில் நாமே முன்னோடியாக இருக்கிறோம் என்று குறிப்பிட்டுள்ள யூனிபெம் எல்லா உதவிகளையும் நமக்கு வழங்குவதாக உறுதியளித்திருக்கிறது. இந்த வார்த்தைகள், நம் முயற்சிக்கு ஊக்கமூட்டுகின்றன.

நம் பாதைகளிலுள்ள தடைகளைப் பற்றி, நாம் கவலைப்படவில்லை. அவற்றைப் புரிந்து கொள்ளவும், அவற்றை அலசிப்பார்க்கவுமே நாம் முயல்கிறோம். மேரி கியூரி கூறியது போல, ''வாழ்க்கையில் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. புரிந்துகொள்ள வேண்டியதே வாழ்க்கையில் இருக்கிறது''. ஜப்பான் நாட்டுப் பேரவை உறுப்பினராகிய செல்வி டொமோட்டோ அகிகோ அவர்கள், நாம் மேற்கொள்ளும் இந்த முயற்சியில், தம்முடைய பேரார்வத்தைப் புலப்படுத்தியிருப்பதோடு, நம்முடைய முயற்சிகளில் தாமும் பங்கு பெறுவதாக வாக்களித்திருக்கிறார்.

இந்த மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சியில் நம்மோடு கலந்து கொள்ளும் டாக்டர் ரோஸ்மேரி, எனக்கு அனுப்பிய கவிதையை இப்போது உங்களுக்கு வாசித்துக்காட்ட விரும்புகிறேன்:

Women cannot say:
  I want not your inspiration, Lord.
Women cannot refrain from:
  I want to give you glory, Lord.
Women cannot refuse:
  The sixth sense given them by God.
Women cannot refrain:
  The Poetry of reverence in their heart.
Women cannot deny:
  The magnificence of all the earth.
Women cannot live this magnificence:
  Without respect for man.
Women cannot love:
  Without respect from man.
God made woman, yes, God made woman
  the complement of man.

இந்தக் கவிதை எனக்கு ஒரு நிகழ்ச்சியை நினைவுப்படுத்துகிறது. ஒரு தாய், குமரப் பருவத்தில் (Tean Age) இருக்கும் தன் மகளோடு பேசிக்கொண்டிருக்கும் போது, 'நான் விடுதலைப் பெற விரும்பவில்லையென்று, உறுதியாகக் கூறினாள். அதற்கு அந்த மகள் பதிலளிக்கும் போது, 'பிறர் பிடியில் சிக்கியிருக்கிறோம் என்பது, எப்படியிருக்கும் என்பதை அறிகின்ற வரை நானும் தான் விடுதலை பெற விரும்பவில்லை', என்றாள்.

இன்றைய நமது மாநாட்டில், உலகமே ஆர்வம் காட்டுவதாக நான் உணர்கிறேன். மீண்டும் ஒரு முறை, நீங்கள் அனைவரும் இங்கு வந்து, எங்களோடு கலந்து கொள்வதற்காக என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

# பழங்குடியினர் துணைத் திட்டம்: முதல்வர் ரூ.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் வாழும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர்களுடைய நல்வாழ்விற்காகவும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காகவும், அவர்கள் பொருளாதார மேம்பாடு அடையும் வண்ணம், தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இவற்றில், குறிப்பாகப் பழங்குடியினருக்கு உதவிபுரியும் வகையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் அறிவுரையின் பெயரில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, ''பழங்குடியினர் துணைத் திட்டம்'' என்ற புதிய திட்டத்தினை வகுத்துள்ளது. இந்தத் திட்டமானது, குறிப்பாகப் பழங்குடி இனத்தைச்சேர்ந்த மக்கள் ஏதேனும் சிறுதொழிலைப் புரிந்து, தங்கள் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தாங்களே வழிவகுத்துக் கொள்ளும் வண்ணமும், அவர்களுக்குரிய வீட்டு வசதியினை உருவாக்கித்தரும் வண்ணமும் அமையும்.

இந்தத் திட்டத்தினைப் பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அதனை முழுமையாக ஏற்றுக்கொண்டு செயல்படுத்த, 24 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார். இந்தத் திட்டமானது, திருநெல்வேலி-கட்டபொம்மன், சேலம், கன்னியாகுமரி, திண்டுக்கல்-அண்ணா, பெரியார் மாவட்டங்களில் வாழ்ந்துவரும் பழங்குடியினர் இன மக்களுக்காகச் செயல்படுத்தப்படும்.

பெண்கள் எழுத்தறிவு:

# தமிழகத்தை வெகுவிரைவில் தேசிய அளவில் முதலிடத்திற்குக் கொண்டு வருவோம்!

## மாண்புமிகு முதல்வர் எழுச்சி உரை



உங்களுடைய உரைகளை மிகுந்த கவனத்தோடு கேட்டேன். நீங்கள் இன்று வழங்கியிருக்கும், மதிப்புமிக்க கருத்துகள் அளவிடற்கரிய பயனை அளித்திருக்கின்றன என்றும், அவையனைத்தும், எங்களது ஆவணங்களில் கவனமாகவும், முறையாகவும் சேர்க்கப்படும் என்றும், தேவையான மறுநடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன்.

புள்ளி விவரங்களைப் பற்றி இங்கு குறிப்பிட்டதால், நான்சில குறிப்பிட்ட விவரங்களைக் கூற விழைகிறேன்: 'எங்களுக்குக் கிடைத்துள்ள புள்ளி விவரப்படி கேரள மாநிலத்தில் பெண்கள் 86.9 சதவிகிதம் எழுத்தறிவு பெற்றவர்கள். இந்த வகையில், நாட்டிலேயே கேரளா முதல் தகுதி பெறுகிறது. தமிழ் நாட்டில் பெண்களின் எழுத்தறிவு விகிதம் 52.3 சதவிகிதம் என்பதையும், நாட்டில் நாங்கள் 2-ம் இடத்தைப் பெற்றிருக்கிறோம் என்பதையும் மகிழ்ச்சியோடு உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 50.5 சதவிகிதம் எழுத்தறிவு பெற்ற மகளிரைக் கொண்டு மகாராஷ்டிரா மாநிலம் 3-ம் இடத்தைப் பெறுகிறது. மற்ற மாநிலங்களில், பெண்கள் எழுத்தறிவு விகிதங்கள், இவற்றுக்கு, வெகு குறைவாக உள்ளன. அடுத்த சில ஆண்டுகளில், தமிழகத்தை, முதலிடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டுமென்பது, எங்கள் குறிக்கோளாகும்.

கடந்த நவம்பர் மாதம் நாங்கள் தொடங்கிய குழந்தைப் பராமரிப்புப் பற்றிய 15 அம்சத் திட்டத்தின் முக்கியமான செய்திகளைப் பற்றி திரு. டி.வி. அந்தோணி அவர்கள் சற்று முன் குறிப்பிட்டார். அவற்றைப்பற்றி நானும் சிறிது கூற விரும்புகிறேன். "இந்தப் பதினைந்து அம்சத் திட்டத்தின் சில முக்கியமான கூறுகளாவன: குழந்தைகள் மற்றும் தாய்மார்களிடத்தில் இரத்த சோகையைக் குறைப்பது, அடிக்கடி குழந்தை பெறுவதிலிருந்தும், இளம் வயதிலேயே குழந்தை பெறுவதிலிருந்தும் பெண்களை விடுவித்தல், பெண்களின் திருமண வயதை 21-ஆக உயர்த்துதல், இரு குழந்தைகளுக்குள்ள இடைவெளியை மூன்றாண்டுகளாக ஆக்குதல்; பெண்களின் எழுத்தறிவையும், அந்தஸ்தையும் உயர்த்துதல். பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தைப் பிரபலப்படுத்துதல் மற்றும் 'பெண் சிசுக்கொலை' என்னும் சமூகக் கொடுமையைத் தமிழ்நாட்டில் அடியோடு அகற்றுதல்.

கி.பி. 2000-ஆம் ஆண்டு அளவில், மாநில அரசுகள் நிறைவேற்ற வேண்டுமென்று, இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட தேசிய இலக்கைப் பல்வேறு துறைகளில் நாங்கள் அடைந்துவிட்டோம் என்ற தகவலை உங்களுடன் நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். மகளிர் மேம்பாடு மற்றும் குழந்தை நலம் பற்றிய இந்த தேசிய இலக்குகளில் பலவற்றை, மிக விரைவாக நாங்கள், தமிழ்நாட்டில் ஏற்கெனவே, அடைந்துவிட்டோம். 1998-க்குள் சில புதிய இலக்குகளை அடைய வேண்டுமென்று எங்களுக்கு நாங்களே குறித்துக் கொண்டிருக்கிறோம்.

பெண்களின் சட்ட ரீதியான உரிமைகளைக் காப்பாற்றும் முயற்சியின் ஒரு பகுதியாக மாநிலம் முழுவதும், முழுக்க முழுக்கப் பெண்களே பணிபுரியும், மகளிர் காவல் நிலையங்களை நாங்கள் ஏற்படுத்தியிருக்கிறோம். முதலாவது அனைத்து மகளிர் காவல் நிலையத்தை 1992-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், திறந்து வைத்தோம். இந்தக் காவல் நிலையங்கள் முழுவதும் பெண் காவலர்களாலும், பெண் காவல் அதிகாரிகளாலும், நிர்வகிக்கப்படுகின்றன.

**சென்னை, பார்க் ஷெராட்டனில் 9.3.94 அன்று நடைபெற்ற சர்வதேச மகளிர் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர், புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வழங்கிய நிறைவுக் குறிப்புகள்**

எங்கள் பெண்களிடத்தில், இந்த காவல் நிலையங்கள் மாபெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. பொது மக்களிடத்திலும், குறிப்பாக பெண்களிடத்திலிருந்து நாங்கள் பிரம்மாண்ட வரவேற்பைப் பெற்று இருக்கிறோம்.

ஏனென்றால், முதன்முதலாகப் பெண்களது பிரச்சினைகள் அனுதாபத்தோடு கேட்கப்படும் என்னும் நம்பிக்கையையும் அவர்களது நியாயமான முறையீடுகளுக்கு, துரிதமான பரிகாரங்கள் கிடைக்குமென்னும் நம்பிக்கையையும் இந்தக் காவல் நிலையங்கள் வழங்கியுள்ளன.

அனைத்து மகளிர் நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கும் முதல் மாநிலமும், நாட்டின் ஒரே மாநிலமும் எங்கள் மாநிலம்தான். ஒருவேளை உலக அளவிலும்கூட இந்த வகையில் நாங்களே முதன்மையானவர்களாக இருக்கக்கூடும்.

இந்த முயற்சியின் வெற்றிக்குப்பிறகு, பாகிஸ்தானின் பிரதமர் திருமதி. பெனாசிர் பூட்டோ அவர்கள்கூட, அண்மையில் ஒரு மகளிர் காவல் நிலையத்தை ஒரே ஒரு மகளிர் காவல் நிலையத்தை பாகிஸ்தானில் தொடங்கியிருக்கிறார் என்பது உங்களுக்கும் மகிழ்வளிக்கும் செய்தி என்று நினைக்கின்றேன்.

நாங்கள் ஒரு இலட்சம் பெண்களுக்குச் சுய வேலை வாய்ப்பு அளிக்கும் ஒரு திட்டத்தையும் நிறைவேற்றி வருகிறோம். இதன்மூலம் பெண்கள் பொருளாதாரச் சுதந்திரம் பெறுகிறார்கள். பெண்களின் நிலையை உயர்த்தவும், மேம்படுத்தவும் வேண்டும் என்றால் பொருளாதார அடிப்படையிலும், நிதியடிப்படையிலும் அவர்கள் சுதந்திரமாக விளங்க வேண்டும் என்பது என்னுடைய அசைக்கமுடியாத உறுதியான நம்பிக்கையாகும்.

எங்களோடு இந்த விழாவில் கலந்து கொள்வதற்காக உங்களில் சிலர் நெடுந்தொலைவிலிருந்தும் வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு நிரம்பி வழியும் என் நெஞ்சத்து நன்றியினை உரித்தாக்குகிறேன்.

நம்முடைய விவாதங்களிலிருந்து நாம் ஒரு தொடக்கத்தைத்தான் ஏற்படுத்தியிருக்கிறோம். ஒரு மங்களகரமான தொடக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று உணர்கின்றேன்.

நம்முடைய கொள்கை அறிக்கையிலுள்ள ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு தொடரும் இனிவரும் நாட்களில் மேலும்-மேலும் பரிசீலனைக்குரிய மற்றும் விவாதத்துக்குரிய கருப்பொருளாக விளங்கப்போகிறது.

பெண்கள் மேம்பாட்டுக்கான ஒவ்வொரு விஷயத்தையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான அல்லது நிறைவான செயல் திட்டத்தை தயாரிப்பது நமது நோக்கமாக இல்லை. இன்று ஒரு விரிவான அடிப்படையை, கொள்கைகளுக்கான ஒரு கொள்கையை நாம் உருவாக்கியிருக்கிறோம். அகலமான திரைச்சீலையில் நாம் ஓவியம் வரைந்திருக்கிறோம். தூரிகை வீச்சுக்கள் இன்னும் சீர்படுத்தப்பட வேண்டும்; வளைகோடுகள் இன்னும் அழகாக வரையப்பட வேண்டும். இறுதித் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டிய பகுதிகளை இனங்கண்டு மிகச்சரியாகக் குறிக்க வேண்டும். இவையெல்லாம் ஒன்றிரண்டு நாட்களிலோ அல்லது ஒரு மாத காலத்திலோ நிறைவேற்ற முடியாதவை.

எனது பதினைந்து அம்சத் திட்டம் குறித்து தற்போது நடத்து வருவது போலவே, அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளும் இந்தக் கொள்கையைப் கருத்தரங்குகளிலும் செயல் அரங்குகளிலும் அலசி ஆராயவும் கூடிச் செயல் புரியவும் வேண்டும்.

இந்தச் செயல்பாடுகளின் தொடர்ச்சியை நானே முன்னின்று கண்காணிப்பேன் என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன்.

இந்த மாநாடு எனக்கு மகிழ்ச்சியூட்டும் மாபெரும் அனுபவமாகும். இன்று மாலை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டத்தில் உங்கள் அனைவரையும் மறுபடியும் சந்திக்க ஆவலோடு காத்திருக்கிறேன்.

## மீனவர்களுக்கு முதல்வர் உதவி



கடந்த ஆண்டு (1993) நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட பெருமழை மற்றும் புயலின் காரணமாகப் பாதிக்கப்பட்ட மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், தங்களுடைய உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதங்களைச் சரிசெய்து கொள்ள அரசின் உதவி கோரி மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் வேண்டுகோள் ஒன்றினை விடுத்திருந்தனர்.

மீனவர்களின் கோரிக்கையைக் கனிவோடு பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மீனவர்கள் தங்களுடைய படகுகள், வல்லங்கள், கட்டுமரங்கள் ஆகியவற்றைச் செப்பனிட்டுக் கொள்ள உதவும் பொருட்டும்; அரசுக்குச் சொந்தமாகப் படகுகள், மற்றும் மீன் பண்ணைகளில் ஏற்பட்ட சேதங்களைச் சரிசெய்யும் பொருட்டும் 30,02,900|- ரூபாயை வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்.

இதனால் சென்னை, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார், தென்னார்க்காடு-வள்ளலார், நாகப்பட்டினம்-காயிதே மில்லத், இராமநாதபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் பயன் பெறுவார்கள்.







# தஞ்சையில் எட்டாம் உலகத் தமிழ் மாநாடு

## மாண்புமிகு முதல்வர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்

**1995**-ஆம் ஆண்டு ஜனவரி மாதம், தஞ்சாவூரில் எட்டாம் உலகத் தமிழ் மாநாடு நடத்துவதற்கான முதலாவது ஆலோசனைக் குழு கூட்டம் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் 23.2.1994 அன்று நடந்தது. இக்கூட்டத்தில் சட்டமன்றப் பேரவைத்தலைவர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், அரசு அலுவலர்கள், காவல்துறை உயர் அலுவலர்கள் ஆகியோர்









கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தில் எட்டாம் உலகத் தமிழ் மாநாடு மிகச் சிறப்புற நடைபெற பல உட்குழுக்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமைத்தார்.

1.1.1995 அன்று நடைபெற உள்ள மாபெரும் தொடக்க விழா, அன்று மாலை நடைபெற உள்ள முக்கிய நிகழ்ச்சிகள், கண்காட்சி, ஒலி-ஒளி நிகழ்ச்சி அமைப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும், இந்த மாபெரும் மாநாட்டில் கலந்து கொள்ள 800-க்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்கள், மொழி வல்லுநர்கள், உலகின் பல்வேறு பகுதி களிலிருந்தும், இந்தியாவின் பல்வேறு பகுதி களிலிருந்தும் கலந்து கொள்வார்கள் என்பதால் அவர்களுக்குத் தேவையான தங்கும் வசதிகள், உணவு வசதிகள் போன்றவற்றை ஏற்பாடு செய்ய புதிய ஓட்டல்கள், கல்யாண மண்டபங்கள், தங்கும் விடுதிகள் விரைவில் கட்டி முடிப்பது என்று இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஆய்வரங்கம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு, புதிய கலையரங்கங்களையும், நிர்மாணிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ள இலட்சக் கணக்கில் திரண்டுவரும் பொதுமக்கள் தங்குவதற்கும், உணவு அருந்துவதற்கும், தஞ்சை நகரில் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலோசனை வழங்கினார். தஞ்சையில் தேவையான உணவு விடுதிகளையும், குடிநீர் வசதி, கழிவறை போன்ற அடிப்படை வசதிகளையும் விரைவில் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், தொடக்க விழா மற்றும் நிறைவு விழாவில் யாரை அழைப்பது, மற்ற கலை நிகழ்ச்சிகளை எவ்வாறு ஏற்பாடு செய்வது என்பன போன்ற விவரங்கள் இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இந்த ஆலோசனைக் கூட்டம் 2½ மணி நேரம் நடைபெற்றது.

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

TNSC BANK

**233, N.S.C. Bose Road, Madras-600 001.**

**Rate of Interest on Deposits**
**(Effective from** 2.9.1993

| **Sl.No.** | **Type of Deposit** | **Rate of Interest per annum** |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| **2.** | **Fixed Deposits :** | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE



மதுரை மாவட்டம் - தேனி:

# ரூ387 கோடி மதிப்பீட்டில் 31,000 க்கு மேற்பட்டோருக்கு உதவி

## - மாண்புமிகு முதல்வர் உரை

வரலாற்றுப் பாரம்பரியத்தையும், தொன்மையான வரலாற்றுச் சின்னங்களையும், புராதனத் திருக்கோயில்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் மதுரை மாவட்டத்திற்கு வருகை தந்து, தேனி நகரத்தில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 387 கோடி ரூபாய்க்கான திட்டங்களைத் துவக்கி வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், 31,000-க்கும் மேற்பட்டவர்களுக்கு, பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவதிலும், நான் பெருவகை அடைகின்றேன்.



மதுரை மாவட்டம் எனக்கு மிகவும் பரிச்சயமான மாவட்டம். பொது வாழ்க்கையில் நான் ஈடுபட்ட பின்பு, பல முறை இந்த மாவட்டத்திற்கு, பல்வேறு சூழ்நிலைகளில் வந்து சென்றுள்ளேன். எனது அரசியல் ஆசான், இதய தெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், ஆண்டிப்பட்டித் தொகுதியைத் தேர்ந்தெடுத்து, அங்கிருந்து சட்டமன்றத்திற்குப் போட்டியிட்டு, வெற்றி பெற்றார்கள். அவரது அடியொற்றி, இந்த மாபெரும் இயக்கத்திற்குத் தலைமை ஏற்றுக்கொண்ட நானும், அதே உணர்வினால் உந்தப்பட்டு, இந்த மாவட்டத்தின் மற்றொரு தொகுதியான, போடிநாயக்கனூர் தொகுதியைத் தேர்ந்தெடுத்து, முதன் முறையாகச் சட்டமன்றத்திற்குப் போட்டியிட்டேன். மாபெரும் வெற்றியை இம்மாவட்டத்து மக்களாகிய நீங்கள் எனக்கு அளித்தீர்கள்.

சில சமூக விரோதச் சக்திகளின் தூண்டுதலால், 1989-இல் தேவாரம் உட்பட சில பகுதிகளில் வன்முறை தலைவிரித்து ஆடியபோது, அன்று பதவியில் இருந்தவர்கள், கை கட்டிக் கொண்டு, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். 'மக்கள் சக்தியே மகா சக்தி' என்று நம்பி, பதட்ட நிலையில் இருந்த எல்லாப் பகுதிகளுக்கும், நானே நேரில் சென்று, குறைகளைக் கேட்டறிந்து, அமைதியை நிலைநாட்டும்படி கேட்டுக்கொண்டேன். நான் முதலமைச்சராக வருவதற்கு முன்பே, அன்று எனக்கு நீங்கள் அளித்த பேராதரவினையும், அன்பையும், என்னால் என்றைக்கும் மறக்க முடியாது.

முதலமைச்சரான பின்பு, நான் மதுரைக்குப் பல முறை வந்து சென்றிருந்தாலும், உலக வரலாற்றிலேயே யாரும் கண்டிராத வண்ணம், 1991-இல், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின், 'வீர வரலாற்றின் வெற்றி மாநாட்டை' நடத்திக் காட்டியதும், இதே மதுரை மாவட்டத்தின் தலைமை இடமான மதுரை மாநகரில் தான். எனவே தான், மதுரை மாவட்

# மதுரை மாவட்டத்தில் முதல்வர்

மதுரை மாவட்டம் அரசு திட்டப் பணிகள் தொடக்கம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, தேனியில் 7.3.'94 அன்று சிறப்புற நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு பெருமைப்படுத்தினார்; 31 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் அவர். ரூ.387 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தொடங்கிவைத்தார்.

கொளுத்தும் வெயில் நேரத்தில் விழா தொடங்கிய போதிலும் இலட்சக்கணக்கானோர் திரண்டிருந்தனர். மாவட்டமே விழாக்கோலம் பூண்டிருந்தது.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில்- மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. அ.ம. பரமசிவம் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

விழா முடிவில்- மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கிருஷ்ணசுவாமி ராஜீவன் நன்றி கூறினார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்களும், வாரியத் தலைவர்களும் கழகத் தலைவர்களும் அரசு உயரதிகாரிகளும் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள்.

டத்திற்கு நான் வந்து செல்லும் போதெல்லாம், நெருங்கிப் பழகிய ஒரு இடத்திற்கு, வருகின்ற ஒரு உணர்வு தான் ஏற்படுகிறதே தவிர, புதிய இடத்திற்குச் செல்கின்ற உணர்வு, என்றைக்குமே ஏற்பட்டதில்லை.

மதுரை மாவட்டம், தமிழர்களின் நாகரிகத்தையும், பண்பாட்டையும், பிரதிபலிக்கின்ற ஒரு மாவட்டமாக விளங்குகின்றது. 2000 ஆண்டுகளுக்கு முன்பே, சங்கம் கண்ட தமிழர்கள் வாழ்ந்த இடம், மதுரை பாண்டியர்களும், நாயக்க மன்னர்களும், நீதி நெறி தவறாது, ஒரு நல்லாட்சியை நடத்தி வந்த பூமி இது. விடுதலைப் போருக்கு வித்திட்ட, பல சான்றோர்கள் வாழ்ந்த பகுதி இது. நாடு விடுதலை பெற்ற பின்பும், தமிழ் மொழியின் மாட்சிமையையும், மகிமையையும், மரபுகளையும் கட்டிக் காப்பதற்கு, தங்கள் இன்னுயிர்களை ஈந்தவர்கள் வாழ்ந்த இடம் இது. பல்வேறு மதத்தவர்கள், சகோதர மனப்பான்மையுடன், ஒருமித்த கருத்துடன், அமைதியாக வாழ்கின்ற பகுதி இது.

1991-ஆம் ஆண்டு, தமிழகத்தின் அரசியலில், மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தி, மக்கள் எங்களைப் பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுத்து, ஆட்சிப் பீடத்தில் அமர்த்தினார்கள். கொண்ட கொள்கையில் உறுதியுடன், 'மக்கள் பணியே மகேசன் பணி', என்ற தாரக மந்திரத்தை சிரமேற்கொண்டு; மாவட்டங்களின் வளர்ச்சிக்கு, தனித் தனியே கவனம் செலுத்தினோம்.

இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை, கிராமப்புறப் பொருளாதாரம் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காகவும்; விவசாயம் பெருகுவதற்காகவும்; வேளாண் தொழில் சிறப்புறவும்; நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு இதுவரை, 40 கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டுள்ளோம்.

எல்லா ஊரகப் புறங்களிலும், நல்ல குடிநீர் கிடைப்பதற்கு, நாங்கள் எடுத்த முயற்சிகளின் விளைவாக, 3.2 இலட்சம் மக்கள் பயனடையும் வண்ணம், 310 புதிய குடிநீர்த் திட்டங்களைத் தீட்டி, 7 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தி உள்ளோம்.

கடந்த 2½ ஆண்டுகளில், 335 புதிய பள்ளிக்கூடங்கள், 4.23 கோடி ரூபாய் செலவில், இந்த மாவட்டத்தில் மட்டும் கட்டப்பட்டுள்ள என்பது, கல்வியின் வளர்ச்சிக்கு, எங்கள் அரசு காட்டி வரும் அக்கறையை வெளிப்படுத்துகிறது.

கடந்த 2½ ஆண்டுகளாக இந்த மாவட்டத்தில், உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, உங்கள் அரசு செயல்படுத்திய பல்வேறு திட்டங்கள், மனித வள மேம்பாட்டிற்கு அடித்தளம் அமைத்ததோடு, இம்மாவட்ட வாழ் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், வழி வகுத்துள்ளது. ஒரு நாட்டின் மனித வளம் தான், அந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு, அடிப்படை என்ற கருத்தில், எனக்கு ஆழ்ந்த நம்பிக்கை உண்டு. எனவே தான், எங்களது தேர்தல் அறிக்கையில், கல்வியின் தரத்தை உயர்த்துவோம்; தொழில் நுட்பக் கல்விக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்போம் என்றும்; திறமையும் அறிவாற்றலும் உள்ள கிராமப்புறக் குழந்தைகளுக்கு, தரமான கல்வி அளிப்பதற்குப் பாடுபடுவோம், என்றும் குறிப்பிட்டு இருந்தோம்.

'எல்லோருக்கும் கல்வி' என்ற உலகம் தழுவிய கொள்கையைத், தமிழகத்தில் சிறப்பாகச் செயல்படுத்த, இந்த அரசு, உங்கள் அரசு, பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 1995-ஆம் ஆண்டு



இறுதிக்குள், ஒரு குறிப்பிட்ட வயதிற்கு உட்பட்ட மக்கள் அனைவருக்கும், குறைந்தபட்ச எழுத்தறிவைப் போதிக்க வேண்டும் என்பதே, அறிவொளி இயக்கத்தின் அடிப்படை நோக்கம். இதுவரை 7 மாவட்டங்களில் இத்திட்டம், வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு, 19 இலட்சம் எழுத்தறிவு இல்லாத மக்களுக்கு, குறைந்தபட்ச எழுத்தறிவுக் கல்வி, போதிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக, 8 மாவட்டங்களில், இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.



அகில இந்திய அளவில் செயல்படுத் தப்படும் திட்டங்களை, தமிழ்நாடு, மற்ற மாநிலங்களை விட, சிறப்பாகச் செயல் படுத்தி வருகிறது என்பதற்கு, 'அறி வொளி இயக்கம்' ஒரு எடுத்துக்காட்டு. மாநகராட்சிப் பகுதிகளில் இத்திட்டத் தைச் செயல்படுத்துவது, எளிதான செயல் அல்ல என்று, மற்ற மாநிலங்கள் தயக்கம் காட்டிய போது, அதை ஒரு சவாலாக நாங்கள் எடுத்துக் கொண்டு, மதுரை மாநகராட்சியில் தொடங் கினோம்.

**இன்று இந்தியாவிலேயே, அறி வொளி இயக்கத்தை வெற்றிகர மாகச் செயல்படுத்திய மாநகராட்சி, மதுரை மாநகராட்சி ஒன்று தான் என்பதை, பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.** இந்த அரிய சமுதாயத் தொண்டில், தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட, தொண்டர்களுக்கும், அரசு அலுவலர் களுக்கும், எனது மனமார்ந்த பாராட்டு தல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில், 6 வயது முதல் 14 வயதுக்கு உட்பட்ட, பள்ளிக்குச் செல லாத, அல்லது பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்ட, 35½ இலட்சம் குழந்தைகளுக்கு, அடிப்படைக் கல்வியை, பள்ளி சாரா முறையில் போதிக்க, ஆண்டு ஒன்றுக்கு, 20 கோடி ரூபாய் செலவில் திட்டம் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம். படித்து வேலை வாய்ப்பற்ற 1½ இலட்சம் இளைஞர்கள், இப் பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். அதே போல், தொடக்கக் கல்வியை அனை வருக்கும் விடுதல் இன்றி வழங்க வேண்டும் என்பதற்காக, முதல் கட்டமாக, தமிழ்நாட்டின் 3 மாவட்டங் களில் சுமார் 120 கோடி ரூபாய் செலவில், உலக வங்கி நிதி உதவியுடன், 'தொடக்கக் கல்வித் திட்டத்தை' செயல் படுத்த உள்ளோம் என்பதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டத்தின், இன்னொரு அடிப்படைப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில், நாங்கள் எடுத்துள்ள முயற்சி களை, இந்த நேரத்தில் குறிப்பிடுவது, பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட, பெரியார் அணையின் கொள் அளவு, 152 அடியாக நிர் ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், காலப்போக்கில், அணை பலவீன மடைந்துள்ளது என்ற கருத்தின் அடிப்படையில், தண்ணீரை 136 அடிக்கு மேல் நிறுத்துவது இல்லை என்று முடிவு செய்யப்பட்டது. மத்திய நதி நீர்க் கமி ஷன், 1970-இல் இந்த அணையைப் பார்வையிட்டு, மீண்டும் இதன் கொள் அளவான, 152 அடி அளவிற்கு, நீரைத் தேக்கி வைக்க வேண்டும் என்றால், அணையைப் பலப்படுத்த, தற்காலிக மற்றும் நிரந்தரப் பரிகாரங்களை எடுத்துக் கூறியது. இம்மாவட்டத்து மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதில், நாங்கள் வைத்துள்ள அளவிட முடியாத ஆர்வத் தின் காரணமாக, மத்திய நதி நீர்க் கமிஷன் சுட்டிக்காட்டிய, அனைத்து மேம்பாட்டுப் பணிகளையும் முடித்து விட்டோம்.

## திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதி!

தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு நலிவுற்ற திருக்கோயில்களில் குறைந்த பட்சம் ஒரு காலப் பூசையாவது நடைபெற வேண்டும் என்ற நோக் கத்தின் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால், 'முதலமைச்சர் திருக் கோயில் திருப்பணி மற்றும் பரா மரிப்பு நிதி'யின் உதவியோடு கூடிய 'ஒரு காலப் பூசை நிதியுதவித் திட்டம்' என்ற திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு, தற்போது அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின்படி பொது மக்கள் ரூ.6,250/-ஐ நலிவுற்ற திருக்கோயிலின் சார்பாகச் செலுத் தினால், முதலமைச்சர் திருக் கோயில் திருப்பணி மற்றும் பரா மரிப்பு நிதியிலிருந்து ரூ.18,750/- அரசால் வழங்கப்பட்டு, மொத்தத் தொகையான ரூ.25,000/-க்கு வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு, அதன் வட்டித் தொகை அத்தகைய நலிவுற்ற திருக்கோயிலின் ஒரு காலப் பூசைச் செலவுக்குப் பயன் படுத்தப்படும்.

தற்போது, தமிழ்நாட்டின் பல் வேறு இடங்களில் உள்ள நலிவுற்ற திருக்கோயில்களில் 123 திருக் கோயில்களுக்காக ஒவ்வொரு திருக் கோயிலுக்கும் ரூ.6,250/- வீதம் பொது மக்களிடமிருந்து நன் கொடையாகப் பெறப்பட்டுள்ளது. இந்தத் திருக்கோயில்களில் ஒரு காலப் பூசை நடத்துவதற்காக, ஒவ் வொரு திருக்கோயிலுக்கும் ரூ.18,750/- வீதம் மொத்தம் ரூ.23,06,250/-ஐ 'முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி'யிலிருந்து வழங்கி, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

முழு கொள் அளவு நீரைத் தேக்கினால், இம்மாவட்டத்தின் வேளாண் வளர்ச்சிக்கு, அது வழி வகுக்கும் என்பதால், மத்திய நதி நீர்க் கமிஷன் மூலம், மீண்டும் பார்வையிடப்பட்டு, இந்தப் பிரச்சினை தற்போது, கேரள அரசின் பரிசீலனையில் உள்ளது. மிக விரைவில், இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்போம் என்பதை, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மதுரை மாவட்டத்தின் வளமான வேளாண்மைக்கு, மின்சார வசதி மிக அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, ஏற்கெனவே 22 துணை மின் நிலையங்களை இயக்கி வருகின்றோம். இம் மாவட்டத்தின் தேவையைக் கருதி, 9 இடங்களில், 5 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில், மின் மாற்றிகளில், மின் சக்தித் திறனை அதிகரிப்பதற்கும்; மதுரை, எல்லிஸ் நகர், வில்லாபுரம், சாப்டூர், விளாத்திகுளம் ஆகிய 5 இடங்களில், 23 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில், துணை மின் நிலையங்களை அமைப்பதற்கும், இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள, 2268 கிராமங்களில், 2260 கிராமங்களுக்கு, உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, குறைந்த பட்சம், ஒரு குடிநீர் ஆதாரத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இன்று 16 குடிநீர்த் திட்டங்களை நான் துவக்கி வைத்துள்ளேன். அதோடு சேர்த்து, மதுரை மாவட்டத்தில் எல்லாக் கிராமங்களுக்கும், குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கூடுதல் குடிநீர் ஆதாரங்களை ஏற்படுத்துவதற்காக, 43 குடிநீர்த் திட்டங்களுக்கு, 4 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில், திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன என்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அனுப்பானடி, அவனியாபுரம் வில்லாபுரம் வீட்டு வசதித் திட்டம்; மதுரை அண்ணா நகர் மேம்பாலம்; கல் பாலத்தின் மீதான மேம்பாலம்; மதுரை-திண்டுக்கல் சாலை ரயில்வே மேம்பாலம் ஆகிய திட்டங்கள், 43 கோடியே 87 இலட்சம் ரூபாய் செலவில், மேற்கொள்ளப்பட உள்ளன.

> **ஊரும் பேரும்:**
>
> கிருஷ்ணாபுரம்
>
> எழில்மிகு சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குவது இது. திருநெல்வேலி-திருச்செந்தூர் சாலையில், திருநெல்வேலிக்கு 12 கி.மீ. தொலைவில் உள்ளது. குமார கிருஷ்ணப்பா என்ற நாயக்க மன்னரால் இச்சிற்றூர் உருவாக்கப் பட்டது.

அது மட்டுமன்றி, மதுரை மாநகரை, எழில் மிகு நகர் ஆக்குவதற்கு, 62 கோடி ரூபாய் செலவில், பல திட்டங்களுக்கு, இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். மதுரை மாநகரில், காய்கறி மொத்த வணிக வளாகம் ஒன்றினை, 33½ கோடி ரூபாய் மதிப்பிலும்; நெல் மொத்த வணிக வளாகம், 12 கோடி ரூபாய் மதிப்பிலும்; 8 கோடி ரூபாய் செலவில், வாய்க்கால்களில் தூர் அகற்றி, சீர் செய்யும் பணியும்; 72 கி.மீ. தார் சாலைகளைப் புதுப்பிக்கவும்; 30 கி.மீ. தூரத்திற்குப் புதிதாகத் தார்ச் சாலைகளை, 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கவும்; மதுரை மாநகரில் Sodium Vapour விளக்குகளை, 27 இலட்சம் ரூபாய் செலவில் பொருத்துவதற்கும், ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன என்பதைப் பெருமகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய மேம்பாட்டுப் பணிகள், மதுரை மாநகரை வெகு விரைவில், ஒரு எழிலார்ந்த நகரமாக உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

14 கோடி ரூபாய் செலவில், மதுரையிலும், பெரியகுளத்திலும், தேனியிலும், 1285 குடியிருப்புகள் கட்டப்பட்டு உள்ளன. அவற்றை நான் இந்த விழாவில் திறந்து வைத்துள்ளேன். தேனியில், தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட, 655 வீடுகள், இந்த நகரத்தின் வீட்டு வசதித் தேவையைப் பூர்த்தி செய்யும் என்று நம்புகிறேன். மதுரையில், 14 கோடி ரூபாய் செலவில், 934 வீடுகள் கட்டுவதற்கு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், ஏற்பாடு செய்துள்ளது. இத்திட்டம் முடியும்போது, மதுரையில் வீட்டு வசதி, கணிசமான அளவு பெருகி இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்கு, இந்த அரசு பதவியேற்ற நாள் முதல், பல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது. இந்த மாவட்டம் வெகு நாட்களாக, எதிர்பார்த்துக் கொண்டிருந்த இரண்டு முக்கிய திட்டங்களுக்கு, இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். 12 கோடி ரூபாய் செலவில், சண்முகா நதித் திட்டமும்; 45 கோடி ரூபாய் செலவில், பெரியார்-வைகை இணைப்புக் கால்வாய் கட்டும் திட்டமும்; 5 கோடி ரூபாய் செலவில், செல்லூர் கண்மாயில், வெள்ள நீர் வடிகால் அமைக்கும் திட்டமும்; பல்வேறு கண்மாய்களைப் புதுப்பிக்கும் பணியும்; இம்மாவட்டத்தின் நீர்ப்பாசன வளத்தைப் பெருக்குவதோடு, வேளாண்மைத் துறைக்கு, ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்று பூரணமாக நம்புகிறேன்.

இன்று தேனி நகரத்தில், மதுரைப் புறநகர் மாவட்டத்திற்கான, அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, இன்னும் சிறிது நேரத்தில் துவக்கி வைக்க உள்ளேன் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் பதவி ஏற்றுக் கொண்ட போது, தமிழகம் எந்த அளவுக்கு, 'சட்ட ஒழுங்கின்மை' என்ற கொடிய நோயினால், பாதிக்கப்பட்டு இருந்தது என்பதை, நீங்கள் நன்கு அறிவீர்கள். அதேபோன்று, தேச விரோதச் சக்திகள், எந்த அளவுக்குத் தமிழகத்தை, 'அமளிக் காடாக' மாற்றி இருந்தார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அத்தகைய தீய சக்திகளோடு போராடி, வெற்றி கண்டு, பொது அமைதியை நிலைநாட்டி; தமிழகத்தை மீண்டும் அமைதிப் பூங்காவாக மாற்ற வேண்டிய மாபெரும் பொறுப்பை, நான் மனமுவந்து ஏற்றுக் கொண்டேன். அன்று நிலவிய சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளையும்; அதற்குப் பின்னணியில் இருந்த சமூக விரோதச் சக்திகளையும், துணை நின்ற சுயநலச் சக்திகளையும், இனங்கண்டு, அவற்றோடு தர்ம யுத்தத்தை நடத்தினோம். அந்த தர்ம யுத்தத்தில், நமது காவல் துறை, தனது அனைத்துத் திறமையையும் வெளிப்படுத்தி, அரும் பணியாற்றியது என்பதைப் பெருமிதத்துடன் நினைவுகூரக் கடமைப்பட்டு உள்ளேன். எங்கள் எண்ணத்தில் நேர்மை இருந்தது; செய்கையில் தெளிவு இருந்தது; தலைமையில் விவேகம் இருந்தது. எனவே, எங்கள் தர்ம யுத்தம், வெற்றி அடைந்தது.

தங்களது கைகள் கட்டப்பட்ட நிலையில், செயலிழந்து கிடந்த தமிழகக் காவல் துறை; எனது தலைமையின்கீழ், வலிமைமிக்க, மக்கள் நலன் காக்கும் இயக்கமாக, செயல்திறன் மிக்க, சிறந்த கடமை வீரர் கூட்டமாக மாறியது. தமிழகக் காவல் துறையினர், திறமையிலும், கடமை உணர்விலும், யாருக்கும்

சளைத்தவர்கள் அல்ல! இந்தியாவிலுள்ள, மற்ற எந்தக் காவல் துறையினரையும்விட, ஆற்றல் மிக்கவர்கள், தமிழகக் காவல் துறையினர். "There is no bad soldier. There is only a bad General" என்று, ஆங்கிலத்தில் குறிப்பிடுவார்கள். அது நமது காவல் துறைக்கு மிகவும் பொருந்தும். தங்களை நடத்திச் செல்ல, தக்க தலைமை இல்லாத போர்ப் படை, எவ்வளவு தான் வலிமை மிக்கதாய் இருந்தாலும், போர் முனையில், வலிமை குன்றிய எதிரியைக் கூட, வெல்ல முடியாது. சரித்திரத்தில், இதற்கு எத்தனையோ சான்றுகளை, நான் எடுத்துக் காட்ட முடியும்.

அன்று தலைமை சரியில்லாத தால், தமிழகக் காவல் துறை, துவண்டு போனது. இன்று அதே காவல் துறை, புத்துணர்ச்சி பெற்று, புதுப் பொலிவுடன், தலை நிமிர்ந்து நிற்கின்றது.

காவல் துறையை நவீனப்படுத்தும் பணியைத் தீவிரமாகச் செயல்படுத்தத் தொடங்கிய நான்; தமிழகத்தில், மகளிருக்கு எதிராக இழைக்கப்படும், சமுதாயக் கொடுமைகளுக்குச் சட்டத்தின் உதவியோடு, ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று எண்ணினேன். மகளிரின் தகைமையும், தகுதியும், உயர்த்தப்பட வேண்டும்!

மகளிரின் மாட்சிமை, பன்மடங்கு பெருக வேண்டும்; மகளிருக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள், நிறுத்தப்பட வேண்டும் என்ற 'மகளிர் முன்னேற்றச் சிந்தனைகள்', முதலமைச்சராக நான் பதவி ஏற்பதற்கு முன்பே, எனது மனதில் ஆழமாகப் பதிந்து விட்டன. இத்தகைய முற்போக்குச் சிந்தனைகளை, முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்றால், பெண்களின் சமுதாயப் பிரச்சினைகளைப் பரிவுடன் கவனிக்க, மாவட்டந்தோறும், அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, அமைத்தே தீர வேண்டும் என்ற உறுதியை, நான் பதவி ஏற்ற உடனேயே மேற்கொண்டேன். அந்த எண்ணத்தின் வெளிப்பாடாக, அனைத்து மகளிர் காவல் நிலையங்களை உருவாக்கியுள்ளேன்.

இந்தியாவிலேயே, வேறு எந்த மாநிலமும் செய்யாத ஒரு சாதனையை, நாம் செய்துள்ளோம். 28 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, அமைக்க ஆணையிட்டுள்ளோம். அவற்றில் இதுவரை, 15 காவல் நிலையங்களை, நானே நேரில் சென்று திறந்து வைத்து உள்ளேன்.

இன்று தேனி நகரில் துவக்கி வைக்கப்படும், இந்த அனைத்து மகளிர் காவல் நிலையம், பெண் குழந்தைகள் வதை; வரதட்சணைக் கொடுமை; வரதட்சணையால் ஏற்படும் உயிரிழப்பு; பாலியல் ரீதியாக, பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள்; மற்றும் பெண்களின் 'அடிமைத்தளை' போன்றவைகளிலிருந்து, மதுரை மாவட்ட மகளிரை, முழுமையாகக் காத்து நிற்கும் என்று நான் நம்புகிறேன். மேலும், அவர்களுக்குச் சட்டத்தின் துணையோடு, நீதியினைப் பெற்றுத் தரும், ஒரு உதவிக் கரமாகவும், இந்த அனைத்து மகளிர் காவல் நிலையம் விளங்கும் என்று, நான் உறுதியாக நம்புகின்றேன்.

தேனி நகரில், வரலாறு காணாத அளவுக்கு, மிகச் சிறப்பான முறையில், இந்த விழாவினை ஏற்பாடு செய்த, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அவர்களோடு இணைந்து பணியாற்றிய, அரசு அலுவலர்களுக்கும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்ற அரசு விழாக்கள், மாநாடு போல ஒவ்வொரு முறையும், சீரோடும் சிறப்போடும் நடைபெறும் போது, அந்த விழாக்களின் வெற்றிக்குப் பின்னணியில், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், சகோதரர் திரு. கண்ணப்பன் அவர்களும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு. செங்கோட்டையன் அவர்களும், நிச்சயமாக இருப்பார்கள். தமிழகத்தின் எந்த இடத்தில், நான் கலந்து கொள்ளும் விழா நடைபெற்றாலும், அந்த விழா சிறப்புற நடைபெற, எல்லாப் பணிகளிலும் தங்களை இணைத்துக் கொண்டு, பணியாற்றுகின்ற ஆற்றலும், திறமையும் கொண்ட இந்த இரு அமைச்சர்களுக்கும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனி தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரும், திராவிட இயக்கத்தின் மூத்த

---

★ கிராமம் என்பது இன்னிசை; நகரம் என்பது நாடகம். இரண்டும் கலக்கிற போதுதான் முழுமையானதோர் இசை நாடகம் உண்டாகும்!

- லாங்ஃபெல்லோ

---

தலைவர்களில் ஒருவருமான, டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் அறிவாற்றலைப் பற்றியும், செயல் திறனைப் பற்றியும், நீங்கள் ஏற்கெனவே நன்கு அறிந்தவர்கள். தனது தொகுதியான தேனியில், மதுரை மாவட்டத்திற்கான அரசு நலத்திட்டப் பணிகள், துவக்க விழாவினை நடத்த வேண்டும் என்பதிலும்; மதுரை புறநகர் மாவட்டத்திற்கான, அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, தேனியில் தான் அமைக்க வேண்டும் என்பதிலும்; இந்த இரு விழாக்களையும், என்னை அழைத்து நடத்த வேண்டும் என்பதிலும், அவர் எவ்வளவு ஆர்வமும், தீவிரமும் காட்டினார் என்பது, எனக்கு நன்றாகத் தெரியும். நிதியமைச்சர் நாவலர் அவர்கள், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் அமைச்சரவைகளில், மிகுந்த ஈடுபாட்டுடனும், திறமையுடனும் அமைச்சராகச் செயலாற்றியவர்கள். இன்று எனது தலைமையில் இயங்கும் அமைச்சரவையிலும், அதே முனைப்புடன், மக்கள் பணியைப் பாராட்டுக் குரிய வகையில் ஆற்றி வருகிறார்கள்.

நாவலர் அவர்கள் நடமாடும் பல்கலைக்கழகம் என்ற பட்டத்தைப் பெற்றவர். அவரது குணாதிசயங்களைப் பற்றி நீங்கள் அனைவரும் ஏற்கெனவே நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. அவருடைய பேச்சில் அறிவுரை இருக்கும், அறிவு இருக்கும், இலக்கியம் இருக்கும், நகைச்சுவையும் இருக்கும். அவர் இன்றுள்ள அரசியல்வாதிகளிலேயே அரசியல் தலைவர்களிலேயே மூத்தவர். அப்படி இருந்தபோதிலும் அவருடைய வயதில் ஏறத்தாழ பாதி வயதிலேயே என்னை அவர் முதலமைச்சராக ஏற்றுக்கொண்டு அவர் இன்முகத்தோடு, நல்ல மனதோடு உள்ளப்பூர்வமாக ஒத்துழைப்புக் கொடுத்து இன்றும் ஒரு இளைஞரைப் போன்றே மிகவும் சுறுசுறுப்பாகப் பணியாற்றி வருகிறார் என்பதைப் பார்க்கும்போது நமக்கு எல்லாம் அவர் ஒரு வழிகாட்டியாக எடுத்துக்காட்டாகத் திகழுகிறார் என்று கூறுவதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன், பெருமிதம் அடைகிறேன்.

நாவலர் இல்லாத சட்டமன்றம் களைகட்டாது என்பது சட்டமன்றத்தில் அங்கம் வகித்தவர்கள் எல்லோருக்கும் தெரிந்த ஒரு உண்மை. எத்தனையோ காலமாக அவர் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி இருக்கிறார், அமைச்ச

ராகவும் பணியாற்றி இருக்கிறார். சட்ட சபையில் எத்தனையோ சமயங்களில் உணர்ச்சிகள் கொதித்து எழக்கூடிய சூழ்நிலைகள் ஏற்படும். அப்படி அவ்வப் போது அத்தகைய சூழ்நிலைகள் எழு கின்றபோதெல்லாம் இளைஞர்களின் உணர்வுகளைத் தணித்து எல்லோரும் சிரிக்கும்படியாக நகைச்சுவையாக எதை யாவது சொல்லி ஓர் விபரீதம் ஏற்பட்டு விடுமோ என்ற ஒரு அச்ச உணர்வு எல்லோர் மனதிலும் தோன்றுகின்போது அதை அப்படியே அடக்கி எல்லோரையும் சிரிக்க வைத்து மீண்டும் அமைதியை நிலைநாட்டுவது தான் நாவலர் அவர் களின் தனிச்சிறப்பு. அவருடைய சேவை இந்த நாட்டுக்கு இன்னும் பல ஆண்டு காலம் தேவை. அவருடைய அறிவுறுத்த தலைமையேற்று நடத்திச் செல்லு கின்ற பாங்கு; அவை நடவடிக்கைகளை நடத்துவதில் அவருக்குள்ள பொறுப் புணர்ச்சி; அனைத்துத் தரப்பு உறுப்பினர் களையும் அரவணைத்துச் செல்லும் திறமை; இன்று எல்லோராலும் போற்றப்படுகிறது.

1991-ஆம் ஆண்டு, மக்களின் பேராதரவுடன், நாங்கள் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த போது, சட்டமன்றப் பேரவைத் தலைவராகச் செயல்பட, எல்லாக் குணாதியசங்களையும், திறமை யையும் பெற்ற ஒருவரை, தேர்வு செய்ய வேண்டும் என்றபோது; என் மனதில் உள்ள விருப்பத்தினைத் தெரிவித்த போது, அவர், "நீங்கள் எடுத்த முடிவு தான், எனது இறுதி முடிவு" என்று, ஒரு வந்த ஒரு செயல் வீரர். ஆனால், தலைமை மீது அவர் வைத்திருக்கும் விசு வாசமும், உறுதியும், அந்தத் தயக்கத் தையும் மீறி, என் முடிவை ஏற்றுக் கொள்ளச் செய்தது.

இந்த மண்ணின் மைந்தர், சகோதரர் முத்தையா அவர்கள் என்பதை, ஏற் கெனவே குறிப்பிட்டுச் சொன்னேன். இந்த மாவட்ட மக்களின் முன்னேற்றத் திற்கு, ஆரம்பத்தில் இருந்தே, அரும்பணி ஆற்றி வருபவர். இவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின், பூரண நம் பிக்கையைப் பெற்று சிறந்த செயல் வீரராகத் திகழ்ந்தவர். புரட்சித் தலைவர் அவர்களின் காலத்தில், நமது இயக்கத் தில் ஏற்பட்ட ஒரு சிக்கலான நேரத்தில், தமிழ்நாடு முழுவதிலும் உள்ள, இயக்கத் தொண்டர்களின் உள்ள உணர்வுகளைத்



**மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைச் சந்தித்து, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. தே. ஜனார்த்தனன், அவர்கள் விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் மாவட் டத்திலுள்ள 46 நலிவுற்ற திருக் கோயில்களுக்கு ஒரு கால பூஜை நடத்துவதற்காக ரூ.1.15 இலட்ச மும், தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டத்திலுள்ள 46 நலிவுற்ற திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜை நடத்துவதற்காக ரூ.1.15 இலட்சமும், மொத்தம் 2.30 இலட் சத்திற்கான காசோலையை 'முதல் அமைச்சர் திருக்கோயில்கள் புனர மைப்பு மற்றும் பராமரிப்பு நிதி'க்கு 1.3.94 அன்று வழங்கினார்.**

லும் வழிகாட்டுதலும் எங்களுக்கு நிரந்தர மாக இருக்கவேண்டுமென்ற பெருவிருப் பத்தினை இந்த நேரத்தில் உங்கள் மத்தியில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவைத் தலைவர், சகோதரர் சேடபட்டி இரா. முத்தையா அவர்கள், இந்த மண்ணின் மைந்தர் ஆவார். சகோதரர் முத்தையா அவர்கள், அறிவாற்றலும், பேச்சாற்றலும், கூரிய மதிநுட்பமும், விவேகத்துடன் செயல்படக் கூடிய தன்மையையும், ஒருங்கே பெற்ற வர். குறுகிய காலத்திலேயே, தான் ஒரு சிறந்த பேரவைத் தலைவர் என்பதை, பல சிக்கலான சந்தர்ப்பங்களிலும், சோதனையான கால கட்டங்களிலும், நிருபித்துக் காட்டியவர், சகோதரர் முத்தையா அவர்கள். சட்டப் பேரவையை போர்ப்படை வீரராக, கடமை உணர் வினால் உந்தப்பட்ட ஒரு தொண்டராக, அதை அப்படியே ஏற்றுக்கொண்டார். ஆனால், அவர் உள் மனதிலே ஒரு தயக்கம் இருந்ததை, என்னால் மட்டும் உணர முடிந்தது. அந்தத் தயக்கத்திற்குக் காரணம், சட்டமன்றப் பேரவைத் தலைவர் என்ற பொறுப்பு, தன்னை இயக்கத்திலிருந்தும், இயக்கப் பணிகளில் இருந்தும், முழுவதுமாகத் தனிமைப் படுத்தி விடுமோ என்கின்ற, ஒரு அச்ச உணர்வு தான் என்பதை, நான் புரிந்து கொண்டேன். சகோதரர் சேடபட்டி முத்தையா அவர்கள், இந்த மாபெரும் இயக்கத்தில், ஆரம்ப காலத்தில் இருந்தே, தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு, இயக்கப் பணிகளைத் தன் உயிர் மூச்சு எனக் கருதிச் செயல்பட்டு தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற் காக; தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, ஆய்வு மேற்கொள்ள ஒரு குழுவை அமைத்தார். மிகக் கடுமையான அந்தப் பணியை மேற்கொண்ட, அந்தக் குழுவின் தலைவராக, சகோதரர் முத்தையா அவர்களைத்தான், புரட்சித் தலைவர் அவர்கள் அன்று நியமித்தார் என்றால்; புரட்சித்தலைவர் அவர் மீது, எத்தகைய ஒரு நம்பிக்கையை வைத்திருந் தார், என்பதைத் தான் அது காட்டுகின்றது.

புரட்சித் தலைவருக்குப் பின்னால், இயக்கத்தில் ஏற்பட்ட சோதனையான கால கட்டங்களில், எந்த விதமான தடுமாற்றமும் இன்றி, எனது தலை மையை ஏற்றுக் கொண்டு, இயக்கப் பணியாற்றினார். சகோதரர் முத்தையா அவர்கள். அவரது பேச்சாற்றலும்,

எழுத்தாற்றலும், அலாதியானது. அரசியல் நடப்புகளை அலசி ஆராய்ந்து, தலைமைக்கு அருமையான ஆலோசனைகளை, எடுத்துரைக்கும் திறன் படைத்தவர். எத்தனை மணி நேரம் ஆனாலும், சளைக்காமல் உழைக்கின்ற மனவுறுதியும், இனிய முகத்துடன் அனைவரிடமும் பழகும், நல்ல பண்பும் உடையவர். பல ஆண்டுகளாக இம்மாவட்டத்தின் செயலாளராக, இயக்கப் பணியாற்றி, தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்ற, இவரது கடுமையான உழைப்பும், விடா முயற்சியும், தலைமை மீதுள்ள நம்பிக்கையும் தான், இன்று இந்த அளவிற்குப் பொது வாழ்க்கையில், அவரை உயர்த்தியுள்ளது.

நான் பொது வாழ்க்கையில் ஈடுபட்ட பின்பு, பல சோதனையான கால கட்டங்களில் எல்லாம், எனக்குத் துணையாக இருந்த இவரை, அமைச்சராக்க வேண்டும் என்று தான், முதலில் விரும்பினேன். எல்லா வட்டாரங்களிலும், முத்தையா அவர்கள் அமைச்சர் ஆவார் என்றுதான் எதிர்பார்த்தார்கள். ஆனால், தகுதியான ஒரு சட்டமன்றப் பேரவைத் தலைவர் தேவை என்ற சூழ்நிலையில், இவரைத் தான் நான் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆரம்பத்தில் சட்டமன்ற நடவடிக்கைகள், அமைதியான முறையில் சென்றாலும், இதே நிலை தொடர்ந்து எப்போதும் இருக்காது என்பது, எனக்கு முன்பே தெரியும். இன்றைய அரசியல் சூழ்நிலை அப்படிப்பட்டது. பிறரது வெற்றியையும் திறமையையும் பார்த்து, தாங்கிக் கொள்கின்ற மனப்பக்குவம், இல்லாத காலம் இது. எனவே, அதனடிப்படையில், பிரச்சினைகள் எழக்கூடும்; இக்கட்டான சூழ்நிலைகள் வரக்கூடும் என்பதை, நான் ஏற்கெனவே கணித்து வைத்திருந்தேன். என் கணிப்பும் சரியாகத் தான் இருந்தது. எத்தகைய ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டாலும், அதனை திறமையாகக் கையாளுகின்ற ஆற்றலும், திறமையும் படைத்த ஒருவரைத் தான், நாம் சட்டமன்றப் பேரவைத் தலைவராகப் பெற்றிருக்கிறோம்.

பல காலம் அமைச்சராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றிய, நீண்ட அரசியல் அனுபவம் படைத்த, நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், இத்தகைய ஒரு ஆற்றல்மிக்க, சட்டமன்றப் பேரவைத் தலைவர் ஒருவரை, தனது வாழ்நாளில் கண்டதில்லையென்று, மனந்திறந்து பாராட்டியுள்ளார்; என்னிடம் தனிப்பட்ட முறையிலும் கூறியிருக்கிறார். என்னுடைய எதிர்பார்ப்புகளுக்கெல்லாம், ஒரு படி மேலே சென்று செயல்பட்டு வருகின்ற, சகோதரர் முத்தையா அவர்களைப் பார்க்கும்போது, எனக்கு மிகுந்த பெருமையாக இருக்கின்றது. அவரது அறிவாற்றலும், செயல் திறனும், மென்மேலும் வளர வேண்டும், என மனதார வாழ்த்துகின்றேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், என்னும் மாபெரும் இயக்கத்தின், மதுரைப் புறநகர் மாவட்டச் செயலாளராகவும், தமிழக அரசின் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சராகவும், திரம்படச் செயலாற்றி வரும், அன்புச் சகோதரர் திரு. அ.மா. பரமசிவன் அவர்கள், இந்த விழா சீரோடும், சிறப்போடும் நடைபெறுவதற்கு, அரும்பாடுபட்டு உள்ளார்; அயராது உழைத்துள்ளார். அவருக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு மனிதரிடத்திலும், ஒரு நல்ல குணாதிசயத்தைக் காண முடியும். சகோதரர் பரமசிவன் அவர்களைப் பொறுத்த வரையில், அதிகமாகப் பேசமாட்டார்; ஆனால், செயல்பாட்டில் தனது முழுத் திறமையையும் காட்டுவதில் வல்லவர் அவர்.

இன்று இந்த மாவட்டத்தைச் சேர்ந்த, 31,752 பேர்களுக்கு, 16 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில், பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன. அனைவருக்கும் எனது கைகளாலேயே, உதவிகளை வழங்க வேண்டும், என்ற விருப்பம் எனக்கு இருந்தாலும், நேரத்தின் அருமை கருதி, ஒரு சிலருக்கு மட்டும் நான் விழா மேடையிலே, உதவிகளை வழங்கவுள்ளேன். அதே நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு அலுவலர்களும், ஏனைய பயனாளிகளுக்கு, அரசு உதவிகளை, என் முன்னிலையிலேயே வழங்குவார்கள் என்பதனையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று அரசு உதவிகளைப் பெறுபவர்கள், இவற்றை ஒரு ஆதாரமாகக் கொண்டு, தங்களது உழைப்பைத் துணை நிறுத்தி, பாடுபாட்டார்களானால், அவர்கள் வாழ்க்கையில் வசந்தம் உண்டாகும், என்று பூரணமாக நம்புகிறேன். இன்று உதவிகளைப் பெறுபவர்கள், எல்லா வளங்களும், நலன்களும் பெற வேண்டும் என்ற, எனது நெஞ்சத்து நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், என்னைப் பார்ப்பதற்கும், எனது உரையைக் கேட்பதற்கும், பெருந்திரளாகக்கூடி, உங்கள் பேராதரவினை எப்போதும் நல்கி வருகின்ற, உங்கள் அனைவருக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொண்டு; இந்த மாவட்ட மக்கள் அனைவரும், எல்லா நலன்களும், வளங்களும் பெற வேண்டும் என்ற, எனது பேரவாவினை தெரிவித்துக் கொள்கிறேன்.



**அன்பு**

- அன்பு ஒருபோதும் எதையும் கேட்பதில்லை, ஆனால், அது எப்போதும் கொடுக்கிறது.
- அன்பு நிரந்தரமானது, முடிவற்ற தியாகமயமானது.

**அனுபவம்**

- அனுபவம் ஒன்றுதான் அறிவு பெறுவதற்கான ஒரே வழி.

**இலட்சியம்**

- ஒவ்வொருவரும் தமக்கென ஓர் இலட்சியத்தைத் தேர்ந்தெடுத்து, அதில் உறுதியாக நிற்பாராயின், மதம் பற்றிய சச்சரவுகள் எல்லாம் மறைந்துவிடும்.

**வாழ்க்கை**

- வாழ்க்கையின் முதல் நோக்கம் அறிவைத் தேடுதல்; இரண்டாவது நோக்கம் இன்பம். அறிவும், இன்பமும் விடுதலையை நோக்கி அழைத்துச் செல்கின்றன.



# சுயநலத்தோடு வாழ்வதல்ல; பிறர் நலனுக்காக உழைப்பதே இன்பம்!

## மாண்புமிகு முதல்வர் உரை

''ஈதல் இசைபட வாழ்தல், அது அல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு''

''ஒருவரின் வாழ்க்கையில் ஊதியமாக அமைவது, வறியவர்களுக்கு ஈவதன் மூலம் கிடைக்கின்ற, அழியாப் புகழ் தான்'' என்று, வள்ளுவப் பெருந்தகை கூறிச் சென்ற தத்துவத்தை, தனது வாழ்க்கையில் நிருபித்துக் காட்டியவர், பெரியவர் கலைத்தந்தை கருமுத்து தியாகராசர் அவர்கள் தான் ஈட்டிய செல்வத்தின் பெரும் பகுதியை, கல்விப் பணிக்காகவும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும் செலவழித்து; மனித நேயத்துடன், சமுதாய மேம்பாட்டுக்குப் பாடுபட்ட, அருங்கொடையாளர், அமரர் கருமுத்து தியாகராசர் அவர்களின், நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு, உங்களை எல்லாம் சந்திப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கூரிய மதி நுட்பத்துடனும், தெளிவான அறிவாற்றலுடனும், பரந்த மனித நேயத்துடனும், சமுதாயப் பணிக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட, பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றை நோக்கும்போது, ஒரு பொதுவான கருத்து இழையோடுவதைக் காணலாம். குறுகிய மனப்பான்மையுடன், தங்கள் சுயநலத்திற்காக வாழ்வதில், இன்பம் இல்லை; பரந்த மனப்பான்மையுடன், மற்றவர்களின் நலனுக்காக உழைப்பதிலே தான், இன்பம் இருக்கிறது என்பது, அத்தகைய பெருந்தகையாளர்களின் வாழ்க்கை வரலாறுகள் நமக்கு வெளிப்படுத்தும் கருத்து ஆகும்.

100 ஆண்டுகள் ஒருவர் வாழலாம்; அதையே ஒரு பெருமைப்படத் தக்க விஷயமாகக் கூடக் கருதலாம். ஆனால். ஒரு மனிதரின் மறைவிற்குப் பின்பு, அவரது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும்போது; அவர் ஏற்படுத்திச் சென்ற கல்விக் கூடங்களும், தொழிற் சாலைகளும், ஒரு நூற்றாண்டுக்கு அல்ல, பல நூற்றாண்டுகளுக்கு, அவரது அழியாப் புகழைப் பரப்பிக் கொண்டிருக்கும். வறுமையில் வாடிய பலர் இருக்கலாம்; இளமையில் தகுந்த கல்வியைப் பெற முடியாதவர்கள் பலர் இருக்கலாம்; பின்னர் செல்வந்தர்களாகவும், தொழில் அதிபர்களாகவும், அவர்கள் உயர்ந்தும் இருக்கலாம். சரித்திரத்தில் நிறைய பேர்களை இதுபோன்று காண முடியும்.

ஆனால், அவர்கள் ஒரு குறுகிய வட்டத்திலே, தங்களைத் தங்களுக்காகவே வளர்த்துக் கொண்டவர்கள் என்ற பெருமையைத் தவிர, வேறு எந்தப் பெருமைக்கு உரியவர்கள்? உழைப்பால்

**7.3.'94 அன்று மதுரையில்- கருத்து தியாகராசர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'கருத்து தியாகராசர் நினைவு நூலகக் கட்டடத்'தைத் திறந்து வைத்தார்; அவரது வரலாற்று நூலினையும் வெளியிட்டார்; கல்லூரியில் சிறப்புறப் பணியாற்றிய ஆசிரியர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். கல்லூரி முதல்வர் திருமதி ராதா தியாகராசன் வரவேற்புரையுடன் தொடங்கிய இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை விவரம் இது:**

உயர்ந்தவர்கள், என்ற ஒரு பெருமையைத் தவிர, வேறு என்ன பெருமை இருக்கிறது? பெரியவர் தியாகராசர் போன்றவர்கள், கடுமையாக உழைத்து முன்னேறியது மட்டும் அல்லாமல்; தாம் பெற்ற பெருஞ்செல்வத்தையும், தனக்குக் கிட்டாத கல்வியையும், மற்றவர்களுக்குக் கிடைக்கச் செய்கின்ற, அருங்கொடையாளராக உயர்ந்து நின்றதால் தான், நாம் இன்றும் அவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடி மகிழ்ந்து கொண்டிருக்கிறோம்.

''அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாராயிரம் நாட்டல்''
''அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்''

என்று, ''ஒருவரின் கல்விக் கண்ணைத் திறந்து வைப்பது தான், மகத்தான ஒரு தொண்டு'' என்று, மகாகவி பாரதியார் கூறியதை, இப்போது நினைவுகூர்வது, பொருத்தமுடையதாக இருக்கும். மனித நேயமும், புனித எண்ணமும் கொண்டவர்கள் தான், கொடையாளர்களாக இருக்க முடியும். அதிலும், தொலை நோக்குப் பார்வையுடன், நாட்டுப் பற்று உள்ளவர்கள் தான், கல்விப் பணிக்குத் தங்களை அர்ப்பணிப்பவர்களாக விளங்குவார்கள்.

அத்தகைய ஒரு பெரியவரின், வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும், ''ஆலை அரசர் கருமுத்து தியாகராசர்'', என்னும் நூலை, இந்தச் சிறப்பான விழாவில் வெளியிட்டதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன். அவருடைய குணாதிசயங்களை அறிந்து, அவரோடு வாழ்க்கை நடத்திய, அவரது துணைவியார், திருமதி டாக்டர் ராதா தியாகராசன் அவர்கள், இந்த நூலை எழுதியிருப்பது, சந்தேகத்திற்கு இடமின்றி, பெண் இனத்திற்கே பெருமை தரக் கூடிய ஒரு செயல். தன் கணவரின் வாழ்க்கை வரலாற்றை, எழுதுகின்ற வாய்ப்பும், எழுதுகின்ற திறமையும், எத்தனைப் பேருக்குக் கிடைக்கும்?

புகழ் பெற்ற, ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்கு பின்னால், ஒரு பெண்மணி இருக்கிறாள், என்பதை நிரூபித்துக் காட்டியவர், டாக்டர் ராதா தியாகராசன் அவர்கள். அவரது இந்த இனிய முயற்சிக்கு, எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியவர் தியாகராசர் நூற்றாண்டு விழா நினைவு நூலகக் கட்டடத்தையும், இன்று திறந்து வைத்ததில், நான் பெருமிதம் அடைகின்றேன். எனக்கு முன்னால் பேசியவர்கள், அவருடைய வாழ்க்கை வரலாற்றையும்; சோதனைகளைக் கண்டு துவளாத அவரது மனதையும்; அயராத உழைப்பையும்; கல்விக்கும், தொழிலாளர் நலனுக்கும், அவர் ஆற்றிய தொண்டைப் பற்றியும், வெகு சிறப்பாக எடுத்துரைத்தார்கள். அவற்றைக் கேட்கும் போது, உண்மையிலேயே நமக்குப் பெருமை ஏற்படுகின்றது.

★ திருவள்ளுவர் பிறந்த நாட்டுக்கு உரியவர்கள் நாம்; அவர் வாழ்ந்த மண்ணில் வாழத்தக்கவர்கள் நாம் என்பதைப் பேச்சினால் அல்ல செயலினால் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும்.

- அறிஞர் அண்ணா

பெரியவர் தியாகராசர் அவர்களின் வாழ்க்கையில், என் மனத்திற்குப் படித்து அம்சங்கள் மூன்றை மட்டும், உங்களிடையே பகிர்ந்து கொள்வதில், நான் மகிழ்ச்சி அடைகிறேன். தான் மேற்கொண்ட எந்த ஒரு பணியிலும், சுயநல எண்ணங்களைத் தாண்டி, மற்றவர்களின் வளர்ச்சிக்கும், உயர்விற்கும் வழி வகுத்து, பெரியவர் தியாகராசர் செயல்பட்ட விதம், என்னைக் கவர்ந்த, ஒரு உயர்ந்த குணம் ஆகும்.

தனது இளம் வயதில், இலங்கையில் ''Morning Leader'' என்ற செய்தித் தாளின், துணை ஆசிரியராகப் பணி புரிந்து அதே சமயத்தில்; இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்கும், அவர்களின் பணிப் பாதுகாப்பிற்கும் போராடினார். தொழிலாளர்களின் துயரத்தையும், துன்பத்தையும், இங்கிலாந்தின் White Washing Commission முன்பு, திறம்பட வாதிட்டு, தான் தொழிலாளர் நலனில், அக்கறை உள்ள ஒருவர் என்பதை எடுத்துக் காட்டியவர், பெரியவர் தியாகராசர் அவர்கள்.

தனது முப்பதாவது வயதில், இந்தியாவிற்குத் திரும்பி வந்த போது, ஸ்ரீமீனாட்சி பஞ்சாலையை அமைத்ததின் காரணமே, மதுரை ஆலையில் இருந்து, வேலை இழந்த தொழிலாளர்களுக்கு, மறுவாழ்விற்கு வழி வகுக்க வேண்டுமே, என்ற ஒரே உயர்ந்த எண்ணம் தான்.

பின்னர் தான் ஈட்டிய செல்வத்தில் பெரும் பகுதியைப் பரந்த மனிதாபிமானத்துடன், கல்விப் பணிக்கென ஈந்தார். 1949-இல் தியாகராசர் கலைக் கல்லூரி; 1956-இல் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி; சேலத்தில் தியாகராசர் பாலிடெக்னிக் என்று; பல கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தினார். அவை அனைத்தும் இன்றும், அவரது புகழைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

கல்விக் கூடங்கள், வியாபாரத் தலங்களாக மாறக் கூடாது என்பதற்காக, அவரது கல்வி நிலையங்கள் அனைத்திலும் ஆரம்பத்திலிருந்து இன்று வரை, Capitation Fee வசூலிக்கப்படுவதில்லை. அவரது வழித் தோன்றல்களும், அதே உயரிய கொள்கையினை, இன்று வரை கடைப்பிடித்து வருகிறார்கள், என்பதையும் அறியும்போது, எனக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அவர் எங்கெங்கு ஆலைகளை நிறுவினாரோ, அங்கெல்லாம் தொழிலாளர்களின் நலன் காக்க, தொழிலாளர்களுக்கெனக் குடியிருப்புகளை ஏற்படுத்தினார்; தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பயில, பள்ளிகளை ஏற்படுத்தினார். இவ்வாறு தனது ஒவ்வொரு பணியிலும், தனது வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும், பொது நலனை முன் நிறுத்தி செயல்பட்டிருக்கும் பாங்கு, என்னைக் கவர்ந்த ஒரு அம்சம் ஆகும்.

சங்கம் வளர்த்த இந்த மதுரை மாநகரில், அவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டினை எடுத்துரைப்பது, மிகையாகாது என்று கருதுகிறேன். 1937 மற்றும் 1965, ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற, இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில், தீவிரமாகப் பங்கு கொண்டார். தமிழ் மொழி, இதர மொழிகளின் ஆதிக்கத்தினால், தனது தனித் தன்மையை இழந்துவிடுமோ என்று, பலர் அஞ்சிய கால கட்டத்தில், தமிழ் மொழியின் தனித் தன்மையைக் காப்பாற்ற, 'தமிழ்நாடு' என்ற செய்தித் தாளை உருவாக்கினார். இந்தச் செய்தித் தாளில், உயர்ந்த தமிழ் நடையில் எழுதி, ஒரு புதிய விழிப் புணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்தினார்.

தமிழ் மொழியின் தனித் தன்மையைப் பாதுகாக்க, அமரர் தியாகராசர் எடுத்த முயற்சிகள், பலருக்குத் தெரியாது. அவரது தமிழ் மொழிப் பற்றும், தமிழ் மொழியின் தனித் தன்மையை, பேணிக் காத்த பெருந்தன்மையும், என்னைக் கவர்ந்த இரண்டாவது அம்சம் ஆகும்.

பெரியவர் தியாகராசர் அவர்கள், தனது தனிப் பாணியை, தான் கட்டி முடித்து, அத்தனைக் கட்டடங்களிலும் காட்டிய பாங்கு, என்னைக் கவர்ந்த

மூன்றாவது அம்சம் ஆகும். தான் வசிக்கும் வீடாக இருந்தாலும், தொழிலாளர்களின் குடியிருப்பாக இருந்தாலும், ஆலைக் கட்டடமாக இருந்தாலும், அடுக்கு மாளிகையாக இருந்தாலும், அந்தக் கட்டடங்களின் அமைப்பில், தனது தனி முத்திரையைப் பதித்தவர். அவர் கட்டிய கட்டடங்கள், இன்றும் அவரது கட்டடக் கலை ஆர்வத்தை, பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன என்றால், அது மிகையாகாது.

தனக்கு கிடைக்காத கல்வியை, மற்றவர்களுக்குக் கிடைக்கச் செய்து, மகிழ்கின்ற மனப் பாங்கு, பெரியவர் தியாகராசரைப் போன்ற, ஒரு சில பேருக்கு மட்டும் தான் வரும்.

''செல்வத்தில் எல்லாம் தலையாய செல்வம், கல்விச் செல்வம்''. ஒரு சமுதாயம் மேம்பாடு அடைய வேண்டுமென்றால், அதன் ஒவ்வொரு உறுப்பினரும், கற்றவராய், கற்றுத் தேர்ந்தவராய் விளங்க வேண்டும் என்பது, வரலாறு காட்டுகின்ற உண்மை. மக்களாட்சி தத்துவத்தில் இயங்குகின்ற, அனைத்து அரசுகளுமே, கல்விக்கெனப் பெரும் தொகையை, இன்று செலவு செய்து வருகின்றன. தமிழக அரசு, கடுமையான நிதி நெருக்கடியிலும், தொடர்ந்து கல்வித் துறைக்குப் பெருந் தொகையை ஒதுக்கீடு செய்து, பல நல்ல திட்டங்களுக்குச் செலவழித்து வருகின்றது.

ஒருபுறம், அறிவொளி இயக்கத்தின் மூலம், ஒரு குறிப்பிட்ட வயதுக்குள் உள்ளவர்களுக்கு, எழுத்தறிவுக் கல்வியைப் போதிக்கின்றோம். மற்றொரு புறம், எதிர்காலக் குடிமக்களாகிய அனைத்துக் குழந்தைகளும், பொருளாதாரப் பேதமின்றி, தொக்கக் கல்வி பெற வேண்டும் என்பதற்காக, திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றோம்.

பள்ளிக்குச் செல்லாத, அல்லது, பள்ளியிலிருந்து இடையில் நின்று விட்ட குழந்தைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கும் அடிப்படைக் கல்வியை வழங்கிட, மாபெரும் திட்டமொன்றைத் தீட்டி, செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். படித்து வேலையற்ற, 1,50,000 இளைஞர்களைக் கொண்டு, இத்திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறோம்.

உயர் கல்வியை முறைப்படுத்தவும், அதன் தரத்தை உயர்த்தவும், Tamil Nadu Council for Higher Education, என்ற அமைப்பை, எங்கள் அரசு ஏற்படுத்தி உள்ளது.

கல்வி என்பது, ஏதோ அரசாங்கம் மட்டும் எடுத்து செய்கின்ற பணி அல்ல என்பதை, பெரியவர் தியாகராசர் அவர்களின் வாழ்க்கையில் இருந்து, மற்றவர்களும் உணர்ந்து செயல்பட்டால், தமிழகம் வெகு விரைவில், ஒரு தன்னிகரற்ற நிலையை அடைந்து விடும் என்பதில், எனக்கு ஐயம் இல்லை.

பொறியியல் கல்வியில், தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ள கல்லூரி, இந்த தியாகராசர் பொறியியல் கல்லூரி. இக்கல்லூரி உருவாக்கிய பொறியியல் நிபுணர்கள், இந்தச் சமுதாயத்திற்கு ஆற்றி வரும் தொண்டை, நான் மனம் திறந்து பாராட்டக் கடமைப்பட்டு உள்ளேன். அதே பாரம்பரியத்துடன், இந்தப் பொறியியல் கல்லூரியில் பயிலுகின்ற மாணவர்கள், மதுரை மாநகரின், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பிலும்; குப்பைக் கூளங்களிலிருந்து, கட்டடப் பொருட்களை உருவாக்குகின்ற ஆய்வுகளிலும், ஈடுபட்டுள்ளார்கள் என்பதையும் அறியும் போது, நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

Hyderabad-இல் அமைந்துள்ள, மத்திய அரசின் நிறுவனமான, Defence Research Development Laboratory-யுடன் இணைந்து, இக்கல்லூரியின் ஆசிரியப் பெருமக்களும், மாணவ மணிகளும், 'அக்னி' ஏவுகணையை விண்ணில் செலுத்தும், ஆக்கப்பூர்வமான பணியில், பெரும் பங்காற்றி இருக்கிறார்கள் என்பதை, உங்கள் மத்தியில் தெரிவித்துக் கொள்வதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த மகத்தான பணியில் ஈடுபட்ட அனைவருக்கும், முதலமைச்சர் என்ற முறையிலும், எனது தனிப்பட்ட முறையிலும், ஏன் உங்கள் அனைவரின் சார்பிலும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். வளரும் தமிழகம், எதிர்கால இந்தியாவிற்கு, வழிகாட்டியாக விளங்கப் போகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

உங்கள் வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என்பதற்கு, இந்தக் கல்வி நிலையத்தை நிறுவிய, பெரியவர் தியாகராசர் அவர்களை, வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும் என்பதே, எனது அன்பு வேண்டுகோள். அவரது உழைப்பு; விடா முயற்சி; சிக்கனமான வாழ்க்கை முறை; கல்வித் தொண்டு; இறவாப் புகழ்; இவற்றை வாழ்க்கை நெறிகளாகக் கொண்டு, வாழ்வில் முன்னேறி, பெரும் புகழும் பெற வேண்டும் என்ற, எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவில் பரிசு பெற்ற, ஆசிரியப் பெருமக்களுக்கு மாணவ, மாணவியர்களுக்கு எனது உளங்கனிந்த பாராட்டுதல்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். பெரியவர் தியாகராசர் விட்டுச் சென்ற கல்விப் பணியைத் தொடர்ந்து, தொய்வின்றி ஆற்றி வரும், டாக்டர் ராதா தியாகராசர் அவர்களுக்கும்; பெரியவரின் புதல்வர், திரு கருமுத்துக் கண்ணன் அவர்களுக்கும், எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெரியவர் தியாகராசர் தொடங்கிய நற்பணிகள், அவரது புகழைப் போல, மென்மேலும் வளர வேண்டும்; ஆல் போல் தழைத்து, உயர வேண்டும் என்ற, எனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்



தாய்மொழி மற்றும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக 1959-ஆம் ஆண்டு 'தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்' என்ற அமைப்பு ஒன்றைத் தமிழக அரசு அமைத்தது. இந்த அமைப்பு சில ஆண்டுகள் பணியாற்றிய பின்பு புதுப்பிக்க படாமல் இருந்தது. பின்னர் புதுப்பிக்கப்பட்டது. தற்போது சில ஆண்டுகளாகச் செயல்படாமல் உள்ளது. பல தமிழ் அறிஞர்கள் இந்த மன்றம் மீண்டும் செயல்படவேண்டும் என்று விரும்பியதை அறிந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இந்த மன்றத்தை வலுவுள்ள ஒரு அமைப்பாக புதிதாக அமைக்க வேண்டும் என ஆணையிட்டார்கள். எனவே, தமிழக அரசு ஏற்கெனவே இருந்து வந்த 'தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தை'ப் புதுப்பிக்கும் வகையிலும், தமிழ்ச் சொல்லாக்கப் பணிகளைச் செயல்படுத்தும் வகையிலும், ஒருங்கே பணிகளை இணைத்து மேற்கொள்ள ஏதுவாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆணையின் பேரில் 'தமிழ் வளர்ச்சி மன்றம்' (Tamil Development Council) என்று புதிய அமைப்பினை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மொழியின் மேம்பாட்டுக்கும், அதன் சிறப்புக்கள் மென்மேலும் பெருகி, தமிழ் மொழியில் நலன்கள் பேணப்படுவதற்கும் பணியாற்றக் கூடிய அமைப்பாக, இந்தப் புதிய 'தமிழ் வளர்ச்சி மன்றம்' செயல்படும். இந்த மன்றம் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் இது ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று முறை கூடி முடிவுகளை எடுக்கும் வகையில் செயல்படும். 36 தமிழறிஞர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள். அவர்கள் விவரம் பின் வருமாறு:

1. மாண்புமிகு கல்வியமைச்சர் — தலைவர்
2. திரு. கி.ஆ.பெ. விசுவநாதன், திருச்சிராப்பள்ளி — உறுப்பினர்
3. டாக்டர் ம .பொ. சிவஞானம், சென்னை — உறுப்பினர்
4. நீதிபதி மு.மு. இஸ்மாயில், சென்னை — உறுப்பினர்
5. தவத்திரு குன்றக்குடி அடிகளார், காரைக்குடி — உறுப்பினர்
6. ஐராவதம் மகாதேவன், சென்னை — உறுப்பினர்
7. டாக்டர் வி.அய். சுப்பிரமணியம், திருவனந்தபுரம் — உறுப்பினர்
8. டாக்டர் வா.செ. குழந்தைசாமி, புதுதில்லி — உறுப்பினர்
9. டாக்டர் ஆனந்தகிருஷ்ணன், துணைவேந்தர், அண்ணாபல்கலைக்கழகம் — உறுப்பினர்
10. டாக்டர் ஔவை நடராசன், துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் — உறுப்பினர்
11. டாக்டர் இராதா தியாகராசன், மதுரை — உறுப்பினர்
12. டாக்டர் லலிதா காமேஸ்வரன், சென்னை — உறுப்பினர்
13. டாக்டர் தி. முத்துகண்ணப்பர், சென்னை — உறுப்பினர்
14. டாக்டர் க. மீனாட்சிசுந்தரம், கோவை — உறுப்பினர்
15. டாக்டர் இராம பெரியகருப்பன், (தமிழண்ணல்) மதுரை — உறுப்பினர்
16. திரு. அ.மு. பரமசிவானந்தம், (தமிழண்ணல்) மதுரை — உறுப்பினர்
17. புலவர் இரா. இளங்குமரன், மதுரை — உறுப்பினர்
18. டாக்டர் க.ப. அறவாணன், புதுவை — உறுப்பினர்
19. டாக்டர் பு.பா. இராஜராஜேஸ்வரி, சென்னை — உறுப்பினர்
20. டாக்டர் ந. சுப்புரெட்டியார், சென்னை — உறுப்பினர்
21. டாக்டர் இஸ்ரவேல், மதுரை — உறுப்பினர்
22. திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி, தினமலர், சென்னை — உறுப்பினர்

# இளம் நீச்சல் வீரர் : அரசின் உதவி



தலைமைச் செயலகத்தில், 10.4.94 அன்று, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, தமிழ்நாட்டின் மிக இளைய நீச்சல் வீரர் 12 வயது குற்றாலீஸ்வரன் சந்தித்து ஆசி பெற்றார். மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், செல்வன் குற்றாலீஸ்வரன் இதுவரை பங்குகொண்ட நீச்சல் போட்டிகளைப் பற்றியும் அதிக தூர நீச்சல் போட்டியில் கலந்துகொண்ட விவரங்கள் குறித்தும் கேட்டறிந்து அவனை மனதாரப் பாராட்டிய தோடு, தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அவனைத் தத்து எடுத்துக்கொள்ளும் என்றும், அவனை ஒரு சிறந்த நீச்சல் வீரனாகக் கொண்டுவருவதற்கு வேண்டிய அனைத்து ஏற் பாடுகளையும் அரசுத் தரப்பில் விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் செய்துதரும் என்றும் அறிவித்தார்.

இந்த அறிவிப்பின்படி, செல்வன் குற்றாலீஸ் வரனுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையும் நீச்சல் போட்டிகளில் பயிற்சி பெறுவதற்கான செலவும் பயிற்சியாளருக்குரிய ஊதியமும் நீண்ட தூர நீச்சல் போட்டிகளில் பங்கு கொள்வதற்குரிய பண உதவியும் தமிழ்நாடு விளையாட்டு மேம் பாட்டு ஆணையம் செய்து தரவும் ஆணை யிட்டுள்ளார்.

செல்வன் குற்றாலீஸ்வரன், இராமேஸ்வரத் திலிருந்து தலைமன்னார் வரை இடைப்பட்ட கடல் பகுதியைத் தான் நீந்தி கடக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதற்குரிய அனைத்து ஏற் பாடுகளையும் தமிழக அரசு செய்து தரும் என்று அவனிடம் தெரிவித்தார். மேலும், சிறுவன் குற்றாலீஸ்வரன் நல்ல முறையில் பயிற்சி பெற்று உலக அரங்கில் ஒரு பெரிய நீச்சல் வீரனாக வரவேண்டும் என்ற தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

---

23. டாக்டர் அண்ணாமலை, இயக்குநர், இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனம், மைசூர் — உறுப்பினர்

24. இயக்குநர், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறு வனம், சென்னை — உறுப்பினர்

25. டாக்டர் ஜான் சாமுவேல், இயக்குநர், ஆசியவியல் நிறுவனம், சென்னை. — உறுப்பினர்

26. டாக்டர் டி. தயானந்தன் பிரான்சிஸ், கிறிஸ்துவ இலக்கியச் சங்கம், சென்னை — உறுப்பினர்

27. திரு. கோ. முத்துப்பிள்ளை, சென்னை — உறுப்பினர்

28. தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு, சென்னை — உறுப்பினர்

29. அரசு செயலாளர், கல்வித்துறை, சென்னை — உறுப்பினர்

30. இயக்குநர், தொல்லியல் துறை, சென்னை — உறுப்பினர்

31. இயக்குநர், கல்லூரிக் கல்வித்துறை, சென்னை — உறுப்பினர்

32. இயக்குநர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம், சென்னை — உறுப்பினர்

33. தலைவர், ஆட்சிமொழி (சட்ட) ஆணையம், சென்னை — உறுப்பினர்

34. திரு. தெய்வசிகாமணி, இயக்குநர், தமிழ்ப் பிரிவு, சட்டத்துறை, சென்னை — உறுப்பினர்

35. அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி பண் பாட்டுத் துறை, சென்னை — உறுப்பினர்

36. தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை — உறுப்பினர்-செயலர்

தமிழ் வளர்ச்சி மன்றத்தின் பணிகள் பின் வருமாறு:

1. தமிழ்மொழி மேம்பாட்டுக்கும், காப்புக்கும் தக்கதோர் உயர்நிலை அமைப்பாகச் செயற் படுதல்;

2. தமிழ் வளர்ச்சித்துறை மேற்கொண்டுள்ள தமிழ் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் தொடர்பான ஆய்வுரை வழங்கவும், தொடர் புடைய பிற செயற்பாடுகளுடன் அவற்றை ஒருங் கிணைத்தும், தமிழ்வளர்ச்சிக்கு உறுதுணை புரிதல்;

3. தமிழ்ச் சொல்லாக்கப் பணியில் சீர்மை கண்டு ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை நிலைப்படுத்த (Standardization) அவற்றைச் சீரான முறையில் அனைவரும் பயன் படுத்த வகை செய்தல்;

4. பன்னாட்டுச் சொற்கள் குறியீடுகள், சூத்திரங்கள் ஆகியவற்றைத் தமிழில் எடுத்தாள்வதற்கான அடிப்படை விதிகளை வகுத்தளித்தல்;

5. தமிழ்ப் பெயர் தமிழ்ச் சொற்கள் ஆகியவற்றை ரோமன் எழுத்தில் எழுத வேண்டிய நிலையில் நெடிலைக் குறிக்கவும், ல,ள,ழ,வ,ன,ற போன்ற ஒலிகளை ரோமன் வரி வடிவத்தின் மூலம் குறிக்கவும் தற்போது வழக்கிலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளை விடுத்து ஒருமைப்பாடுக்கான வகை செய்தல்;

6. ஒலிபெயர்ப்பதா, மொழி பெயர்ப்பதா என்ற கேள்விக்கு ஒரு முறையின்னையும் தமிழ் மொழியில் இல்லாத ஓசையினைக் குறிப்பிட வழிவகையினையும் காண வகைசெய்தல்;

7. (இலங்கை) ஸ்ரீலங்கா, சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாடுகளில் நடைபெறும் தமிழ்ச் சொல்லாக்கப் பணிகள் தொடர்பாகக் கருத்துப் பரிமாற்றம் காண வகை செய்தல்;

8. நடைமுறையில் ஏற்கப்பெற்ற - நிலைப்படுத்தப்பட்ட தமிழ்ச் சொற்கள் மக்கள் செய்தி வாயிலாக (mass media) வானொலி, தொலைக் காட்சி, நாளிதழ்கள் போன்றவற்றில் முழுமையாகவும், முறையாகவும் பயன்படுத்த வகை செய்தல்;

9. பொதுமக்களுக்கும், பல்கலைக் கழக மாணவர்களுக்கும் பயன்படுத்தத் தக்கவகையில் இக்கால அறிவியல், தொழில்நுட்பவியல் தொடர்பான நூல்களைத் தமிழில் தயாரிக்க உறுதுணை புரிதல்;

10. தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களின் உதவியுடன் அறிவியல், கலையியலுக்குத் தொடர்புடைய பல்வேறு பொருள்கள் குறித்து தொழில்நுட்பச் சொற்களைக் கொண்ட முழுமையான அகர முதலிகளைத் தயாரித்து வெளியிட வகை செய்தல், சொற்கள் பழக்கமும், ஏற்பும் பெறுவதற்குட்பட்டு அவ்வகர முதலிகளைக் காலமுறைதோறும் திருத்தியமைக்க வகை செய்தல்;

11. மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு பொதுமக்கள் பரவலாக விரும்பிப் படிப்பதற்குரிய வெளியீடுகளை வெளியிடும் அமைப்புகளின் பணிகளை ஒருங்கிணைத்தல், மேம்படுத்தல், குறிப்பாகக் கிராமப் பகுதிகளில் நூலக அமைப்புப் பணிகளில் ஒருங்கிணைத்துச் செயற்பட வகை செய்தல்;

12. மக்கள் செய்தி வாயிலாக (mass media) காணப்பெறும் தமிழ் வழக்குகளில் அமைந்த தவறுகளைத் திருத்தியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளல்;

13. தமிழில் இதுவரை மேற்கொள்ளப்பெற்ற எழுத்துச் சீரமைப்புக்குக் கூடுதலாகத் தமிழ் மொழி மேம்பாட்டுக்கு வேண்டப்பெறும் எழுத்துச் சீரமைப்புக் குறித்துக் கருதி முடிவு செய்தல்;

14. தமிழ்நாட்டிலுள்ள ஊர்களுக்குரிய தவறான பெயர் வழக்குகளை மாநிலப் பெயராணைக் குழுவுடன் (State place Name Authority) ஒருங்கிணைந்து, திருத்தியமைக்க வகை செய்தல்;

15. தமிழ்நாட்டின் பண்டைச் சிறப்பை உலகுக்கு எடுத்துரைக்கத் தக்க வகையில் தொடர்புடைய அமைப்புகளுடன் ஒருங்கிணைத்து நடவடிக்கை மேற்கொள்ளல்;

16. தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களிலும், பிற மாநிலங்களிலும் அயல்நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள தமிழியல் ஆய்வுகளை (Tamilology Research) தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் உதவியுடன் காலவாரியாகத் தலைப்பு ஆய்வாளர் பெயர், முதலிய விவரங்களைத் தொகுத்துக் கையேடாக வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளல்;

17. தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிராதோர் எளியமுறையில், குறுகிய கால அளவில் தமிழ்மொழியைக் கற்றுத் தேர்ச்சி பெறப் பாடநூல்கள், ஒலி, ஒளி நாடாக்கள் போன்றவற்றைத் துறை வல்லார் துணை கொண்டு, வடிவமைத்துத் தயாரித்து வெளியிட வகை செய்தல்;

18. ஆண்டுதோறும் தமிழில் வெளியிடும் நூல்களை விடுபாடின்றித் தக்கவாறு தொகுத்து அட்டவணைப்படுத்தி அப்போதைக்கப்போது காலமுறைதோறும் வெளியிட வகை செய்தல்;

19. இதுவரை அச்சேறாத தொன்மை வாய்ந்த தமிழ் நூல்களை அச்சேற்ற வகை செய்தல் ஆகியவைகள் ஆகும்.

## ஊரும் பேரும்

### செங்கோட்டை

செங்கோட்டை, 81 ச.மைல் பரப்பு கொண்டது. 1950-ஆம் ஆண்டுகளில் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்துடன் இணைந்தது.

செங்கோட்டை, 200 ஆண்டுகளுக்கும் மேலாக திருவிதாங்கூர் மன்னர் ஆட்சியிலிருந்தது. 1949-1956 வரை திருவாங்கூர்-கொச்சி இராஜ்ஜியத்தில் இணைந்திருந்த இது, 1954-இல், மொழி வழி மாநில அமைப்புக் குழுவின் பரிந்துரையின் மீது, தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டது.

வேளாண்மையே இங்கு முக்கியத் தொழிலாகும். ஆனைக்கொம்பன், சிறுமணி ஆகியவை பயிராகின்றன. சோளம், உளுந்து, மிளகாய், வெங்காயம் முதலானவையும் பயிராகின்றன. மண்பாண்டம், பிரம்புக் கூடைகள் தயாரிப்புக்குப் பெயர் பெற்ற ஊர். செங்கோட்டை மண்வெட்டி தோசைக்கல் ஆகியவை பிரபலமானவை, செவ்வாய்க் கிழமைதோறும் இங்குச் சந்தை கூடுகிறது.

# மாண்புமிகு முதல்வர் வரவேற்பு

இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் தேவையான தூண்டுகோலை வழங்கும் 1994-95-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை யின் அம்சங்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வரவேற்றுள்ளார்.



துரித வளர்ச்சியை நோக்கிச் செல்லுவதற்குத் தேவையான உந்து சக்தியை நிதிநிலை அறிக்கை யில் அறிவிக்கப்பட்டுள்ள பல்வேறு அம்சங்கள் வழங்கும் என்று நம்புவதாகத் தெரிவித்தார்.

எனினும் பொது நிர்வாக முறையில், அரிசி, டீசல், எல்.பி.ஜி நிலக்கரியின் மீதான சரக்கு வரி ஆகியவைகளின் மீது மத்திய அரசு உயர்த்தியுள்ள விலை, பொதுமக்களுக்குக் கூடுதல் சுமையாக அமையும், எனவே விலைவாசியைக் கட்டுபாட்டுக் குள் வைத்திருக்க வேண்டுமென்பது மிகவும் அவசியமாகிறது. ஆனால் நிதிநிலை அறிக்கையின் பணவீக்கம் தொடர்ந்து அதிகமாகவே இருக்கும் என்றும் கூறினார். பணவீக்கம் அதிக அளவிலேயே இருந்துவிடாமல் இருப்பதை முடிவு செய்யத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், என்றும் அவர் வலியுறுத்தினார். பணவீக்கத்தைக் கட்டுக்குள் கொண்டுவரவேண்டும் என்ற மிக முக்கியமான தேவையைக் கருத்திற்கொண்டு, தற்காலிக அரசு செலவினங்களை (Adhoc Treasury Bills) நம்பியிருப் பதைக் குறைக்க எடுக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வரவேற்கிறோம் என்றார் அவர்.

சர்வதேசப் பொருளாதாரத்துடன் இணைந்து இந்தியப் பொருளாதாரம் முன்னேறும் வகையில் நடப்புக் கணக்கு மீதான ரூபாய் நாணயமாக்கம் பற்றிய முடிவு வரவேற்கத்தக்கது என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்.

ஏற்றுமதி மூலம் சம்பாதிக்கும் அந்நியச் செலா வணியை ஏற்றுமதியாளர்களே வைத்துக்கொள்ள லாம் என்ற தாராளக் கொள்கையையும் ஏற்றுமதி வர்த்தக மண்டலங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சிறப்புச் சலுகைகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவேற்றார். நிதிநிறுவனங்கள் மற்றும் வங்கிகள் வழங்கும் கடனுக்கு வட்டிவிகிதம் ஒரு சதவிகிதம் குறைக்கப்பட்டிருப்பது, புதிய முத லீட்டை அவ்வளவாக ஊக்கமளிப்பதாகாது என்றும் அவர் கூறினார். கடந்த ஆண்டு தெரிந் தெடுக்கப்பட்ட யூனியன் பிரதேசங்கள், தொழில் ரீதியாகப் பின்தங்கிய மாவட்டங்களுக்கு ஐந் தாண்டு வரி விடுமுறை வழங்கவேண்டுமென்ற தம்முடைய ஆலோசனையை ஏற்றுக்கொண்டதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவேற்றார்.

1994-95-ஆம் திட்டத்தில், கிராம மேம் பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டி ருப்பதையும், புதிய வேலைவாய்ப்பு உறுதித் திட் டத்திற்கு ஒதுக்கீட்டை இரண்டு மடங்காக உயர்த் தும் நடவடிக்கையையும் அவர் வரவேற்றார். அதுபோலவே கல்வி, குறிப்பாக ஆரம்பக் கல்வி மற்றும் தோட்டக்கலைக்கான ஒதுக்கீடு உயர்த்தப் பட்டிருப்பதையும் வரவேற்றார். அதே நேரத்தில் மாநிலங்களுக்கான திட்ட உதவி ஓரளவே உயர்த் தப்பட்டுள்ளது. கிராமப்புற மேம்பாடு மற்றும் சமூகத் துறைகளில் முக்கியத் திட்டங்களை மேற் கொள்ள ஏதுவாக மாநிலங்களுக்கு அதிக அளவு திட்ட ஆதாரங்களை மாற்றுவது மிகவும் பொருத் தமாக இருக்கும். மூலதனப்பொருள் தொழிற் சாலைகளின் தேவைகளை ஊக்குவிக்கும் வகை யில், அடிப்படை வசதிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதற்கு அதிக ஒதுக்கீட்டைத்தந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. தொழில்நுட்ப மேம்பாட் டிற்கு ஒதுக்கப்படும் நிதி முறை சாரா எரிசக்தி மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலைகளைப் போன்ற பல்வேறு துறைகளில் தகுந்த தொழில்நுட்பத்தை மேம்படுத்த, பயன்படுத்தப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

உலகப் பொருளாதார வளர்ச்சியோடு, நம்மை யும் இணைத்துக் கொள்ளும் வகையில் சுங்க

வரியைக் குறைக்கும் போக்கினை அங்கீகரிக்கும் அதே நேரத்தில் இந்தியத் தொழில் வளர்ச்சியைப் பாதிக்கும் வகையில் தேங்கி விடக்கூடிய சூழ் நிலை உருவாகிவிடாது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் நம்பிக்கை தெரிவித்தார். இந்தியத் தொழிற்சாலைகளைப் பாதுகாக்க மத்திய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள நட வடிக்கைகளை வரவேற்றார்.

துறைமுக மேம்பாட்டுப் பணியை வரவேற்ப தாகத் தெரிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள்- கச்சாத் தோல் பொருட்கள் மீதான வரி குறைக்கப் பட்டு சீரமைக்கப்பட்டிருப்பது போற்றத்தக்க நட வடிக்கை ஆகும். உற்பத்தி வரியைச் சீராக்கும் வகையில் சுங்கவரி தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வரவேற்கப்படுகின்றன. அதே நேரத்தில் டங்கல் பொருளாதார அறிக்கையை ஏற்றுக் கொள்வதென்பது, நிச்சயமாகப் பல மருந்துகளின் விலையை உயர்த்தும் என்பதால், மருந்துகளின் மீது சுங்க வரியை உயர்த்தியிருப் பதை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்றும் கூறினார். மேலும் அவர் தெரிவித்தாவது:

பொருளாதாரத்தில் மிக முக்கியமான அம்சங் களாக விளங்கும் சில பணிகளின் மீது வரி விதிக்க வேண்டுமென மாநிலங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. வரி விதிக்கத் தகுந்த சில பணிகள் இப்போது வரி வரம்புக்குள் கொண்டுவரப்பட்டி ருப்பது நல்ல நடவடிக்கை ஆகும். துரதிருஷ்ட வசமாக, அந்த வரியை மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுப்பது பற்றி எதுவும் கூறப்படவில்லை. பணிகள் மீதான வரி விதிப்பு மாநிலப் பட்டிய லிலோ, மத்திய பட்டியலிலோ குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லையாதலால், அந்த வருமானத்தை மாநில முதல்வருடன் பங்கிட்டுக் கொள்வதே சரியாக இருக்கும். அத்துடன் மேலும் சில பணிகள் வரி விதிப்பின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். மற்ற பணிகள் மீது மாநில அரசுகள் வரி விதிக்கலாம் என்ற சட்டத்தை அரசு கொண்டு வரவேண்டும். புதிய வருமான ஆதாரங்களைத் திரட்டுகின்ற அதே நேரத்தில் மாநிலங்களின் தேவைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாதது வருத்தத்தை அளிக்கிறது. பொருட்களை அனுப்பு வதன் மீதான வரியைப் பத்தாண்டுகளுக்கு மேலாக மாநிலங்கள் கேட்டுக்கொண்டிருப்பதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். இந்த வரியை விதிப்பதற்கான சட்டத்தை இயற்றும் அறி விப்பு ஏதும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லாதது வியப்பாக இருக்கிறது.

வருமான வரி விதிப்பிலும், விலக்குக்கான வரம்பு உயர்த்தப்படுவதிலும் மாற்றங்கள் செய்யப் பட்டிருப்பது வரவேற்புக்குரியது என்றாலும் சிறு சேமிப்புத் திட்டங்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படாதது துரதிருஷ்டவசமானதாகும்.

மத்திய நிதியமைச்சர், அறிவித்துள்ள கம்பெனி களுக்கான சலுகைகள், சேமிப்பையும் முதலீட்டை யும் ஊக்கப்படுத்தும் வகையில் முறையாகப் பயன் படுத்தப்படும் என்று நம்பலாம்.

-வளர்ச்சிக்கான பல்வேறு அம்சங்களைக் கொண்ட மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவேற்கின்ற அதே நேரத்தில், பண வீக்கத்தைக் கட்டுபடுத்தத் தேவையான உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப் படாததற்குத் தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார். திட்டத்தின்கீழ், மாநிலங்களுக்கு உரிய உதவிகள், மிகக் குறைந்த அளவிலேயே உயர்த்தப்படுகின்றன. வருமானப் பங்கீட்டில், மாநிலங்களுக்குரிய பங்கு வழங்கப்படாததால், பொதுமக்களின்- குறிப்பாகக் கிராமப்புற, நகர்ப் புற ஏழைகளுக்கு மாநில அரசுகள் ஆற்றவேண்டிய கடமைகளுக்குத் தேவையான நிதி ஆதாரத்தை, மாநில அரசுகளே தேட வேண்டிய நிலையில் இருப்பது மனத்தளர்வையும், வருத்தத்தையும் அளிப்பதாக உள்ளது என்றும் கருத்தறிவித்தார்.



**மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைச் சந்தித்து, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. அ.மா. பரமசிவம் அவர்கள் தொழிலாளர் நலத்துறையின் கீழ் இயங்கும் தொழிலாளர் நல ஆணையர் அலுவலகம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி அலுவலகம், தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர் அலுவலகம், ஆகிய வற்றில் பணிபுரியும் அரசுப் பணி யாளர்கள் மற்றும் அலுவலர்கள் சார்பில் ஒரு நாள் ஊதியமும், தொழிலாளர் கல்வி நிலைய மாண வர்கள் சார்பில் ரூ.2,42,075/-க்கான காசோலையை 'முதல் அமைச்சர் பொது நிவாரண நிதிக் காக' 1.3.94 அன்று வழங்கினார்.**

## சிறுசேமிப்பு - குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# சிறுசேமிப்புத்துறையின் மகத்தான பரிசுத்திட்டம்




இன்றே ரூ.500/-ம் அதற்கு மேலும் தமிழ்நாட்டில் முதலீடு செய்து இலவச பரிசுக் கூப்பன் பெறுங்கள்.

## உங்கள் முதலீடுகளுக்கு 619 கவர்ச்சிகரமான பரிசுகள்

*1 சூப்பர் பம்பர் முதல் பரிசு மாருதி ஆம்னிவேன் (அல்லது) 25 h.p.H.M.T. டிராக்டர்(இயந்திரக்கலப்பையுடன்)*

*1 இரண்டாவது பரிசு - அஞ்சலக மாதாந்திர வருவாய்த்திட்டத்தில் ரூ.24,000/-க்கான முதலீடு*

*2 மூன்றாவது பரிசுகள் - கலர் டெலிவிஷன்*

*2 நான்காவது பரிசுகள் - உலர்த்தும் வசதியுள்ள செமிஆட்டோமேடிக் வாஷிங்மெஷின்*

*3 ஐந்தாவது பரிசுகள் - 2 நபர்களுக்கு சென்னையிலிருந்து புறப்படும் 6 நாள் தென்னிந்திய சுற்றுலா*

*10 ஆறாவது பரிசுகள் - 1 சவரன் (22 காரட்) தங்கநாணயம்*

*600 ஏழாவது பரிசுகள் - ரூ.100/- மதிப்புள்ள இந்திராவிகாஸ் பத்திரம்*

## பரிசுக் கூப்பன் பெற முதலீடு செய்ய வேண்டிய திட்டங்கள்

- **இந்திரா விகாஸ் பத்திரம் (IVP)**
- **கிசான் விகாஸ் பத்திரம் (KVP)**
- **தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு (NSCVIII ISSUE )**
- **தேசிய சேமிப்புத்திட்டம் 1992 (NSS '92)**
- **15 ஆண்டு பொது சேமநல நிதித்திட்டம் (PPF)**
- **மாதாந்திர வருவாய்த் திட்டம் (MIS)**
- **ஓய்வு பெறும் அரசு/பொது நிறுவன ஊழியர்களுக்கான சேமிப்புத் திட்டம்**
- **1 மற்றும் 2 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D)** **1% ஊக்கத்தொகை**
- **3 மற்றும் 5 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D) அஞ்சலகத் தொடர் வைப்புத்திட்டம் / வளரும் மாத சேமிப்புத் திட்டம் (R.D./C.T.D.)**

**மேலும் 2% ஊக்கத்தொகை (குறிப்பிட்ட திட்டத்திற்கு)**

## சேமிப்புப் பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

**மேலும் விவரங்களுக்கு:**
**ஆணையர், சென்னை மாநகராட்சி, (சி. சே. பிரிவு) சென்னை - 600 003.**
**தொலைபேசி: 584440**
**மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், 92, அண்ணா சாலை,**
**சென்னை 600 002. தொலைபேசி: 849962.**
**மாவட்ட ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,**
**அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்**

**வெளியீடு: இயக்குநர்,**
**சிறுசேமிப்புத்துறை, 621, அண்ணா சாலை,**
**சென்னை - 600 006. தொலைபேசி : 8251784/8251685**

DIPR/864/DIS/93

## இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு



### திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்:

# 30,150 பேருக்கு ரூ. 22 கோடியளவில்

# மாண்புமிகு முதல்வர் உதவி!

**மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், திருவண்ணாமலை மாவட்டத்தில், எழிற்கோலமாகவும் எழுச்சிமயமாகவும் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பல்வேறு மக்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அவ் விழாவில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவு விவரம் வருமாறு:**

ஆன்மீகப் பெருந்தகையாளர்கள் பலருடைய அருளை, முழுமையாகப் பெற்று, இயற்கையும் இறைமையும் ஒருங்கே இணைந்து, தமிழகத்தின் ஆன்மீக உணர்வின் வடிகாலாக விளங்கும் 'ஞானபூமியாம்' திருவண்ணா மலை நகரைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள,

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட் டத்திற்கு வருகை தந்து; இந்த இனிய அரசு விழாவில் கலந்து கொண்டு; இந்த மாவட்ட மக்களாகிய, உங்கள் அனை வரையும் காண்பதில், நான் பெரு மகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின் றேன். மனதில் நினைத்த மாத்திரமே, அருளைப் பொழியும், அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயில் கொண்டு உள்ள மாவட்டம் இது.

கற்போரை மனம் உருகச் செய்யும், திருப்புகழை அருளிச் சென்ற, அருண கிரிநாதர் முதல், தனது மனிதாபிமானச் செயலால், மானுடத்திற்குப் புதிய அறநெறியைக் காட்டிச் சென்ற, ரமண மகரிஷி வரை; தமிழ்நாட்டின் ஆன்மீக வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி, பல ஆன்றோர்கள் வாழ்ந்த இடமான இம்மாவட்டம், தமிழகத்திற்கு என்றென் றும், பெருமை சேர்க்கும் மாவட்டமாகச் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறது.

**மகிழ்ச்சிதரும் வரலாறு**

11-ஆம் நூற்றாண்டு முதல், 14-ஆம் நூற்றாண்டு வரை, இந்தப் பகுதியில் சம்புவராய மன்னர்கள், சமுதாயத்தில்



பெண்களுக்கு, நல்லுரிமைகள் வழங்கிய தோடு, வரதட்சணை பெறுவதை, ஒரு ராஜதுரோகமாகக் கருதி, நல்லாட்சி புரிந்து வந்தார்கள், என்ற வரலாற்றுச் செய்தி, நமக்கெல்லாம் மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

பொது வாழ்க்கையில் ஈடுபட்ட பின்பு, தமிழகத்தின் பல்வேறு பகுதி களில் அமைந்துள்ள, எல்லா மாவட்டங் களுக்கும் சென்று, அங்கு வாழ்கின்ற மக்களைச் சந்தித்து; அவர்களது வாழ்க்கை முறை; மாவட்டத்தின் பிரச்சினைகள்; மாவட்டம் எதிர்நோக்கியிருக்கும் சவால்கள்; அந்த மாவட்டத்தை வளப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சிப் பணிகள்; ஆகியவற்றைப் பற்றியெல்லாம் கேட்டறிந்து, அவற்றைப் பற்றித் தீவிர மாகச் சிந்திக்கத் துவங்கினேன்.

அது போலவே, கிராமப்புறங்களுக் குச் செல்லும் போது, அங்கு நிலவும் சமூகப் பொருளாதார நிலையையும் கூர்ந்து கவனிப்பது எனக்குப் பழக்க மாகிவிட்டது. அந்த வகையிலே இந்த மாவட்டம், எனக்குப் புதியதும் அல்ல; இம்மாவட்டத்து மக்களும், எனக்குப் புதியவர்கள் அல்ல.

கட்சிப் பணிக்காகவும், தேர்தல் பணிக்காகவும், வரலாற்றுப் புகழ் மிக்க இந்தத் திருவண்ணாமலை நகருக்கும், இந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதி களுக்கும், நான் பலமுறை வந்து சென்று உள்ளேன். தமிழகத்திற்கே உரித்தான, பாரம்பரியம் மிக்க வரவேற்பினை, நான் இங்கு வந்த போதெல்லாம், எனக்கு நீங்கள் அளித்து உங்களது ஆழ்ந்த அன்பையும், பேராதரவினையும், ஒவ்வொரு முறையும் வெளிப்படுத்தி இருக்கிறீர்கள்.

நான் தமிழகத்தின் முதலமைச்சராகப், பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, முதன் முதலாக இந்த மாவட்டத்திற்கு இன்று வருகை தந்து, உங்கள் எல்லையில்லா அன்பையும், வரவேற்பையும் மீண்டும் ஒரு முறை அனுபவிக்கும் அதே நேரத் தில், 110 கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு வளர்ச்சிப் பணிகளைத் துவக்கி வைப்பதிலும், உதவிகளை வழங்குவதி லும் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

1991-ஆம் ஆண்டு, என் மீது அளப்பரிய அன்பையும், பேராதரவையும் பொழிந்து, எந்த எதிர்பார்ப்புகளோடு, நீங்கள் ஆட்சிக் கட்டிலில் என்னை அமர வைத்தீர்களோ; அவற்றையெல்லாம் செயல்படுத்துவது தான், எனது தலை யாய கடமை என்ற எண்ணத்துடன், நான் செயல்படத் துவங்கினேன்.

உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, உங்கள் அரசு, மக்களின் எண்ணங்களுக்கும், எதிர் பார்ப்புகளுக்கும் ஏற்ப செயல்பட்டு, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பணியில், தன்னை முழுமை யாக அர்ப்பணித்துக்கொண்ட ஓர் அரசாக உருவானது. நாங்கள் மக்கள் நலப் பணிகளிலே, எங்களை முழுமை யாக ஈடுபடுத்திக் கொண்டோம்.

**கோயில் சீரமைப்புப் பணி**

மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளை அறிந்து, அவர்களின் தேவைகளைப் புரிந்து, நாங்கள் மேற்கொண்ட பல திட்டங்களில் ஒன்று, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள, புராதன, சரித்திர சிறப்புடனும், கலை நுணுக்கங்களுடனும் கூடிய, கோயில் களின் புனரமைப்பு, மற்றும் சீரமைப்புப் பணி ஆகும்.

நமது கோயில்கள், ஏதோ வழி பாட்டுத் தலங்களாக மட்டும் அல்லாமல்; நமது கலாச்சாரத்தின் கலங்கரை விளக் கங்களாகவும்; சமுதாயக் கூடங்களாக வும்; மக்களிடையே ஒற்றுமையை வளர்க் கின்ற மையங்களாகவும், அமைந்துள் ளன. வரலாற்றுச் சின்னங்களாக விளங் கும் பல வழிபாட்டுத் தலங்களும் காப் பாற்றப்பட வேண்டும் என்று எனக்கு ஏற்பட்ட எண்ணத்தின் வெளிப்பாடு தான், இந்தத் திட்டம்.



அரசாங்கத்திற்கு ஏற்கெனவே உள்ள நிதி நெருக்கடியில், அரசின் நிதி உதவியை முழுமையாக எதிர்பார்க் காமல், பொது மக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் நிதி உதவியைக் கொண்டு, இந்தப் புனிதப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணத் துடன், 'முதலமைச்சர் திருக்கோயில்கள் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதி' ஒன்றினைத் துவக்கினேன். நல்ல உள்ளம் கொண்டோர், தமிழகத்தில் நிறையப் பேர் உள்ளனர் என்பதைக் காட்டும் வகையில், இதுவரை, 6 கோடியே 25 இலட்சம் ரூபாய் வரை, இந்நிதியில் சேர்ந்துள்ளது. இந்நிதியிலிருந்து பல் வேறு சிறிய, பெரிய கோயில்களின் சீரமைப்பு, மற்றும் புனரமைப்புப் பணி களுக்கு, ஒரு கோடியே, 94 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டு உள்ளது. மேலும், ஒரு கால பூஜை கூட, நடத்த முடியாத நிலையில் இருந்த 512 கோயில்களுக்கு, இந்த நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய், உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆன்மீக வரலாற்றின் ஒரு மைல் கல்லாக விளங்கும், திருவண்ணாமலைநகரில் இவற்றை எடுத்துரைப்பது, மிகவும் ஏற் புடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**அனைவரின் பொதுச் சொத்து**

எந்தக் கோயில்களில், சில குறிப் பிட்ட மக்களுக்கு அனுமதி மறுக்கப் பட்டதோ, அதே மக்களுக்கு அந்தக் கோயில்களிலேயே, அர்ச்சகர்களாகவும், பூசாரிகளாகவும் செயல்படுவதற்குத், திட்டம் தீட்டினோம்; செயல்படுத் தினோம்.

வேதங்கள் என்பது அனைவருக்கும் பொதுச் சொத்து என்பதை உணர்த்தும் வகையில், தாழ்த்தப்பட்ட மக்களும், வேதங்களையும், வேத ஆகமங்களையும் கற்றுக்கொள்வதற்கு, வழி வகுக்கப் பட்டுள்ளது என்பதையும், மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு, புதிய சமுதாய சிந்தனை யுடன் செயல்பட்டு வரும் எங்களைக்

குறுகிய கண்ணோட்டத்துடன் பார்ப்பவர்களைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. அழிவுச் சக்திகளிலிருந்து தங்களைக் காப்பாற்றி, தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் நடத்திச்செல்ல வேண்டும் என்று எந்த மக்கள் விரும்பினார்களோ; அந்த மக்களின் உள்ளத்து உணர்வுகளை அறிந்து, அவற்றைப்பூர்த்தி செய்யும் வண்ணம், செயல்பட்டு வருகிறோம். அதில் கிடைக்கின்ற மகிழ்ச்சியைத் தான், நாங்கள் பெரிய பேறாக எண்ணுகின்றோம்.



மக்கள் நலன் ஒன்றையே முன் வைத்து, புதிய சமுதாயக் கோட்பாடுகளுக்கு அடித்தளம் அமைத்த, பேரறிஞர் பெருந்தகை அண்ணா; நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் அடியொற்றிச் செல்லும் நாங்கள்; தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பாடுபடுகின்ற அதே நேரத்தில்; சமுதாயத்தில் நலிந்த, ஆதரவற்ற ஏழை எளிய மக்கள், அரசின் அனைத்து உதவுகளையும், தனித்தனியே பெறவேண்டும் என்பதிலும், அதிக தீவிரம் காட்டி வருகின்றோம்.

**ஒவ்வொரு மாவட்டத்திற்குச் செல்லும் போது, 25,000—லிருந்து 50-000 பேர்கள் வரை, அம்மாவட்ட வாழ் மக்களுக்கு, அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருவதில், நான் கண்ணும்கருத்துமாக இருக்கிறேன். அந்த வகையில் இன்று, 22 கோடி ரூபாய் மதிப்புள்ள, அரசு நலத்திட்ட உதவிகள், இம்மாவட்டத்தைச் சேர்ந்த 30,150 மக்களுக்கு வழங்கப்பட உள்ளன என்பது, அனைவருக்கும் மகிழ்ச்சித் தரக்கூடிய செய்தியாகும்.**

**துணை மின் நிலையங்கள்**

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், வேளாண்மையையே அடிப்படையாகக் கொண்டுள்ள மாவட்டம் என்பதையும், 80 சதவிகித மக்கள், இம்மாவட்டத்தைப் பொறுத்த வரை, கிராமங்களில் வாழ்ந்துவருகிறார்கள் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

எனவே தான், மாநில வேளாண்மைத் துறை, செயல்படுத்தி வரும் அத்தனைத் திட்டங்களும், எவ்விதமான விடுதலும் இன்றி, இந்த மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாவட்டம் முழுவதும் பாசன வசதிகள், தாராளமாகக் கிடைக்கக்கூடிய சூழ்நிலையில், நீர் இறைக்கும் பம்பு செட்டுகளுக்குத் தங்கு தடையற்ற, உயர் மின் அழுத்த மின் வசதி, அவசியம் என்பதை அறிந்த எங்கள் அரசு; இம்மாவட்டத்தின் பல பகுதிகளில், துணை மின் நிலையங்களை அமைத்து வருகின்றது.

மங்களம் என்ற கிராமத்தில், ஒரு துணை மின் நிலையம், எங்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு, இயக்கப்பட்டது. அதே போல செஞ்சி வட்டத்தில், காஞ்சி என்ற கிராமத்தில் இயங்கி வரும், துணை மின் நிலையம், 110 Kilo Watt நிலைக்கு உயர்த்தப்பட்டு, குறைந்த மின் அழுத்தம் என்ற பிரச்சினை, தீர்த்து வைக்கப்பட்டது. திருவண்ணாமலைக்கு அருகில், சமுத்திரம் என்ற கிராமத்தில், மேலும் ஒரு துணை மின் நிலையம் அமைக்க, இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இம்மாவட்டத்தின் குடிநீர்த் தேவையைச் சமாளிப்பதற்காகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பல்வேறு இடங்களில், சுமார் 7 கோடி ரூபாய் செலவில், அமைக்கவுள்ள புதிய குடிநீர்த் திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டியதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.**

நெடுஞ்சாலை, ஊரக மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மேம்பாட்டிற்கு, 15 கோடி ரூபாய் செலவில், மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளும் அதே வேளையில்; இன்று என்னால் துவக்கப்பட்ட, சில புதிய பேருந்து வழித் தடங்களும்; இவ்வழித் தடங்களில் விடப்பட்டிருக்கும் 27 புதிய பேருந்துகளும்; இம்மாவட்டத்தின் போக்குவரத்து மேம்பாட்டிற்கு, வழி வகுக்கும் என்று, பூரணமாக நம்புகின்றேன்.

**பயிற்றுவிக்கும் பணி**

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில், அறிவொளி இயக்கத்தின் கீழ், 40,000-க்கும் மேற்பட்ட ‘கற்பிக்கும் மையங்கள்’ இன்று முதல் ‘பயிற்றுவிக்கும் பணியைத் தொடங்கி, 5 இலட்சம் பேர்களை, குறிப்பாகப் பெண்களை, எழுதப் படிக்கத் தெரியும் என்ற நிலைக்குக் கொண்டு வரப் போகிறது என்பதை எண்ணிப் பூரிப்படைகின்றேன். இந்தப் புனிதப் பணியில், சேவை மனப்பான்மையுடன், தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் நல்ல நெஞ்சங்களுக்கு, எனது மனமார்ந்த நல்லாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பெண்கள் முன்னேற்றத்திற்குப் பல நல்ல திட்டங்களை முறையுடன் தீட்டி, முனைப்புடன் செயல்படுத்திவரும், உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு; பொருளாதார ரீதியாகப் பெண்கள், தனித்து இயங்கக் கூடிய ஆற்றல் படைத்தவர்களாக, உருவாக வேண்டும் என்ற ஓர் அடிப்படையாகக் கருத்தில், ஆழமான நம்பிக்கையை வைத்துள்ளது.**

அந்த இலக்கினை நோக்கி, நாம் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளும் தகுந்த பயனைத் தர, இந்த மாவட்டத்துப் பெண்களுக்கு வழங்கப்படும் எழுத்தறிவுக் கல்வி, ஆதாரமாக அமையும் என நம்புகிறேன்.

கல்வி குறிப்பாக தொடக்கக் கல்வி, எல்லாக் குழந்தைகளுக்கும், எவ்வித வித்தியாசமும்இன்றி வழங்கப்பட வேண்டும். அப்போது தான், ஒளி மிகுந்த ஒரு சமுதாயத்திற்கு; சரிநிகர் சமானமாகச் செயல்படும் வீராங்கனைகளாகப் பெண்கள் திகழும் சமுதாயத்திற்கு; நாம் அடித்தளம் அமைக்க முடியும்.

**தேர்வுபெற்ற மாவட்டம்**

6 வயதிலிருந்து 11 வயது வரை உள்ள, குழந்தைகள் அனைவருக்கும்,



தொடக்கக் கல்வியைக் கண்டிப்பாக வழங்குவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 3 மாவட்டங்களில், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டமும் ஒன்று என்பதை அறிவிப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தொடக்கக் கல்வி அனைவருக்கும் வழங்க, புதிய பள்ளிக் கட்டடங்கள்; கூடுதல் வகுப்பறைகள்; கூடுதல் ஆசிரியப் பெருமக்கள்; கல்வி கற்பிக்கத் தேவையான உபகரணங்கள், போன்றவற்றை ஏற்பாடு செய்வதற்காக, இம்மாவட்டத்திற்கென 38 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, உலக வங்கியின் நிதி உதவியை நாடி அனுப்பப்பட்டுள்ளது. உலக வங்கியின் நிதி உதவியுடன், விரைவில் இத்திட்டம் செயலாக்கப்படும் போது, இம்மாவட்டத்தின் எதிர்கால வளர்ச்சி, புதிய ஒரு பரிமாணத்தைப் பெறும் என்று, நான் பூரணமாக நம்புகிறேன்.

கூடி வாழ்ந்தால் கிடைக்கும் கோடி நன்மைகள் மக்களுக்குச் சென்றடைய, கூட்டுறவு இயக்கம் இந்த மாவட்டத்தில் ஒரு புதிய புத்துணர்ச்சியுடன் செயல்பட்டு வருவதைக் காணும்போது, நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நலிந்தவர்களும், வசதியற்றவர்களும் ஒன்று கூடி, உகந்த பொருட்களைத் தயாரிக்கவும், அவர்கள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்ய வழி வகுக்கும் கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்தவும்; ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம், இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 17 கோடி ரூபாய் செலவில், பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும்போது, கூட்டுறவு இயக்கத்திற்கு மட்டுமன்றி, அவை இம்மாவட்டத்தின் நலிந்த பிரிவினரின் வளர்ச்சிக்கும், ஒரு புதிய எழுச்சியை உண்டாக்கும் என்பதில் ஐயம் இல்லை.

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி செயல்பட்டு வந்தாலும், இம்மாவட்டத்தைப் பொறுத்த வரை, இன்னமும் வேலூரில் அமைந்துள்ள மாவட்டக் கூட்டுறவு வங்கியின் கீழ், செயல்பட வேண்டிய ஒரு நிலைமை குறித்தும்; அதனால் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உள்ள தொல்லைகள் குறித்தும், நான் நன்கு அறிவேன். மாநில அரசால், இம்மாவட்டத்து மக்களின் குறைகளைப் போக்க முடியும் என்றால் உடனே அவற்றை முடித்து வைத்து, நேசக் கரங்களை நீட்டி இருப்போம். ஆனால், மத்திய ரிசர்வ் வங்கியின், அனுமதி பெற வேண்டிய சூழ்நிலையில், இந்த மத்தியக் கூட்டுறவு வங்கி, இங்கே உடனே துவக்கப்பட முடியாமல் உள்ளது.

விரைவில் இம்மாவட்டத்திற்கு என, மத்திய கூட்டுறவு வங்கி ஒன்று செயல்பட, எல்லா நடவடிக்கையும் இந்த அரசு, உங்கள் அரசு எடுத்திருப்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கோயில் திருப்பணிக்காக**

அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலைப் பொறுத்தவரை, இம்மாவட்டத்து மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, 60 இலட்சம் ரூபாய் செலவில், தங்கத்தேர் அமைக்கும் பணி உட்பட ராஜகோபுரங்கள்; மண்டபங்கள்; விமானங்கள்; ஆகியவற்றைப் பழுதுபார்க்கும் பணிகளும் 1½ கோடி ரூபாய் செலவில், மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1½ கோடி ரூபாய் மதிப்புள்ள இந்தத் திருப்பணிகள் செய்து முடிக்கப்பட்டவுடன், குடமுழுக்கு விழாவும், சிறப்புற நடத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயத் தொழிலையே, அடிப்படையாகக் கொண்டு விளங்கும் இம்மாவட்டத்திலும், புதிய தொழிற்சாலைகளை உருவாக்க, சாத்தியக் கூறுகளை எங்கள் அரசு, ஆராய்ந்து வருகிறது. இம்மாவட்டத்தின் சில பகுதிகளில், இரும்புத்தாது கிடைப்பதற்குரிய அறிகுறிகள் தென்படுவதால், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், TIDCO, இந்த இரும்புத் தாதுவினை, எவ்வாறு நிலத்திலிருந்து எடுத்து, உபயோகப் படுத்துவது என்பதைப் பற்றி, ஒரு நீண்ட ஆய்வினை மேற்கொண்டு வருகிறது.

புதிய தொழில் நுட்ப உத்திகளைக் கையாண்டு, இத்திட்டத்திற்குச் செயல் வடிவம் தர இயலுமா என்று ஒரு ஆராய்ச்சி விரைவில் மேற்கொண்டு, அதன் விளைவுகள் நமக்குச் சாதகமாக இருந்தால் இந்த மாவட்டத்தில் ஒரு மாபெரும் தொழிற்சாலையை உண்டாக்குவதற்கு, உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வசிக்கும், கைத்தறி நெசவாளர்களின் மேம்பாட்டிற்க, 43 இலட்சம் ரூபாய் மதிப்பில், தறிகளும், இதர கருவிகளும் வழங்குவதற்கும், பயிற்சி அளிப்பதற்கும்; ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி கைத்தறி நெசவாளர்களுக்கு, வீடுகள் கட்டித் தருவதற்கும்; அவர்களுக்குப் பொது வசதிகள் செய்து தருவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும், இந்த ஆண்டே அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது வாழ்வில் ஈடுபட்ட பிறகு இந்தத் திருவண்ணாமலை நகருக்கு நான் பலமுறை வந்து சென்றுள்ளேன். ஆனால் 1983-ஆம் ஆண்டில் நான் ஒரு முறை இங்கு வந்தபோது நிகழ்ந்த சம்பவத்தை என்னால் மறக்கவே முடியாது. அப்போது நான் இயக்கத்தின் கொள்கைபரப்புச் செயலாளராகத் திருவண்ணாமலை நகருக்கு வந்தபோது ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஏற்கெனவே சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னாரே திருவண்ணாமலையைச் சேர்ந்த ஒரு பெரிய மனிதரைப் பற்றி. அந்தப் பெரிய மனிதர் நான் இங்கு வருவதை விரும்பவில்லை. எனவே பொதுக்கூட்டத்தில் பேசுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்ட பின்னர் அவர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி நீதி மன்றத்தில் ஒரு தடை உத்தரவைப் பெற்றுவிட்டார். அந்தக் தடை உத்தரவு பெறப்பட்டு அந்த அறிவிப்புச் செய்தி வந்தபோது மாலை நேரம் ஆகிவிட்டது.

---

★ சரியானதை ஒத்துக்கொள்ள வேண்டும்; ஒத்துக்கொண்டதை ஓம்பவேண்டும்; இதுவே பண்பாளர்கள் கடமை.

- அறிஞர் அண்ணா.

அந்தப் பொதுக்கூட்டம் ஒரு பள்ளிக்கூட வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந் தது. ஏராளமான மக்கள் என் பேச்சைக் கேட்கவேண்டுமென்பதற்காக அந்த வளாகத்தில் ஏற்கெனவே கூடிவிட் டார்கள். அந்த நேரத்தில்தான் வளாகத் திற்குள் பொதுக்கூட்டம் நடத்தக்கூடாது என்ற செய்தி வந்தது. கோர்ட் தடை உத்தரவு பிறப்பித்து விட்டது என்ற செய்தி வந்தது.

இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய் திருந்த கழகக் கண்மணிகள் என்னி டம் வந்து அம்மா இப்படி ஆகிவிட்டதே? என்ன செய்வது? ஆயிரக்கணக்கில் மக்கள் அந்த வளாகத்தில் கூடி நிற்கின்றார்களே இப்போது கூட்டம் ரத்து என்று சொன்னால் என்ன ஆகுமோ தெரியவில்லையே என்று என் னிடம் வருத்தப்பட்டார்கள். நான் அதற்கு விளக்கம் சொன்னேன். கவலைப் படாதீர்கள் மக்கள் அப்படியே அந்த வளாகத்திற்குள்ளேயே இருக்கட்டும். அந்த வளாகத்திற்குள் மேடை போட்டு நான் பேசக்கூடாது என்று தானே சொல்கிறார்கள். நான் அந்த வளாகத் தின் சுவருக்கு வெளியே நின்று பேசுகிறேன் என்று சொல்லி மேடை போட நேரம் இல்லாததால் அதற்கு அனுமதியும் பெறமுடியாத சூழ்நிலை இருப்பதால் ஒரு லாரியைக் கொண்டு வரச்சொல்லி, அந்த லாரியை அந்த வளாகச் சுவருக்கு வெளியே நிறுத்தச் சொல்லி அந்த லாரியின் மீது ஏறி நின்று அன்று நான் உரையாற்றினேன்.

அந்தப் பொதுக்கூட்டமும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அப்படியெல்லாம் இந்தத் திரு வண்ணாமலை நகருக்கு வந்து திருவண்ணாமலை நகர் மக்களாகிய உங்களை நான் சந்தித்துவிட்டுச் சென்றேன். அப்படியெல்லாம் வந்து அவமானப்படுத்தப்பட்டு சென்ற என்னை நீங்கள் இன்று பேராதரவு அளித்து, என் மீது முழு நம்பிக்கையும் வைத்து என்னை முதலமைச்சர் என்ற பதவியோடு இங்கே வந்து உங்களை யெல்லாம் சந்தித்துப் பல கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களைத் துவக்கி வைக்கும் ஒரு அரிய வாய்ப்பினை இன்று நல்கியிருக்கிறீர்கள். எனவே, உங்களுக்கு நான் நன்றிக்கடன் பட்டவள். அந்த நன்றிக் கடனை நான் இறுதிவரை செலுத்துவேன்.

உங்களுக்காக என்றும் தொய்வின்றித் தொடர்ந்து தொண்டு செய்வேன் என்பதை இந்த நேரத்தில் நன்றிப் பெருக்கோடு உங்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**தடையும் தகர்ப்பும்**

பெரிய மாநாட்டைப் போன்று, இந்த விழாவை சிறப்புடன் ஏற்பாடு செய்த, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு கே.ஏ. செங்கோட்டையன், திரு எஸ். கண்ணப்பன், புலவர் திருமதி ஆர் இந்திரகுமாரி ஆகியோருக்கும், அவர்களுக்கு உறுதுணையாக இருந்து செயலாற்றிய தமிழ்நாடு மூலிகைப் பண்ணை மற்றும் மூலிகை மருந்து கழகத்தின் தலைவர் - தண்டராம்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு எம்.கே.சுந்தர் அவர்களுக்கும், எனது நெஞ்சம் நிறைந்த பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுடன் துணையிருந்து பணியாற்றி, இவ்விழா சிறப்புடன் நடைபெறுவதற்குப் பாடு பட்ட அரசு அலுவலர்கள் அனை வருக்கும் எனது பாராட்டுதல்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில பேர்களுக்குமட்டும் மேடை யிலேயே என் கைகளாலே இந்த உதவிகளை வழங்க இருக்கின்றேன். மற்றவர்களுக்கு அவர்கள் அமர்ந்து இருக்கும் இடங்களுக்குச் சென்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அரசு அலுவலர்களும் இந்த உதவிகளை என் முன்னிலையிலேயே வழங்கு வார்கள். இந்த உதவிகளைப் பொறுத்த வரை இவற்றை ஒரு ஆதாரமாக வைத்துக் கொண்டு உங்கள் உழைப்பு என்னும் மூலதனத்தை நீங்கள் செலுத்தி இந்த உதவிகளின் துணையோடு முன்னேற வேண்டும்; எல்லா நலங்களையும் வளங் களையும் பெறவேண்டுமென்று உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக் களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மாவட்டத்திற்கு வருகை தரும் ஒவ்வொரு முறையும், நீங்கள் காட்டு கின்ற அன்பிற்கும், பேராதரவிற்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரி வித்து, நீங்கள் எல்லா வளங்களும், நலன்களும் பெற வேண்டும் என்று, என் நெஞ்சத்து நல்வாழ்த்துக்களைத் தெரி வித்துக்கொண்டு, விடை பெறுகிறேன்.

## திருவண்ணாமலையில் முதல்வர் நிகழ்ச்சிகள்

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்ட மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவி களை வழங்க 2.3.'94 அன்று காலை 11 மணியளவில், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வருகை தந்தார். திருவண்ணா மலையில் உள்ள அரசு கலைக்கல்லூரி தைானம் அருகே, அவர் பயணம் செய்த ஹெலிகாப்டர் தரையிறங்கியது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மாவட்ட ஆட்சித் தலைவரும், நாடாளு மன்ற- சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயரதிகாரிகளும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சால்வைகள், மலர்ச்செண்டுகள் கொடுத்து மகிழ் வோடு வரவேற்றார்கள்.

பொதுக்கூட்டத்தில், மாபெரும் மாநாட்டுப் பந்தல்போல் அலங்கரிக்கப் பட்டிருந்தது; ஆண்களும் பெண்களுமாக இலட்சோப லட்சம் பேர் திரண்டி ருந்தார்கள்.

விழாவிற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி முத்தையா தலைமை தாங்கினார். திரு. எம். கே. சுந்தர் எம்.எல்.ஏ., வரவேற்பு ரையாற்றினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வாழ்த்துரை வழங்கினர்.

விழா முடிவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ரமேஷ்குமார் கன்னா நன்றி கூறினார்.

இவ்விழாவில்- 'அறிவொளி இயக்கம்' உருவாக்கிய நூல் ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட- மாவட்ட ஆட்சித் தலைவர் முதல் நூலைப் பெற்றுக்கொண்டார்.

**மகளிர் காவல் நிலையம்**

அன்று மாலை 3 மணியளவில், திருவண்ணாமலை அனைத்து மகளிர் காவல் நிலையம் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



## திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்:

# ''பெண்களுக்குரிய உரிமைகளையும் வசதிகளையும் பெற்றுத்தருவது நம் அனைவரது கடமையாகும்!''




# அனைத்து மகளிர் காவல் நிலையம் தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

**மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2.3.'94 அன்று, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில், அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்துவைத்து ஆற்றிய உரை முழு விவரம் இங்கே இடம்பெறுகிறது.**

''தமிழகத்தின் 14-வது அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, வரலாற்றுப் புகழ்மிக்க, திருவண்ணாமலை நகரில் துவக்கி வைத்ததில், நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகிறேன்.

ஒரு நாட்டில் நிலவும் பொது அமைதியும், தனி மனிதப் பாதுகாப்பு உணர்வும்தான், அந்த நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் வழி வகுக்கும் என்பதை, நான் பூரணமாக உணர்ந்திருந்ததால்தான், உங்கள் பேராதரவுடனும், நல்லாசியுடனும், 1991-ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தவுடன் நான், அத்தகைய ஒரு உன்னதமான இலக்கை அடைய, நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆரம்பித்தேன்.

மதிநுட்பச் செயல்பாட்டினால் தமிழகக் காவல் துறை, அகில இந்திய அளவில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றிருந்த போதிலும், கைகள் கட்டப்பட்ட நிலையில் தனக்குரிய பணிகளை, காவல் துறை செவ்வனே செயலாற்ற இயலாதிருந்த நிலையையும் மாற்றுவது எங்களது முதற் பணியாக விளங்கியது.

அன்று தமிழகத்தின் பொது

அமைதிக்குச் சவால் விட்டுக்கொண்டிருந்த பயங்கரவாத சக்திகளையும், மக்களின் நலன்களுக்கு எதிராகச் செயல்பட்டு வந்த சமூக விரோத சக்திகளையும், உங்கள் சகோதாரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு - உங்கள் அரசு, காவல் துறைக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து, தனது முழு சக்தியையும் அறிவாற்றலையும் பயன்படுத்தி ஒடுக்கியதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

அதன் பயனாகத் தமிழகம் மீண்டும் ஒரு அமைதிப் பூங்காவாக உருவானது.

### காவல்துறைக்கு எழுச்சி

பெருகிவரும் மக்கள் தொகையும்; நகர்ப்புறப் பகுதிகளில் வளர்ந்து வரும் வன்முறைக் கலாச்சாரமும்; மாறிவரும் பொருளாதார சித்தாந்தங்களும்; காவல் துறையின் பணிகளையும், கடமைகளையும், அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், காவல் துறை நவீனப்படுத்தப்பட்டு, அவர்களுக்குரிய ஆயுதங்களும், தளவாடங்களும், விரைந்து செல்வதற்கு வாகனங்களும், வழங்கப்படவில்லையென்றால், அவர்கள் ஆற்றிவரும் சமுதாயப் பணிக்குக் குந்தகம் ஏற்படும் என்பதையும் அறிந்து, காவல் துறைக்கு ஒரு எழுச்சியை அளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டோம். நாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளால், தமிழகத்தின் பாரம்பரியமிக்க அமைதியையும், தனிநபர் பாதுகாப்பு உணர்வையும், மீண்டும் கிடைக்கச் செய்தோம்.

**சட்டத்தை மீறுபவர்களுக்கு ஒரு சிம்ம சொப்பனமாகவும்; நலிவுற்ற, பாதிக்கப்பட்ட மக்களுக்கு, ஒரு உதவும் கரமாகவும் விளங்க வேண்டும் என்பதே, நான் எதிர்பார்க்கும் ஒரு நல்ல காவல் துறை.**

தமிழகக் காவல் துறையை, 21-ஆம் நூற்றாண்டுக்குத் தயார் செய்ய வேண்டும், என்கின்ற உந்துதலின் காரணமாகவும்; ஒரு புதுப்பொலிவையும் புத்துணர்ச்சியையும், அந்த இயக்கத்திற்கு அளிக்க வேண்டும் என்கின்ற ஆதங்கமும், காவல் துறையை நவீனப்படுத்தவும், மனிதாபிமானமிக்க ஒரு இயக்கமாக மாற்றவும், திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தத் தூண்டின.



★ உலகில், மனிதன் தன் சுயமரியாதையை தன்மானத்தை உயிருக்குச் சமமாக மதிக்கவேண்டும்.

- தந்தை பெரியார்

அந்த எண்ணங்களின் வெளிப்பாடாக, அமைந்த திட்டங்களில் ஒன்றுதான், மாவட்டந்தோறும் அமைக்கப்பட்டு வரும், ''அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்''. ஆண்களுக்குச் சமமாக, சரிநிகராக, எல்லாத் துறைகளிலும் செயல்பட்டு வரும் பெண்கள், காவல் துறையில் மட்டும், சில குறிப்பிட்ட பணிகளை மட்டுமே புரிந்துவந்த சூழ்நிலை இருந்தது. காவல் நிலையத்திற்கு வருகின்ற பெண்கள், தங்களது பிரச்சினைகள், மற்றும், தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றி, மனந்திறந்து பேசுகின்ற வாய்ப்பு, இல்லாத நிலையும் இருந்தது. நாங்கள் அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைத்து, இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வு கண்டோம்.

### தீர்வுகாணும் நல்வாய்ப்பு

பெண் காவலர்கள், ஆண் காவலர்களுக்குச் சமமாக, எல்லா முக்கிய காவல் பணிகளிலும், தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதோடு; சமுதாயத்தில் வாழும் அனைத்துத் தரப்புப் பெண்களும், தங்களது பிரச்சினைகளையும், தங்களுக்கு இழைக்கப்படும் சமுதாயக் கொடுமைகளையும், பெண் காவலர்களிடம் மனம் திறந்து எடுத்துரைத்து, அவற்றிற்குத் தகுந்த தீர்வு காண்பதற்கும், ஒரு நல்வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளோம்.

மக்கள் தொகையில் சரி பாதியாக விளங்கும் பெண்கள், பொருளாதாரச் சுதந்திரம் இன்றி, சமுதாய வாழ்க்கையில் மற்றவர்களுக்குச் சுமைகளாகவும்; குடும்பத்திலே பொறுப்புகளை ஏற்றுக்கொண்ட சுமைதாங்கிகளாகவும், சோகப் பதுமைகளாகவும், நடமாடவேண்டிய சூழ்நிலைகள், முழுமையாக நமது நாட்டில் மாறவேண்டும். அறிவியலும், தொழில்நுட்பமும் வளர்ந்தோங்கியுள்ள நாட்டில், ஆன்மீகத்தையும், அறத்தையும் போற்றிப் பாதுகாக்கும் ஒரு சமுதாயத்தில், பெண்களுக்குரிய உரிமைகளையும், வசதிகளையும் பெற்றுத் தருவது, நமது அனைவரது கடமை என்பதை, இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட, நான் கடமைப்பட்டுள்ளேன்.

ஒருபுறம் பொருளாதாரத்தில், பெண்கள் சுயமாக, யாரையும் சாராதிருந்து செயல்படுவதற்கு, பெண்கள் சுயவேலைவாய்ப்புப் பெறுவதற்கான திட்டங்கள் தீட்டியும்; பெண்கள் கல்வி அறிவு பெற, பெண் கல்விக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகிறோம்.

அதே நேரத்தில், சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் பல்வேறு கொடுமைகளிலிருந்து, அவர்களுக்குச் சட்டப் பாதுகாப்பு அளித்து, அவர்களுக்கு எதிராகத் தீங்கிழைப்போருக்கு, நீதிமன்றத் தண்டனையை வாங்கித் தருகின்ற ஒரு அமைப்பு, இன்றைய சமுதாயச் சூழ்நிலையில், மகளிர் மேம்பாட்டிற்கு மேலும் வழி வகுக்கும் என்று கருதினோம்.

சொல்லில் காட்டுகின்ற வேகத்தைவிட, எங்களது செயலில் காட்டுகின்ற வேகம், அதிகமாக இருக்கின்ற காரணத்தால், காவல்துறை நவீனப்படுத்தப்பட்டு வருவதோடு, இதுவரை 14 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, நானே திறந்து வைத்துள்ளேன்.

### பெருமகிழ்ச்சியும் பெருமிதமும்

அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் செயல்பாடுகள், பொது மக்களாலும், மகளிராலும், சர்வ தேசச் செய்தி நிறுவனங்களாலும், பாராட்டப்படும் போது; எந்தவொரு உயரிய நோக்கத்துடன், நான் இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, அமைக்க வேண்டும் என்று விரும்பினேனோ, அந்த நோக்கம் ஈடேறுவதைக் கண்டு,

# தெரிந்து கொள்ளுங்கள்

## சிறுசேமிப்பு முகவர் ஆக வேண்டுமா?

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர், மகளிர் மற்றும் பணி ஓய்வு பெற்ற அனுபவம் பெற்ற முதியோர்க்கு ஓர் தொடர்ச்சியான வருமானம் பெற அரிய வாய்ப்பு!

**1. யார் சிறுசேமிப்பு முகவராக இயலும்?**

குறைந்தது எட்டாம் வகுப்புவரை படித்த தனிநபர், பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பதிவுபெற்ற சமூக நலச்சங்கங்கள், பல்கலைக் கழகங்கள், கிராம பஞ்சாயத்துக்கள், வங்கிகள்.

**2. (SAS) முகவர் நியமனம் பெற யாரை அணுக வேண்டும்?**

(I) உதவி இயக்குநர், (சி.சே.), சென்னை மாநகராட்சி.
(II) உதவி இயக்குநர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள்.
(iii) தாசில்தார்கள்.
(IV) வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
(V) மண்டல தேசிய சேமிப்பு இயக்குநர் ஆகியோரை அணுக வேண்டும்.

**முகவரை நியமனம் செய்ய அதிகாரம் பெற்றவர்கள் யார்?**

| முகவர் வகை | நியமன அலுவலர் |
|---|---|
| எஸ்.ஏ.எஸ் முகவர் | 2 (I) (II) (III) (IV) (V) |
| எம்பிகேபிஒய் முகவர் | 2 (I) (II) (V) |
| பி.பி.எப் முகவர் | 2 (V) |

**3. முகவராகப்பணியாற்றுபவர்களுக்குக்கிடைக்கும் கமிஷன் எவ்வளவு?**

| வ.எண். | முகவர் வகை | திட்டம் | மத்திய அரசு கமிஷன் | மாநில அரசு ஊக்கத்தொகை |
|---|---|---|---|---|
| 1. | எஸ்.ஏ.எஸ். | 5 ஆண்டு டைம் டெப்பாசிட் | 2.5% | 2.5% |
| 2. | | 1 ஆண்டு டைம் டெப்பாசிட் | 0.5% | 0.5% |
| 3. | | பிற திட்டங்கள் | 1% | 1% |
| 4. | பி.பி.எப் | பி.பி.எப். | 1% | 1% |
| 5. | எம்பிகேபிஒய் | ஆர்.டி. சி.டி.டி 25.000 வரை | 4% | 2% |
| | | ரூ.25,000-க்கு மேல் | 5% | 2.5% |

**நன்றி: 'சேமிப்புச் செய்தி'**

---

பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன்.

இம்மாவட்டத்து மகளிரின் வளர்ச்சிக்கு, இந்த அனைத்து மகளிர் காவல் நிலையம், ஒரு மைல் கல்லாகவும், ஒரு தூண்டுகோலா கவும் அமையும், என்று நம்புகிறேன்.

ஒரு தியாக மனப்பான்மை யுடன், தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையெல்லாம் தாங்கிக் கொண்டு, நெஞ்சில் பாரத்தைச் சுமந்து கொண்டு, தங்கள் குறை களுக்குத் தீர்வு காண, இந்தக் காவல் நிலையத்தை நாடிவரும் தாய்மார் களை; இங்கு பணிபுரியும் ஆய்வாள ரும், பெண் காவலர்களும், தங்கள் உடன்பிறவாச் சகோதரிகளாகக் கருதி, ஒரு சகோதர வாஞ்சை யுடனும், சேவை மனப்பான்மை யுடனும், செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ் வாறு அவர்கள் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

இந்த அனைத்து மகளிர் காவல் நிலையம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டப் பெண் களின் வளர்ச்சிக்கு, ஒரு ஊன்று கோலாக, உதவும் கரமாக அமையும் என்ற எனது எதிர்பார்ப்புகளைத் தெரிவித்து, இவ்விழாவினைச் சிறப் பாக ஏற்பாடு செய்துள்ள, காவல் துறை அலுவலர்கள் அனைவருக் கும், எனது மனமார்ந்த பாராட்டு தல்களைத் தெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன்''.





# கண்பார்வையற்ற இளநிலைப் பட்டதாரிகளுக்கு வேலை!



படித்த மற்றும் பட்டதாரி கண்பார்வையற்றவர்கள் தங்களுடைய பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்காக உண்ணாவிரதத்தை மேற்கொண்டதை அறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உடனடியாகக் கண்பார்வையற்றவர்கள் சார்பில் அவர்கள் பிரதிநிதிகளை வந்து சந்திக்குமாறு கூறினார். அதன்படி, 9.2.94 அன்று காலை 10 மணி அளவில் கண் பார்வையற்றோர் சார்பில், கண்பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் திரு சாந்தலிங்கம் மற்றும் சங்கப் பிரதிநிதிகளான திரு புவனேஸ்வரன், திரு மருதராஜ் ஆகியோர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை வந்து சந்தித்து, தங்கள் கோரிக்கைகளை எடுத்துக் கூறினார்கள்.

அரசுப் பணியில் கண்பார்வையற்றவர்களுக்கு எனச் சில விழுக்காடுகள் ஒதுக்கப்பட்டிருந்தாலும் 1991-லிருந்துதான் அந்த அரசு ஆணையை முழுமையாகச் செயல்படுத்தி வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது என்றும் அதற்கு முன்பு சில ஆண்களாக அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தரப்படவில்லை என்ற காரணத்தினால் 50-க்கு மேற்பட்ட கண்பார்வையற்றோர் ஆசிரியர்களுக்கான படிப்பினை முடித்து, பணி வாய்ப்பு கிடைக்காமல் வேலையின்றி அவதிப்படுவதாகவும் அவர்கள் அனைவருக்கும் வேலை வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தனி நடவடிக்கை எடுத்து அவர்கள் கோரிக்கையைத் தீர்க்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆசிரியர் படிப்பு முடித்து வேலை இல்லாமல் இருக்கின்ற கண்பார்வையற்ற இளநிலை பட்டதாரி ஆசிரியர்கள் 50 பேருக்குப் பணி இடங்களை ஏற்படுத்திக் கொடுத்து, பணியில் அமர்த்துவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தார்.

கண்பார்வையற்றோர் சார்பில் அவர்களது பிரதிநிதிகள் மற்றொரு கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வரிடம் வைத்தார்கள். தற்போது தமிழ்நாடு தேர்வாணைக் குழு (T.N.P.S.C.) நடத்தி வரும் தேர்வுகளில் மற்றவர்களின் துணை கொண்டு தேர்வு எழுதும் (Scribe System) முறை கண்பார்வையற்றவர்களுக்குச் சாதகமாக இல்லை என்றும், 'பிரெய்லி'(Brille) முறையில் தேர்வுகளை நடத்தி, பணியிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் கோரிக்கையை விடுத்தார்கள். அவர்கள் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவுடன் கலந்தாலோசித்து கண்பார்வையற்றோர்கள் 'பிரெய்லி' (Braille) முறையிலேயே தேர்வு எழுதுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்று கூறினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தங்களுடைய நீண்டநாள் கோரிக்கைகளைக் கனிவோடு கேட்டு வெகு விரைவில் தீர்த்து வைத்தமைக்குக் கண்பார்வையற்றோர்கள் சார்பில் தங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். இதுவரை கவனிப்பாரற்று அநாதையாக இருந்த தங்களுக்கு முழு ஆதரவையும் கொடுத்து அன்போடு நடத்தி, தங்களது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கண்பார்வையற்றோர்கள் எந்த நாளும் மறக்கமாட்டார்கள் என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்தச் சந்திப்பின்போது மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி புலவர் இந்திரகுமாரி அவர்களும், தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன் அவர்களும், மற்றும் சமூகநலத்துறைச் செயலாளர் திரு ஆர்.கிருபாகரன், சமூகநலத்துறை இயக்குநர் திரு கே. தீனதயாளன் ஆகியோரும் உடன் இருந்தார்கள்.



கன்னியாகுமரி மாவட்டத்தில்:

# மாவீரர் நேதாஜிக்கு மாபெரும் விழா!

இந்திய மண்ணில் பிரிட்டிஷ் ஆட்சியாளரை எதிர்த்து இயக்கங்களை நடத்தியவர் பலர். ஆனால், அந்த ஆட்சியை நேரடியாக எதிர்க்கத் துணிந்தோர் இருவரே. ஒருவர் வ.உ. சிதம்பரனார். மற்றொருவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், மரபுநிலையில் வங்கத்தினராயினும் அவர் பிறந்தது வங்கமன்று. 1897-ஆம் ஆண்டு ஜனவரி 23-ஆம் நாள் ஒரிசாவில்தான் பிறந்தார். தாயார்-பிரபாவதி அம்மையார், தந்தை-ஜானகிநாத போஸ்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தரைப்படையையும், கடற்படையையும், விமானப் படையையும் திரட்டி பிரிட்டிஷாரைப் போர்க்களத்தில் எதிர்த்த மாவீரர்.

அன்னாருக்கு விழா எடுத்துச் சிறப்பிக்கும் வகையிலே, தமிழகத்தில் முதன்முறையாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 98-வது பிறந்த நாள் விழாவினை மாநில அளவிலான விழாவாகச் சிறப்புற நடத்திட உத்தரவிட்டார். அதனடிப்படையில், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 98-வது பிறந்த நாள் விழா, கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் 19.2.1994 அன்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் சீரோடும், சிறப்போடும் நடைபெற்றது.

இவ்விழாவுக்கு மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர், திரு. மு. தென்னவன் அவர்கள் தலைமை வகித்துத் தலைமையுரையாற்றினார். அவர் பேசும்போது, "நம் நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டுத் தனது வாழ்க்கையை நாட்டுக்காக அர்ப்பணித்தவர்களைப் பெருமைப்படுத்தவும், இளைய தலைமுறைகள் அவரைப்பற்றி அறிந்து கொள்ளும் நோக்கத்தோடும் இந்த விழா கொண்டாடப்படுகிறது. இவ்விழா– முதன்முதலாக மாநில அளவிலான விழா நாகர்கோவிலில் நடத்தப்படுகிறது'' என்று கூறினார்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்து மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கு. லாரன்ஸ் அவர்கள் பேசியதாவது:

"தேசியத் தலைவர்களுக்கு விழா எடுப்பது இந்த அரசு மட்டும்தான். சுபாஷ் சந்திரபோஸைப் போன்றவர்கள் இன்று நாட்டுக்குத் தேவை'' என்று குறிப்பிட்டார்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர், திரு. அம்புஜ் சர்மா அவர்கள் விளக்க உரையாற்றினார். செய்தி மக்கள் தொடர்புத் துறை, இணை இயக்குநர் திரு. பா. செயப்பிரகாசம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். நேதாஜி



# நலிவுற்ற திருக்கோயில்களில் ஒரு காலப் பூசை!

## மாண்புமிகு முதல்வர் மேலும் நிதி வழங்கினார்

தமிழகத்தில் உள்ள நலிவுற்ற திருக்கோயில்களில் 'ஒரு காலப் பூசை' தொடர்ந்து நடைபெற வேண்டும்; அதற்கு அந்தந்த ஊர்ப் பொதுமக்களிடமிருந்து நன்கொடையாக ரூ.6,250-ஐ பெற்று, உடன் 'முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி'-யிலிருந்து ரூ.18,750-ஐ செலுத்தி, ஆக மொத்தம் ரூ.25,000-க்கு 'வைப்பு நிதி' ஒன்றை ஏற்படுத்தி, அதன் வட்டித் தொகையைக் கொண்டு, நலிவுற்ற திருக்கோயில்களில் 'ஒரு காலப் பூசை' நடைபெற ஏதுவாக 'ஒரு காலப் பூசை நிதி உதவித்' திட்டம் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் அறிவிக்கப்பட்டு, தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த இந்தத் திட்டத்தின் கீழ், சட்டமன்ற உறுப்பினர்களான திரு க. அர்ஜுனன் (வீரபாண்டி), சேலம் அ/மி. சித்தி விநாயகர் திருக்கோயிலுக்கும்; டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் (ஆரணி), ஆரணி அ/மி. வினாயகர் திருக்கோயிலுக்கும்; திரு சி தர்மலிங்கம் (அணைக்கட்டு) ஒடுகத்தூர் அ/மி. ஈஸ்வரன் ஆலயத்துக்கும்; டாக்டர் ஜெ. பரந்தாமன் (பேரணாம்பட்டு) பேரணாம்பட்டு அ/மி. பொன்நாச்சியம்மன் திருக்கோயிலுக்கும், திரு டி. சாத்தையா (ராஜபாளையம்) பரமக்குடி அ/மி. வலம்வந்த அம்பாள் ஆலயத்துக்கும்; திருமதி ப. சரஸ்வதி (கபிலர்மலை) அந்தியூர் அ/மி. சுப்பிரமணிய சாமி ஆலயத்திற்கும்; மற்றும் திருமதி கவிநிலவு தர்மராஜ் (மொடக்குறிச்சி) பவானி அ/மி. கரியகாளியம்மன் திருக்கோயிலுக்கும் நன்கொடையாக தலா ரூ.6,250 வீதம் மொத்தம் ரூ.43,750-க்கான காசோலையை அரசுக்கு வழங்கியுள்ளனர்.

இந்த 7 சட்டமன்ற உறுப்பினர்களால் தங்களது தொகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 7 திருக்கோயில்களுக்கும், 'ஒரு காலப் பூசை நிதியுதவி திட்டத்தின்' கீழ், தலா ரூ.25,000 வீதம் வைப்பு நிதி ஏற்படுத்த ஏதுவாக, 'முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி' யிலிருந்து ரூ.18,750 வீதம் மொத்தம் ரூ.1,31,250-ஐ மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அரசு நிதி உதவியாக வழங்க ஆணை பிறப்பித்துள்ளார்.

---

சுபாஷ் சந்திரபோஸ் அமைத்த இந்திய தேசியப்படையில் பணியாற்றி ஓய்வுபெற்ற கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தைச் சேர்ந்த 30-க்கும் மேற்பட்ட வீரர்களுக்கு மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் மு.தென்னவன் அவர்களும், மாண்புமிகு வன்த்துறை அமைச்சர் கு. லாரன்ஸ் அவர்களும் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

மாண்புமிகு வனத்துறை அமைச்சர், கு. லாரன்ஸ் அவர்கள் வேளாண்மைத்துறையின் சார்பில், விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்களையும், முன்னாள் படைவீரர் நலத் துறையின் சார்பில் 13 ஆயிரத்து 872 ரூபாய் மதிப்பில் 8 பேருக்கு உதவித் தொகைகளையும், தோவாளை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 35 ஆயிரத்து 500 ரூபாய் மதிப்பில் பல்வேறு உதவிகளையும் ரூ.1 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் வீட்டு மனைப்பட்டாக்களையும், சமூகநலத் துறையின் சார்பில் ரூ.34 ஆயிரம் மதிப்பில் திட்ட உதவிகளையும், தமிழக முதல்வரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் சுமார் 5 ஆயிரம் ரூபாய் மதிப்பில் உதவிகளையும், பிரதமரின் ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் மானியத்துடன் கூடிய கடனாக 35 ஆயிரம் ரூபாய் மதிப்பில் உதவிகளை வழங்கினார். சுமார் ரூ.2.75 இலட்ச ரூபாய் மதிப்புள்ள உதவிகள் வழங்கியதன் மூலம், 45 பயனாளிகள் பயனடைந்து உள்ளனர்.

இவ்விழாவில் திரு. எஸ். ஆஸ்டின், எம்.பி., டாக்டர் எம். அம்மமுத்துபிள்ளை, எம்.எல்.ஏ., கன்னியாகுமரி மாவட்ட பால்வளத் தலைவர், குமரி எஸ். ஸ்டீபன் உட்பட பலர் பேசினார்கள். கன்னியாகுமரி மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திரு. எஸ். தீனதயாளன் நன்றி கூறினார். விழா முடிவில் பள்ளி மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### இவர்கள்

ஆசிரியர்: கவியரசர் இளந்தேவன்

வெளியீடு:

வெண்ணிலவுப் பதிப்பகம்,
டி-44, தாடண்டர் நகர்,
சைதாப்பேட்டை, சென்னை-15.

பக்கம்:160 விலை:ரூ.30/-

**நா**டறிந்த நல்ல கவிஞர் - சிறந்த சிந்தனையாளர் கவியரசர் இளந்தேவன். இதயத்துக்கு இதமான - பதமான கவிதைகளை வழங்குவதில் பண்பட்டவரான இவரது இதயத்தில் இடம் பெற்றவர்கள் யார்? எவர்? அந்த அதிர்ஷ்டசாலிகளை 'அடையாளம்' காட்டுகிறார், தம் அழகுத் தமிழ்க் கவிதை வரிகளிலே!

காஞ்சிப் பெரியவர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., கர்மவீரர் காமராஜர், அண்ணல் அம்பேத்கர், புரட்சித் தலைவி, மறைமலை அடிகளார் இப்படி, பல துறை அறிஞர்களை அப்படியே படம்பிடித்துக் காட்டும் பாங்கு படித்து மகிழ்தற்குரியது. அரிய தொகுப்பு. அனைவரும் படிக்கலாம்.

—பி.வி.கிரி

# நூல் நயம்

### காந்தி எனும் காந்தம்

ஆசிரியர்: தங்கவயல் லோகிதாசனார்

வெளியீடு:

தங்கவயல் பதிப்பகம்
3/18, எஸ்.எம்.நகர்,
அன்புகாலனி, சென்னை-600 035.

பக்கம்:160 விலை:ரூ.25/-

**அ**ண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சுவைபடத் தொகுத்துக் கூறும் நூல். இந்திய விடுதலைக்காக அவர்பட்ட இன்னல்கள், இடையூறுகள் எல்லாம் இதில் விளக்கப் பட்டுள்ளன. அன்பையும், அகிம்சையையும் இரு கண்களாகக் கொண்டு வெள்ளையரை வெளியேற்றிய வீர வரலாற்றை இளைஞர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு, உதவும் இந்த நூல்.

—பி.வி.ஜி.

### ஒரு இலக்கியவாதியின் இனிய நினைவுகள்

ஆசிரியர்: டாக்டர் எஸ். குலசேகரன்

வெளியீடு:

அமிழ்தம் பதிப்பகம்,
15, முத்துப்பிள்ளை தெரு,
வ.உ.சி. நகர், வேலூர்-1.

பக்கம்:128 விலை:ரூ.15/-

**நூ**லாசிரியர் டாக்டர் எஸ். குலசேகரன் எழுத்தாளர் - பதிப்பாளர். பல துறை நூல்கள் எழுதிப் புகழ் பெற்றவர். எழுத்துப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் இவர், தம் தமிழிலக்கிய அனுபவங்களை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்.

—மறைமலை

### 'வீட்டுக்கு வீடு' (நாடகம்)

ஆசிரியர்: ந. ராமதாஸ்

வெளியீடு:

உதயா புக்சென்டர் பிரைவேட் லிட்.
6, சிவப்பிரகாசம் தெரு,
அண்ணாசாலை,
சென்னை-600 002.

பக்கம்:132 விலை:ரூ.18/-

**த**ண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது, குடி விளைவிக்கும் கேடு, ஊதாரித்தனமான வாழ்க்கையால் ஏற்படும் துன்பங்கள், குடியின் கேடுகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, மனிதாபிமான உணர்வுகளோடு பிறருக்குச் செய்யும் உதவிகள் என்று நல்ல அறிவுரைகளை நகைச்சுவையோடு எழுதி இருக்கிறார் ஆசிரியர்.

நகைச்சுவையோடு கூறும் எந்தச் செய்தியும் மனதில் ஆழப்பதிந்து நல்ல பாதிப்புகளை ஏற்படுத்துவது உண்மை. இந்நாடகத்தை சிறு, சிறு நாடகங்களாகப் பிரித்து, பள்ளி மாணவர்கள் நடிக்கப் பயன்படுத்தலாம். மிகவும் பயனுள்ள நாடகம்.

—குமார்

### 'ஆகாய வெண்ணிலாவே'

ஆசிரியர்: தேவிபாலா

வெளியீடு:

கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்
92, கங்கை அம்மன் கோயில் தெரு,
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:176 விலை:ரூ.24/-

**அ**வன் கண் எதிரிலேயே அவன் தாயைச் சீரழித்து அவளோடு, அவனையும் கொல்ல முயன்றவர்களை அவன் பழிவாங்குவது முதல்கதை. சகோதரியைக் கெடுத்துக் கொன்றவர்களைக் கண்ணன் பழிவாங்குவது இரண்டாவது கதை. கதைகளின் கரு சாதாரணமானவை தான். எழுத்தாற்றல் படிக்கத் தூண்டுகிறது.

எழுத்துப் பிழைகளைத் தவிர்த்திருக்கலாம். சம்பவங்களை மாற்றி, மாற்றிச் சொல்வதிலும் குழப்பம் ஏற்படுகிறது. பொழுது போக்காகப் படிக்கலாம்.

—ந. குமாரசாமி

### திரையில் பூத்த இறை எழில் மலர்கள்

ஆசிரியர்: த.நா. இலட்சுமிபதி

வெளியீடு:

ஜெயலட்சுமி பதிப்பகம்,
91, சாமிநாயக்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

பக்கம்:72 விலை:ரூ.10/-

**கா**ட்சிகளுக்கேற்பக் கவின்மிகு பாடல்களை நாம் திரைப்படங்களில் பார்த்து - கேட்டு மகிழ்ந்திருக்கிறோம். காதல், வீரம், தியாகம் முதலான தன்மைகளுக்கேற்பப் பாடல்கள் அமைவதுண்டு. அந்த வகையில், இறைவனைப் பற்றிப் பாடப்பெற்ற பாடல்களை ஒரு சேரத் தொகுத்துத் தந்துள்ளார் நூலாசிரியர். பாடல், பாடிய கவிஞர், பாடல் இடம் பெற்ற படம் ஆகிய தகவல்களும் கொடுக்கப்பட்டுள்ளன. நல்ல தொகுப்பு. படித்து மகிழலாம்.

—பி.வி.ஜி.

### ஆதிசங்கரரின் அருளுரைகள்

ஆசிரியர்: தங்கவயல் லோகிதாசனார்

வெளியீடு:

பாண்டியன் பதிப்பகம்,
20, சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு,
சென்னை-600 014.

பக்கம்:224 விலை:ரூ.30/-

**ஆ**திசங்கரரின் அருளுரைகள் அறிவுரைகளின் அரிய தொகுப்பாகும் இது. மனித வாழ்க்கை மேம்பட மகான் அருளிய போதனைகள், அனைவருக்கும் நன்மை பயப்பன. வாழ்க்கை நெறிமுறைகளை வார்த்தைகளால் வகுத்துத் (ஆதி சங்கரரின் இளமைப் பருவக் குறிப்புகளோடு) தொகுத்துத் தந்திருக்கிறார் நூலாசிரியர். படித்துப் பயன் பெறலாம்.

'கிரிஜா'

### அன்னை தெரசா வாழ்க்கை ஏட்டின் சில பக்கங்கள்:

# அகிலம் போற்றும் அன்னை தெரசா



அந்தச் சிறுமிக்குப் பன்னிரண்டு வயது தான் ஆகிறது.

அப்போதே தொண்டு செய்ய வேண்டும் என்கிற ஆசை அந்த இளம் மனத்தில் துளிர்த்தது.

அந்த அற்புதச் சிறுமி யார்?

அவர்தான் இன்று அகிலமே போற்றும் அன்னை தெரசா.

அன்னை தெரசா, அல்பேனியாவிலுள்ள, செகாப்ஜி என்னும் கிராமத்தில் 27.8.1910-இல் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் அக்னெஸ்கான்ஷா போஜாக்ஷா என்பதாகும்.

பெற்றோர் விவசாயப் பண்ணையொன்றில் பணியாற்றி வந்தார்கள்.

இளம்பருவத்திலேயே அன்னை தெரசாவுக்கு, இயேசு கிறிஸ்துவிடம் பக்தி ஏற்பட்டது. அவரது போதனைகள் அவரைக் வெகுவாகக் கவர்ந்தன.

அதேசமயம், இந்தியாவை அவர் நேசித்தார். இந்திய மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்கிற பேராசையும் அவரது இதயத்திலே இருந்து வந்தது. அந்த ஆசை, செடியாக வளர்ந்து, பூத்துக் குலுங்கியது.

அப்போது, வங்காள மக்கள் பயங்கர நோயினாலும், வறுமையினாலும் பீடிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்குச் சேவை செய்ய கிறிஸ்துவ மிஷனரிகள் அரும்பாடுபட்டனர். இதை அறிந்த அன்னை தெரசாவும் இந்தியா வந்து தொண்டு செய்யத் துடித்தார்.

தெரசாவுக்குப் பதினேழு வயது இருக்கும். அப்போதே, இயேசுநாதரிடம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார் அவர். ஏழை, எளியவர்க்குத் தொண்டாற்ற வேண்டும் என்கிற மனப்பான்மையும் அன்றே அவர் உள்ளத்திலே மலர்ந்தது.

தம் முடிவைப் பெற்றோரிடம் தெரிவித்தார் தெரசா. அவர்களோ, தடையேதும் சொல்லாமல், மகளின் முடிவை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். துள்ளிக் குதித்தார் தெரசா. ஆசாபாசங்களைத் துறந்து ஆண்டவன் அடிபணிந்து, மக்கள் சேவையே மகேசன் சேவையென உணர்ந்து, தன்னையே தியாகம் செய்தார். துறவியானார். அயர்லாந்து நாட்டில், டப்ளின் நகரில் இயங்கி வந்த லொரேட்டா கன்னிமார் மடத்திலே சேர்ந்தார்; ஓராண்டுப் பயிற்சியும் பெற்றார்.

1929-ஆம் ஆண்டு. பிறந்த மண்ணை விட்டு, பாரத மண்ணை மிதிக்க வரும் கன்னித் துறவியின் வாழ்க்கையிலே ஓர் பொன்னாள்!

ஆம். கல்கத்தா லொரேட்டா மடத்துக் கன்னிமார்களின் குழுவிலே தம்மை இணைத்துக் கொண்டார்.

1929-ஆம் ஆண்டில், கல்கத்தா புனித மேரியன்னை உயர்நிலைப் பள்ளியில் அன்னை தெரசா, புவியியல் ஆசிரியையாகப் பொறுப்பேற்றுக் கொண்டார். பள்ளிக்கு அருகே சேரிப் பகுதி ஒன்று இருந்தது. அங்கே ஏழை எளிய மக்கள் வறுமைப்பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தனர். அவர்களின் குழந்தைகள் உண்ணுவதற்கே உணவில்லாமல் தவித்தன. இவற்றையெல்லாம் கண்டு அன்னை தெரசா, வேதனைப்பட்டார்.

அன்னை தெரசா, பள்ளியில் பணியாற்றிக் கொண்டிருந்தாரே தவிர, அவர் நினைவெல்லாம், நித்தம் நித்தம் செத்துக் கொண்டிருக்கும் அந்தப் பிஞ்சு உள்ளங்களைப் பற்றியே இருந்தது.

அந்தக் குழந்தைகள், மற்றவர்களைப் போலப் படிக்க முடியாதா? சமுதாயத்தில் சமமாக வாழ இயலாதா? என்று எண்ணி எண்ணி ஏங்கினார்.

இந்தச் சூழலில், அதாவது 1944-ஆம் ஆண்டு, இப்பள்ளியின் முதல்வராக அன்னை தெரசா நியமிக்கப்பட்டார். பதவி உயர்ந்தாலும், ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பதிலேயே அவர் சிந்தனை இருந்தது. அவர் ஆசிரியையாக இருந்த போது, பள்ளிக் கல்வியோடு மனிதாபிமானத்தையும் சேர்த்துக் கற்பித்தார். உயர்வு தாழ்வு பேதமின்றி வாழ வேண்டும் என்கிற தத்துவத்தைப் போதித்தார். அதைச் செயலிலும் காட்ட முனைந்தார்.

அவரது சிந்தனையெல்லாம், புதிய இயக்கம் ஒன்றைத் தொடங்க வேண்டும் என்பதிலேயே இருந்தது. அதுவே அவரது இலட்சியமாகவும் இருந்தது. அந்த இலட்சியப் பயணத்தை நோக்கி அவர் வீறு நடைபோடுகிற சமயத்தில், அதற்குத் தடைகள் பல வந்தன. என்றாலும் அயரவில்லை அன்னை தெரசா. 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என்று முன்னேறினார்.

"அன்பின் பலன்தான் சேவை, சேவையில்தான் அமைதி கனியும். நேசத்திலும், தொண்டிலும், சமாதானத்திலுமே ஆண்டவன் சிரிப்பான்" என்பது அன்னையின் திருவாக்கு.

"ஏழையின் சிரிப்பிலே இறைவன் இயேசுவைத் தரிசிக்க முடியும்" என்பது

அவர் நம்பிக்கை. பேரறிஞர் அண்ணாவும், ''ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்'' என்றார்.

சமூகத் தொண்டாற்ற வேண்டும் என்னும் தம் எண்ணத்தைத் தெரிவித்த போது, மடத்துத் தலைவர்கள் அதற்கு இணங்கவில்லை. மடத்து விதிமுறைகள் அதற்கு இடந்தராது என்று கைவிரித்து விட்டார்கள். இந்த முடிவு அன்னை தெரசாவுக்கு அதிர்ச்சியைத் தந்தது. அதன் விளைவாக, உடல் நலம் குன்றியது. அதைக் கண்டு மடத்தில் உள்ளவர்கள் கண் கலங்கினர். அன்னை தெரசாவை ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி வற்புறுத்தினர்.

உடல் தளர்ந்தாலும், உள்ளம் தளராத அன்னை தெரசா அதற்கு உடன்படவில்லை. இறுதியில், உடன் உள்ளவர்களின் அன்பு வேண்டுகோளின்படி, டார்ஜிலிங் சென்று ஓய்வெடுத்துக் கொண்டார்.

ஓய்வுக்குப் பின் ஊர் திரும்பிய அன்னை தெரசா தாம் புதிய இயக்கம் தொடங்கப்போகும் செய்தியைச் சொல்ல, மதகுருவோ அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மெத்த வருந்தினார் அன்னை தெரசா. ஆசிரியப் பணியா? ஆதரவற்றோர்க்குச் சேவையா?

பலத்த சிந்தனையில், ஆழ்ந்தார் அவர்.

இதற்கிடையில், தனி இயக்கம் தொடங்க வேண்டுமென்றால், பெரிய மத குருவிடம் அனுமதி பெறவேண்டும் என்கிற நிபந்தனையும் இருந்தது. உடனே அன்னை தெரசா ரோமாபுரியில் உள்ள பெரிய மத குருவுக்குக் கடிதம் எழுதினார். மத குருவின் பதிலை அன்னை தெரசா மட்டுமல்ல, அனைவருமே ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

அன்னை தெரசாவின் பிரார்த்தனை வீண்போகவில்லை. மத குருவின் பதில் அவருக்குச் சாதகமாகவே வந்தது. அது கண்டு அளவிலா மகிழ்ச்சி அடைந்தார் அவர்.

இறைவனுக்கு நன்றி கூறினார். அப்போதே சேரிப்பகுதிக்குச் செல்ல வேண்டும் என்று துடித்தார்.

*1948*-ஆம் ஆண்டு, லொரேட்டா கன்னி மடத்துச் சீருடைக்குப் பதில், சாதாரண நீலவண்ணப் பார்டர் போட்ட வெள்ளைப் புடவையை அணிந்து கொண்டார். இன்று நாம் காணும் அந்த எளிய தோற்றம், அன்று ஆரம்பித்தது தான்!



ஏழை எளியோர் வாழ்வில் ஒளியேற்றி புதிய இயக்கம் தொடங்கிட அதற்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டார் அன்னை தெரசா. பாட்னாவில் மூன்று மாத மருத்துவப் பயிற்சி பெற்றுத் திரும்பினார்.

அன்னை தெரசா, எந்த இலட்சியத்துக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளத் துடித்தாரோ, அந்த நன்னாளும் வந்தது.

*1948*-இல் டிசம்பர் *21*-ஆம் தேதி அன்னை தெரசா, அந்த ஏழை எளியோர் குடியிருக்கும் சேரிப்பகுதிக்குச் சென்றார். அங்கு ஐந்து ரூபாய் வாடகையில் ஒரு குடிசையில் தங்கினார்.

அங்கிருந்த மக்களை அழைத்துப் பேசினார். உங்களுக்குத் தொண்டாற்ற என்னைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று அன்புடன் கேட்டுக் கொண்டார். அந்த அற்புதப் பெண்மணியை அனைவரும் அதிசயமாகப் பார்த்தனர். அன்னையின் இதமான வார்த்தைகள், அந்த ஏழை இதயங்களைக் கொள்ளை கொண்டன.

அன்னை தெரசா, முதலில் சேரிப் பகுதியைச் சுத்தமாக்கினார். சுத்தம் சுகந்தரும் என்பதைப் போதித்தார். சேரியிலுள்ள குழந்தைகளையெல்லாம் தன் குடிசைக்கு அழைத்தார். அவர்களுக்குக் கல்வி கற்றுத் தந்தார். மேட்டுக் குடிக் குழந்தைகளுக்குக் கல்வி கற்றுத் தந்தபோது, இந்த ஏழைக் குழந்தைகளுக்கும் கல்வி கற்றுத்தர முடியாதா என்று ஏங்கிய மனம் இப்போது, மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தது.

அன்னை தெரசாவின் முயற்சியில் பள்ளிக்கூடம் அமைக்க அனுமதி கிடைத்தது. திண்ணைப் பள்ளிக் கூடம்தான் அது. *21* குழந்தைகள் அந்தப் பள்ளியில் படித்தார்கள். குழந்தைகளுக்கு, பலகை, பலப்பம் வாங்கி கொடுத்தார். தெருத் தெருவாகச் சென்று இரக்கச் சிந்தை உள்ளவர்களிடம் துணிமணிகள், உணவுப் பொருள்கள் முதலானவற்றை வாங்கிக் கொண்டுவந்து குடிசைவாழ் மக்களிடம் கொடுப்பார். அவர்கள் வாழ்வே தம் வாழ்வு என்று கருதினார்.

*1931*-இல், செல்வி அக்னெஸ், 'தெரசா' ஆனார்.

*1949*-இல், தெரசா 'அன்னை' என்று அனைவராலும் அழைக்கப்பட்டார்.

*1950*-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் *7*-ஆம் நாள்.

எந்த இயக்கத்துக்காக ஏங்கித் தவித்தாரோ, அந்த இயக்கம் உதயமான நாள்!

யாருக்காக அழுதாரோ, அவர்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் நன்னாள்!

ஆம். அன்புக்காக ஏங்கும் இதயங்களோடு இணைந்து கொள்ளும் பொன் நாள்!

''அன்பின் தூதுவர்கள்'' என்னும் தொண்டு நிறுவனம் தொடங்கப்பட்ட நாள்!

பணிகளைக் கவனிக்க, ஒரு வீடு அவர்களுக்குத் தேவைப்பட்டது. நண்பர் ஒருவரின் முயற்சியில், மாடி வீட்டில் ஒரு சிறிய அறை வாடகைக்குக் கிடைத்தது. அதுவே அவர்களது செயலகமாக மாறியது. மலர்ந்த முகத்துடன் மக்கள் பணியிலேயே மூழ்கி இருந்தார் அன்னை தெரசா.

அன்னை தெரசா தொடங்கிய இயக்கத்திற்கு அனைத்துத் தரப்பிலிருந்தும் ஆதரவு பெருகியது. இயக்கம் மாபெரும் வளர்ச்சி கண்டது. மாடிவீட்டு அறை அதற்குப் போதவில்லை. பெரிய வீடு தேவைப்பட்டது. அரும்பாடுபட்டு அந்த வீட்டை விலைக்கு வாங்கினார்.

அன்னை தெரசாவால் ஊன்றிய சிறு வித்து, ஆலமரமாய் வளர்ந்தது. இந்தியாவின் பல்வேறு இடங்களில் இந்த இயக்கத்தின் கிளைகள் நிறுவப்பட்டன. ஏன், உலக நாடுகளிலும் கூட இந்த இயக்கம் உருவானது. இன்றளவும் அது சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது.

அன்னையின் இயக்கமெனும் அன்புக் குடிலிலிருந்து, புறாக்களெனத் தூதுவர்கள் பறந்து வந்தார்கள். அதன் விளைவாகப் பல மனித நேய மலர்கள் பூத்தன.

குப்பைத் தொட்டியில் வீசியெறியப்பட்ட வேண்டாத குழந்தைகளை, எனக்கு வேண்டும் என்று அன்புத் தொட்டிலில் இட்டு வளர்த்தார் அன்னை.

அதுவே, 'நிர்மல் இருதயம்' என்னும் 'குழந்தைகள் காப்பகம்'.

இப்படியொரு நோய் வந்ததே என்று அழுது கொண்டிருந்த தொழுநோயாளிகளைத் தொழுது வரவேற்று ஒரு 'சாந்தி நகரை' உருவாக்கியதும் அன்னைதான்.

'யாரும் அனாதை இல்ல. நான் இருக்கிறேன் சொந்தம் கொண்டாட!' என்று ஆதரவற்ற பெண்களுக்காக அமைக்கப்பட்டதுதான் 'பிரேம்தன்' என்னும் அடைக்கலம்.

அன்னையின் புனிதப் பணி -
குழந்தைகள் காப்பகமாக,
கல்விக் கூடங்களாக,
மருத்துவமனைகளாக,
மனநல இல்லங்களாக, மலர்ந்தன!

இவற்றால் பயன்பெறுவோர் பல்லாயிரவர். இதுவே அன்னை தெரசாவின் வெற்றிக்கு அடையாளச் சின்னங்கள்!

உழைப்புக்கும் உன்னதமான தொண்டுக்கும் உலகமே அன்னை தெரசாவைப் பாராட்டியது. விருதுகளையும், பரிசுகளையும் கொடுத்து மகிழ்ந்தது.

1962-இல் பத்மஸ்ரீ பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது. இதே ஆண்டில், பிலிப்பைன்ஸ் நாட்டின், 'ரேமென் மாக்ஸேஸே விருதும் பெற்றார். 1971-இல், போப் ஜான் சமாதானப் பரிசு, 'குட் சமாரிடன் அவார்டு' கென்னடி இண்டர் நேஷனல் அவார்டு ஆகியவை அவரை வந்தடைந்தன. 1971-இல், வாஷிங்டனில், கௌரவ டாக்டர் பட்டமும், 1972-இல், ஜவகர்லால் நேரு அவார்டும். இதே ஆண்டில், டெம்பிள்டன் பௌண்டேஷன் விருதும் கிடைத்தன.

பிரிட்டிஷ் பேரரசின் ஓ.பி.இ. விருதும் பெற்றார்.

17.10.1979-இல் உலக சமாதானத்திற்காக நோபல் பரிசு பெற்றார் அன்னை தெரசா. இந்திய நாட்டின் மிக உயர்ந்த விருதான 'பாரத ரத்னா' விருது 1980-இல் இவருக்கு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

அன்னையின் இலட்சியப் பயணம் தொடர்கின்றது.

அவர் பல்லாண்டு வாழ வாழ்த்துக்களைக் குவிப்போம்.

— பி.வி. கிரி

தமிழரசு

புதிய சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.72
அரையாண்டுச் சந்தா ... ரூ.36

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க



''எல்லா மாநிலக் கைவினைப் பொருட்களையும், ஒரே இடத்தில் பார்த்தால் எப்படி இருக்கும்?''

எல்லாவற்றையும் வாங்க வெண்டும் என்கிற ஆசை வருமல்லவா?

அத்தகைய கண்காட்சி ஒன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்தது.

இந்த எழில்மிகு கண்காட்சியில், கல், மண், காகித, கண்ணாடி, துணி, மரம், உலோகம் முதலியனவற்றால் ஆன கவின்மிகு கலைப் பொருட்கள் இடம் பெற்றிருந்தன.

அழகிய பொம்மைகள், திரைச் சீலைகள், அணிகலன்கள் இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

இந்தியாவின் பலவேறு மாநிலங்களிலுள்ள கைவினைஞர்களுக்குப் பெரிய அளவிலான சந்தை விற்பனை ஏற்படுத்தித் தரும் நோக்கத்துடன், தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் இந்த மாபெரும் கண்காட்சியை, கைவினைஞர்களின் வாழ்க்கைத்தர முன்னேற்றத்தை மட்டும் குறிக்கோளாக கொண்டு ஏற்பாடு செய்துள்ளது.

இந்தக் கண்காட்சியில் ஆந்திர, கர்நாடக, கேரளா, ராஜஸ்தான், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், காஷ்மீர், புதுடெல்லி, பாண்டிச்சேரி மற்றும் தமிழ்நாட்டிலிருந்தும் 150-க்கும் மேற்பட்ட கைவினைஞர்கள் தங்களது படைப்புக்களை நேரடியாக விற்பனை செய்கிறார்கள்.

இக்கண்காட்சியில், வாங்கும் பொருள்களுக்கு 10 சதவிகதம் சிறப்புத் தள்ளுபடி அளிக்கப்படுகின்றது. இக்கண்காட்சியில் ரூ.20 இலட்சம் அளவிற்குக் கைவினைப் பொருட்கள் விற்பனையாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக்கண்காட்சி 9.3.94 முதல் 20.3.94 வரை நடக்கிறது.

இந்த அற்புதமான கண்காட்சியை அனைவரும் கண்டுகளிக்கும் வண்ணம் தக்க ஏற்பாடு செய்திருந்தது, பூம்புகார்.

## திருப்பதி உட்படப் பல திருக்கோயில்களுக்கு ரூ.8 கோடி செலவில் தங்கம்-வெள்ளித் தேர்கள்!

## பூம்புகார் நிறுவனம் தயாரிக்கிறது

திருப்பதி மருதமலை, கபாலீஸ்வரர் கோயில்கள் உட்படப் பல கோயில் களுக்குத் தங்கத்தேர்-வெள்ளித் தேர்கள் ரூ.8 கோடி செலவில் பூம்புகார் நிறு வனம் தயாரித்து வருகிறது என்று இதன் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு ஒ.எஸ். மணியன் அவர்கள் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

''தமிழகத்தில் உள்ள பாரம்பரியம் மிகுந்த கைவினைப் பொருட்கள் முன் னேற்றத்தையும், கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றையும் கருத் திற் கொண்டு, 'பூம்புகார்' நிறுவனம், 1973-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

''இந் நிறுவனம் தனது விற்பனை மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளைத் தவிர, தமிழகத்திலும் மற்றும் அண்டை மாநிலங்களிலும் உள்ள திருக்கோயில் களுக்குத் தேவைப்படும் தங்கத் தேர், வெள்ளித் தேர், பித்தளை உண்டி யல்கள், பித்தளை மணிகள் மற்றும் வாகனங்களை உற்பத்தி செய்து வழங்கும் சிறப்புப் பணியையும் மேற்கொண்டு வருகிறது.

''அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில் இராமேஸ்வரத்திற்கு, இரண்டாம் பிரகார கட்டுமான வேலை, அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக் கோயில் மருதமலைக்கு தங்கத்தேர் வேலை, அருள்மிகு தேவி கருமாரி அம்மன் திருக்கோயில் திருவேற் காட்டிற்கு 'வெள்ளித் தேர் வேலை, அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூருக்கு 'தங்கத் தேர்', அருள்மிகு ஸ்ரீகண்டேஸ்வரர் சுவாமி திருக்கோயில் நஞ்சன்கூடு, கர்நாடகாவிற்கு வெள்ளித் தேர், அருள்மிகு ஸ்ரீகன்னிகா பரமேஸ் வரி திருக்கோயில், பெங்களூருக்கு வெள்ளித் தேர், உயரக் கருங்கல் மஹாராஜ ராஜேஸ்வரர் சிலை மலேசியாவிற்கு ஏற்றுமதி செய்ய மற்றும் இராமேஸ்வரம், திருவண்ணாமலை கோயில்களுக்குத் தேர் மொத்தமாக ரூ.8 கோடி செலவிடப்படுகிறது.''

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23






